# பரலோகத்தில் தேவதூதர்களின் பரவசம்

கிறிஸ்துவுக்குள் உங்கள் புதுவாழ்வின் நிறைவை அனுபவித்தல்

*David*
CERULLO

# THE ANGELS IN HEAVEN REJOICE!

Copyright © 2003 by David Cerullo

All Scripture quotations, unless otherwise indicated, are from the New American Standard Bible, copyright 1960, 1962, 1963, 1968, 1971, 1973, 1975, 1977 by the Lockman Foundation. Used by permission.
Scriptures marked KJV are taken from the Holy Bible, King James Version
All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form by means electronic, mechanical, photocopying, recording or otherwise, except for the inclusion of brief quotations in a review, without prior permission in writing from the publisher.

Published by
Inspiration Ministries
P.O. Box 7750
Charlotte, NC 28241
www.inspiration.org

Cover and interior design and composition:
Koechel Peterson & Associates, Inc., Minneapolis, Minnesota

Printed in the United States of America

என்னுடைய மகள் பெக்கியின் குறிப்பிடத்தக்க
எழுத்து உதவி இல்லாமல் இந்த புத்தகமானது
சாத்தியமாகி இருக்காது.

புதிய விசுவாசிகள் கிறிஸ்துவுடன் நடை போட
அவர்களை பெலப்படுத்தவும், தேவையானவைகளை
அவர்களுக்கு கொடுக்கவும் தன் அன்பை ஊற்றி

இந்த முக்கியமான புத்தகத்தை உருவாக்க
எனக்கு உதவு செய்த பெக்கிக்கு என் நன்றி !

# பொருளடக்கம்

முன்னுரை

பகுதி –1 குடும்பத்திற்கு நல்வரவு

அத்தியாயம் 1. தெய்வீக பரிமாற்றம் . . . . . . . . . . . . . . . . . . . 11

அத்தியாயம் 2. இந்த புதிய பாதை . . . . . . . . . . . . . . . . . . . . . . 25

அத்தியாயம் 3. இயேசு ஏன் சிலுவையில் மரிக்க வேண்டும் 39

அத்தியாயம் 4. வியப்பூட்டும் கிருபை . . . . . . . . . . . . . . . . . . . . 49

அத்தியாயம் 5. ஆவிக்குரிய வளர்ச்சி. . . . . . . . . . . . . . . . . . . . 57

பகுதி –2 இயேசுவில் நிலைத்திருத்தல்

அத்தியாயம் 6. தேவனுடைய வார்த்தையை வாசி . . . . . . . . . 83

அத்தியாயம் 7. தொழுது கொண்டு ஜெபம் செய். . . . . . . . . . 91

அத்தியாயம் 8. ஈடுபாடு கொள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 109

அத்தியாயம் 9. யுத்தத்தில் ஈடபடு. . . . . . . . . . . . . . . . . . . . . . . 119

அத்தியாயம் 10. கிறிஸ்துவின் வருகை . . . . . . . . . . . . . . . . . . 129

உன்னை உற்சாகப் படுத்த வேத வசனங்கள் . . . . . . . . . . . . . . 135

விளக்க உரை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 139

நூலாசிரியரை பற்றி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 143



# முன்னுரை

குடும்பத்திற்கு நல்வரவு நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக் கொண்டபோது பரலோகத்தில் உள்ள தேவதூர்கள் அங்கு பெரிய விருந்து வைத்தார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா ? அது முற்றிலும் உண்மை. பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. ஒரு பாவி தன் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்கும்போது தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷம் உண்டாயிருக்கிறது (லூக்கா 15 10)

உன் பாவங்களை மன்னிக்கவும் உன் இருதயத்தில் வந்து உன் ஆண்டவராக இருக்கவும் இயேசுவை நீ கேட்கும்போது நீ தேவனுடைய பிள்ளையாக மாறுகிறாய். தேவனுடைய குடும்பத்தின் ஒரு அங்கமாக மாறுகிறாய் ஒரு கிறிஸ்தவனாகிறாய்.

கிறிஸ்தவம் என்பது இன்னொரு மதம் அல்ல. அது ஒரு தனி நபர் ஜீவனுள்ள தேவனுடன் தனிப்பட்ட முறையில் ஏற்படுத்தி கொள்ளும் உறவாகும். தேவன் உண்மையில் இருக்கிறார். அவர் உயிரோடு இருக்கிறார். அவர் உன்னை அளவு கடந்து நேசிக்கிறார்.

அவர் உன்னை நேசிப்பதோடு உன்னை தனிப்பட்ட முறையில் அறிந்து வைத்திருப்பதினால் நீ அவரை அறியவும், நேசிக்கவும் விரும்புகிறார். நீ அவருடன் உறவை ஏற்படுத்தி கொள்ள உனக்கு உதவி செய்யும் படியாகவே பரிசுத்த வேதாகமத்தை உனக்கு தந்திருக்கிறார். இந்த முக்கிய காரணத்திற்காக நீ எப்பொழுதும் வாசிக்க கூடிய மிக முக்கியமான புத்தகமாக பரிசுத்த வேதாகமம் உள்ளது.

பரிசுத்த வேதாகமம் தேவனிடத்திலிருந்து உனக்கு நேரிடையாக வரும் வார்த்தையாக இருப்பதினால் நீ இந்த உலக வாழ்க்கையிலும்.

வர இருக்கும் மறுமையின் வாழ்க்கையிலும் வெற்றிகரமாக வாழ்வதற்கு உனக்கு உதவி செய்ய நிறைவான அற்புதமான சத்தியங்கள் வேதாகமத்தில் உள்ளதை நீ கண்டு பிடிக்கலாம். பரிசுத்த வேதாகமம் உன்னிடத்தில் என்ன பேச விரும்புகிறது என்பதை அறிந்து கொள்ள நீ வேதாகமத்தை உனக்காகவே வாசிக்கும்படி உன்னை உற்சாகப் படுத்துகிறேன். நீ தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது அவரிடம் உனக்கு உள்ள உறவு பெலனடைகிறதும் அல்லாமல், அவரையும், அவருடைய வார்த்தையை புரிந்து கொள்ளும் ஆற்றலும் அதிகரிக்கும்.

பரலோகத்தில் உள்ள தேவதூதர்கள் களிகூருகிறார்கள் என்று நான் எழுதி இருக்கும் சிறிய விளக்கமானது ஒரு கிறிஸ்தவனாக இருப்பதின் அர்த்தம் என்ன என்பதின் பொருளை வெளிப்படுத்துகிறது. நீ எப்படி கிறிஸ்தவனாக வாழ வேண்டும் என்பதை அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள உனக்கு உதவும் அடிப்படையான வழிகாட்டி நூலாகவே பரிசுத்த வேதாகமம் உள்ளது. நீ கிறிஸ்துவை பின்பற்றுவதற்கு எடுக்கும் தீர்மானத்தினால் உன் புதிய விசுவாசத்தின் சில முக்கியமான கட்டிட துண்டுகளையும் அதில் உள்ள வியப்பூட்டும் தனிச்சலுகைகளையும் நான் உன்னிடம் பகிர்ந்து கொள்ளுகிறேன்.

என்னுடைய ஜெபமானது நீ உன்னுடைய எஞ்சிய வாழ்க்கையில் தேவனுடைன் நடை போடுவதற்கு தெரிந்து கொள்ளும்போது “பரலோகத்தில் உள்ள தேவதூதர்கள் களிகூருகிறார்கள்” என்ற இந்த புத்தகமானது நீ தேவனுடன் ஒரு தனிப்பட்ட உறவை ஏற்படுத்தி கொள்ளுவதற்கான நடைமுறைக்குரிய நுண்ணறிவைப் பெற்றுக் கொள்ள உதவி செய்ய வேண்டுமென்பதே ஆகும்.



# பகுதி ஒன்று



குடும்பத்திற்கு

## நல்வரவு

அத்தியாயம் ஒன்று

# தெய்வீக பரிமாற்றம்

தேவன் உன்னை அதிகமாக
நேசித்த படியினால்
அவருடைய ஒறே பேறான
குமாரனாகிய
இயேசு கிறிஸ்துவை,
உன்னுடைய பாவங்களுக்குரிய
தண்டனைக்குறிய கிரயத்தை
செலுத்தும்படி
இந்த உலகத்திற்கு அனுப்பினார்.

தேவன் நமக்கு ஒரு வெகுமதியை தருகிறார். அதாவது ஒரு தெய்வீக பரிமாற்றத்தை பெற்றுக் கொள்ளுவதற்கான ஒரு வாய்ப்பை தருகிறார். அவர் நம்முடைய பாவத்திற்கு பதிலாக அவருடைய பரிசுத்தத்தை கொடுக்கிறார் நம்முடைய வியாதிக்கு பதிலாக அவருடைய சுகத்தை தருகிறார் நம்முடைய நித்திய மரணத்திற்கு பதிலாக அவருடைய நித்திய ஜீவனைத் தருகிறார். இந்த தெய்வீக பரிமாற்றத்தை ஒவ்வொரு மனிதனுக்கும் அவர் இலவசமான வெகுமதியாக தருகிறார்.

தேவன் மனித சமுதாயத்தை தன்னுடைய சாயலில் சிருஷ்டித்தபோது நம்மை குறைபாடில்லாத முழுநிறைவுள்ளவர்களாக படைத்தார் நாம் அவருடன் உறவாடவும், முழுமையான ஐக்கியம் கொள்ளவும் நம்மை அவர் சிருஷ்டித்தார்.

தேவன் நாம் வியாதியோடு இருக்க வேண்டுமென்று ஒருபோதும் அவர் தன் மனதில் எண்ணவில்லை நாம் பாவம் செய்ய வேண்டுமென்று அவர் ஒரு போதும் எண்ணவில்லை. ஆனால் நடைபெற்ற சில காரியங்கள் எல்லாவற்றையும் தலை கிழாக மாற்றிப்போட்டு விட்டது துக்கமான காரியம் என்னவென்றால் தேவன் முதன் முதலாக படைத்த மனிதனும், மனுஷியும் தேவனுக்கு கீழ்படியாமல் இருக்க தெரிந்து கொண்டதுதான்.

உன்னுடைய சொந்த வாழ்க்கையின் அநுபவத்திலிருந்தே உன்னுடைய ஒவ்வொரு செயலுக்கும் தெரிந்து கொள்ளுதலுக்கும் எடுத்த தீர்மானங்களுக்கும் எபபொழுதும் ஒரு விளைவு எற்பட்டதை நீ அறிந்திருப்பாய் தேவனுக்கு கீழ்படிய மறுக்க ஆதாமும் எடுத்த தீர்மானமானது இந்த உலகத்திற்குள் பாவத்தையும் வியாதியையும் மரணத்தையும் கொண்டு வந்து விட்டது. வேதம் சொல்லுகிறது பாவத்தின் சம்பளம் (வெகுமதி, நஷ்ட ஈடு) மரணம் (ரோமர் 6:23)

## தேவன் இல்லையென்றால் நமக்கு நம்பிக்கை இல்லை

ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு கீழ்படியாமல் இருக்க தீர்மானம் எடுத்ததினால் இவ்வுலகில் பிறந்த நாமனைவரும் தேவனை விட்டு பிரிந்துவிட்டோம் அவர்கள் பாவம் செய்ய எடுத்த தீர்மானம் நம்மெல்லோரையும் நித்திய சரீர ஆவிக்குரிய மரணக் கண்டனத்துக்குரியவர்களாக்கிவிட்டது.

வேதம் கற்பிக்கிறது என்னவென்றால் நாம் ஒவ்வொருவரும் நம் இருதயக்கடினத்தினாலும் பாவத்தினாலும் தேவனை விட்டு பிரிந்துவிட்டோம் இதினிமித்தமாக

# மீட்புக்கிரயம் செலுத்துதல்

ஒரு பெற்றோரின் அன்புக் குழந்தையை யாராவது கடத்திக் ஷகாண்டு போய் விட்டால் நம்பிக்கையிழந்த பெற்றோர் கடத்தி சென்றவன் குழந்தையை விடுவிக்க எவ்வளவு பணம் கேட்டாலும் கொடுத்து விடுவார்கள். திருடப்பட்ட விலையேறப்பெற்ற ஒன்றை விடுவிக்க எந்த ஒரு மீட்புக் கிரயத்தையும் செலுத்த முன் வருவார்கள்.

தேவனைப் பொறுத்த வரையில் நாம் எல்லோரும் அவருடைய சிருஷ்டியாக இருக்கிறோம். நாம் அனைவரும் கடத்தப்பட்டோம் நாம் அனைவரும் தேவனுடைய எதிரியின் தீமைக்கு ஆளாகி விட்டோம். பிசாசு நம்மை திருடிவிட்டதும் அல்லாமல் நம் சொந்த பாவச்சங்கிலிகளைக் கொண்டே நம்மை கட்டி அவனுடைய அடிமைகளாக வைத்துக் கொள்ள எண்ணுகிறான் நம்மை நாமே விடுவித்துக் கொள்ளவோ அதற்கான விலைக்கிரயத்தை செலுத்தவோ முடியாது. நாம் சாத்தானாலும் நம்முடைய பாவ சுபாவத்தினாலும் பிடிக்கப்பட்டு முற்றிலும் உதவியற்ற நிலைமையில் இருந்தோம்.

தேவன் நம் அனைவரையும் தம் எதிரியின் கரத்தில் ஒப்புக் கொடுத்திருக்க முடியும் தேவன் நம்மை சிருஷ்டித்ததில் திருப்தியடைந்து பின்பு நாமே நம்மை தற்காத்துக் கொள்ளும்படியாக தனியே விட்டிருக்க முடியும் அவர் நம்முடன் நெருங்கிய ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள துடிப்பதினால் நம்மை விடுவிக்கும்படி அவர் தம் குமாரனை அனுப்பினார். இதுவே அவர் படைத்த மிருகங்களுக்கும் நமக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை வேறுபடுத்திக் காண்பிக்கிறது நாம் அவருடைய வெறும் சிருஷ்டிகளாக இருக்க அவர் விரும்பவில்லை ஆனால் நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்க வேண்டுமென்றும் பிதாவுடன் அன்பின் உறவு நடை போட வேண்டுமென்றும் விரும்புகிறார்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும்படி தேவக் குமாரனாகிய இயேசு கிறிஸ்து நம்முடைய விடுதலைக்காக தம்முடைய சொந்த இரத்தத்தை மீட்கும் கிரயமாக செலுத்தினார் என்பதே அந்த நற்செய்தியாகும். இயேசு சிலுவையின் மரித்ததின் முலம் உன்னுடைய என்னுடைய வாழ்க்கையின் மீட்புக் கிரயத்தை செலுத்தினார் நம்முடைய பாவங்கள் நம்மை கண்டனம் பண்ணினாலும் நாம் பெற வேண்டிய நித்திய மரணமாகிய தீர்ப்பை சரிக்கட்டும்படி ஈடு செய்யும்படி அவர் நம்மை விடுதலை செய்யும்படி நமது ஸ்தானத்தில் மரித்தார். நாம் இயேசுவை நம்முடைய இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக் கொள்ளும்போது நாம் நம்முடைய பாவங்களிலிருந்தும் பிசாசின் சங்கிலிக் கட்டுகளிலிருந்தும் மீட்பின் கிரயத்தைக் கொண்டு விடுதலையைப் பெற்றுக் கொள்ளுகிறோம்.

# இலவசமாக சிறையை விட்டு வெளியே வா

நீ இழைத்துக் கொண்டிருக்கிற குற்றங்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டு நீ சிறையில் அடைக்கப் பட்டிருப்பதாக கற்பனை செய்து கொள் இப்பொழுது நீ மரண தண்டனைக்கு உட்பட்டு, தூக்கிலிடப் படும்படியாக. மரண வரிசையில் நின்று கொண்டிருக்கிறாய் திடிரென்று யாரோ ஒருவர் உன்னுடைய ஸ்தானத்தில் மரண வரிசையில் நின்று கொண்டு உனக்கு பதிலாக தான் தூக்கிலிடப் படும்படியாக முன் வருகிறார் என்று நீ கேள்விப்படுகிறாய்.

இப்பொழுது நீ சிறையின் உள்ளே இருந்து தூக்கிலிடப் படுவதை எதிர்பார்ப்பாயா ? நிச்சயமாக கிடையாது. நீ விடுதலை கிடைப்பதை நினைத்து உள்ளப் பூரிப்பு அடைவாய். நீ சிறைச்சாலையை விட்டு மீண்டும் திரும்பிப் பார்க்காமல் வெளியே வருவாய்.

அப்படியே நீ கிறிஸ்தவன் ஆகும் போதும் இதேகாரியம்தான் சம்பவிக்கிறது. நீ மரணத் தீர்ப்புக்கு உட்பட்டு மரண வரிசையில் நின்று கொண்டு நீ பெற வேண்டிய தூக்கு தண்டயையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாலும் இயேசு நீ சிறையை விட்டு இலவசமாக வெளயேறுவதற்கான சீட்டை கொடுக்கிறார். உன்னை நித்திய மரணத்திலிருந்து விடுதலை செய்தவருக்கு மாத்திரம் மனதார நன்றி செலுத்தி விட்டு நீ திரும்பிபார்க்காமல் உன் பாவ சிறையை விட்டு தப்பி ஓடி விடலாம்.

ஒரு பாடல் இப்படியாக சொல்லுகிறது நாம் செலுத்தி தீர்க்க முடியாத கடன் நமக்கு இருந்தது. அவர் செலுத்த அவசியமில்லாத கடனை நமக்காக செலுத்தி தீர்த்தார் என்பதே நம்முடைய பாவங்களை போக்கிக் கொள்ளும்படியாக நாமே எடுத்துக் கொள்ளும் எந்த முயற்சிகளையும் தேவன் அங்கீகரியாதபடியினால் நாம் நம்மை மீட்டுக் கொள்ளும்படியாக எந்த விலைக்கிரயத்தையும் செலுத்த முடியாது. வேதாகமத்தில் ஏசாயா சொல்லுகிறார் நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம் எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல் இருக்கிறது. (ஏசாயா 64: 6)

“நீதி” என்கிற வார்த்தையின் அர்த்தம் என்னவென்றால் தேவனுக்குமுன்பாக சரியான நிலையில் நிற்பது என்பதாகும் நாமாகவே நம்மில் ஒருவரும் நீதிமான் கிடையாது. நம் பாவ செய்கைகள், நினைவுகளுக்காக நாம் தேவனுக்கு முன்பாக நின்று எதிர்த்து வாதாடவோ சாக்கு போக்கு சொல்லவோ நியாயமென்று நிருபிக்கவோ முடியாது. ஆனால் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரிந்தியர் 5: 21)

# எளிமையான சுவிசேஷம்

சுவிசேஷத்தின் வரலாறு மிகவும் எளிமையானது உன்னை சிருஷ்டித்த தேவனுடன் நீ உறவை ஏற்படுத்தி கொள்ள வேண்டும் என்று அது வலியுறுத்துகிறது. அது தேவனுடைய நியாயத்தீர்ப்பின்படி நீ பாவ குற்ற உணர்வுடையவன் என்பதை ஒப்புக் கொள்ளுவதாகும். உன் பாவங்களிலிருந்து உன்னை விடுவித்து கொள்ள நீ உதவியற்றவன் என்ற உண்மையை ஒப்புக் கொள்ளுவதாகும்.

உன்னுடைய பாவப் பிரச்சினைக்கு தீர்வு காண தேவனுடைய ஒரே பதில் இயேசு ஒருவரே. நீ அவரிடம் பாவ மன்னிப்பு கேட்டு அவரை உன் இருதயத்தில் வரும்படி அழைக்கும்போது அவரை உன் ஆண்டவராக ஏற்றுக் கொள்ளும்போது உன் பாவங்களும் தேவனுடைய நியாயத் தீர்ப்பாகிய மரணமும் உன்னிடத்திலிருந்து கிறிஸ்துவின் மிது கடத்தப் படுகிறது. இந்த பெரிய மாற்றம் ஏற்படும்போது உன்னை நீயே விடுவித்துக் கொள்ள உன் ஆற்றல் மீது வைத்துள்ள நம்பிக்கையை விட்டு விட்டு இயேசுவின் ஆற்றலை மாத்திரம் நம்புகிறாய்.

நீ கிறிஸ்துவை உன் வாழ்க்கையின் ஆண்டவராக ஏற்றுக் க்ஷகாள்ளும் போது அவர் உன் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் அதிகாரம் உடையவராக இருக்க அவரை அழைக்கிறாய். உன் பாவத்திற்கு பதிலாக அவருடைய நீதியை நீ ஏற்றுக் கொள்வதினால் நீ அவருடைய இரட்சிப்பை சுதந்தரித்து கொள்ளுகிறாய். இரட்சிப்பு என்றால் சுதந்திரம் அடைதல், விடுதலையைப் பெறுதல், பாதுகாக்கப்படுதல், சுகமாக்கப்படுதல், மற்றும் பாவம் வியாதி மரணத்திலிருந்து முழுமையான விடுதலையைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதாகும்.

# நீ இந்த பெரிய மாற்றத்தை பெற்றுக் கொண்டாயா?

உன் பாவங்கள் மன்னிக்கப்பட நீ இயேசுவை உன் வாழ்க்கையின் இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக் கொள்ளும் உன் முழு வாழ்க்கையின் முக்கியமான இந்த தீர்மானத்தை ஒரு வேளை நீ எடுத்திருப்பாய்.

நாம் உண்மையாகவே நம்பிக்கை அற்றவர்களாகவும் தேவனற்றவர்களாகவும் ஆகிவிட்டோம் நம் பாவங்களுக்கான தகுதியாக நாம் அநுபவிக்க வேண்டிய தண்டனையானது நித்திய மரணம் ஆகும்,

இப்படிப்பட்ட ஒரு நிலைமை நமக்கு ஏற்பட்டாலும் தேவன் நம்மிது வைத்த தமது மிகுந்த அன்பினிமித்தம் நம்முடைய உறவை அவருடன் புதுப்பித்துக் கொள்ளவும், நம்மை அவருடன் மீண்டும் ஐக்கியப் படுத்தவும், ஒரு திட்டத்தை ஏற்படுத்தினார். இது ஒரு எளிமையான திட்டமே. நம்முடைய ஸ்தாபனத்திலிருந்து நம்முடைய பாவங்களுக்காக தண்டனையை ஏற்று அநுபவிக்கும்படியாக தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்திற்குள் மனிதனாக அனுப்பினார்.

பூரிசுத்த ஆவியின் வல்லமையினால் இயேசு ஒரு கன்னிப் பெண்ணின் வயிற்றில் குழந்தையாக பிறந்து இவ்வுலகில் வந்தார் அவர் பாவம் இல்லாதவராக வாழ்ந்து சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டு சித்திரவதைப்பட்டு மரிக்கும் வரையில் சிலுவையில் தொங்க அனுமதிக்கப்பட்டார். இயேசு சிலுவையில் தொங்கினபோது உலக மக்கள் அனைவரின் பாவங்களுக்குறிய தண்டனையும் அவர் மீது சுமத்தப்பட்டது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட சமயம் பரிசுத்தமுள்ள தேவன் இயேசுவை விட்டு தன் முகத்தை திருப்பிக் கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் எல்லோரும் ஆச்சரியப்படும்படி அற்புதமாக மரித்து முன்று நாட்களாக அடக்கம் பண்ணப்பட்டிருந்த இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

நீ இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும் அவர் உன் பாவங்களுக்காக உன்னுடைய ஸ்தானத்தில் தண்டிக்கப்பட்டார் என்றும் விசுவாசித்தால், தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று நீ விசுவாசித்தால், இயேசுவை நீ உன் வாழ்க்கையின் இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக் காண்டால், நீ தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் முற்றிலும் கீழ்படிந்து நடக்க தெரிந்து கொண்டால் அப்பொழுது பரலோகத்தில் தேவனுடன் மகிமையான நித்திய வாழ்க்கையை அநுபவிக்கும் பாக்கியத்தைபெற்றுக் கொள்வாய்.

நீ உன்னுடைய சித்தத்தை தள்ளிவிட்டு அவருடைய சித்தத்திற்குள் வருகிறாய் தேவன் இல்லாத நித்திய தண்டனையை வெறுவதற்கு பதிலாக நித்திய ஜீவனை பரலோகத்தில் பெற்றுக் கொள்ளுகிறாய். பயம், ஏக்கம், கவலை நிறைந்த வாழ்க்கைக்கு பதிலாக எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நிறைந்த வாழ்க்கையை பெற்றுக் கொள்ளுகிறாய்

மற்றொரு பக்கம் ஒரு வேளை நீ தேவனுடைய இலவசமான வெகுமதியாகிய இரட்சிப்பை நீ பெற்றுக் கொள்ளாமலிருந்தால், ஒரு வேளை அவரை உன்னுடைய ஆண்டவராக ஏற்றுக் கொள்ளாமலிருந்தால் ஒரு வேளை இந்தப் பெரிய மாற்றத்தை நீ செய்யாமல் இருந்தால், நீ இப்பொழுது செய்ய முடியும்.

எப்படி ? இது மிகவும் சுலபமானது வேதம் சொல்லுகிறது என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் (ரோமர் 10: 9,10).

நன்றாக கவனிக்கவும் இது உன் வழியின் படியல்ல என்னுடைய வழியின் படியும் அல்ல ஆனால் தேவனுடைய வழியின்படியே இயேசு சொன்னார் நானே வழியும், சத்தியும், ஜீவனுமாக இருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14: 6) .

# நீ யாரை சேவிப்பாய் என்பதை தெரிந்து கொள்

சூவதம் சொல்லுகிறது பிதாவாகிய தேவன் நம்மை அவர் பக்கம் இழுத்துக் கொள்ளாவிட்டால் நாமே அவரிடத்தில் வர முடியாது ஒரு வேளை இயேசுவை உன் இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக் கொள்ளாமலிருந்தால் உன் இருதயத்தில் உள்ள வெறுமை நிரப்பப்படும்படியாக, இப்பொழுதே தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் உன் இருதயத்தை இயேசு கிறிஸ்துவினிடத்தில் இழுப்பதை நீ உணருவாய்.

தேவன் உன்னை அளவு கடந்து நேசிக்கிறார் அவர் உன்னிடத்தில் பகிர்ந்து கொள்ளும்படியாக அற்புதமான ஆசிர்வாதங்களை வாக்குத்தத்தங்களை வெகுமதிகளை வைத்துள்ளார். நித்திய காலமாக அவர் குடும்பத்தின் அங்கத்தினராக இருக்க உன்னைத் தெரிந்து கொண்டு இருக்கிறார். ஆனால் இப்பொழுது நீ அவரை தெரிந்து கொள்ள வேண்டும். உன் மனதின் தீர்மானத்தை அவர் எடுக்க மாட்டார் அல்லது அவரை தெரிந்து கொள்ள அவர் உன்னை வலுக்கட்டாயம் செய்ய மாட்டார் ஒரு வேளை உனக்கும் அவருக்கும் இடையில் 100 அடிகள் இருந்தால் 99 அடிகளை அவர் எடுத்துவைத்து கடைசி ஒரு அடியை எடுக்கும் படியாக உன்னிடம் விட்டு விடுவார்.

நீயே உன் சொந்த தீர்மானத்தை எடுக்கும்படியான சுதந்திரத்தை உனக்கு தந்திருக்கிறார் நீ உன்னையா ?அல்லது தேவனையா ? யாரை சேவிக்கப் போகிறாய்? என்பதை தீர்மானிக்க வேண்டும். உன் ஆண்டவராக இருக்கும்படி இயேசுவை நீ கேட்பாயா ? இயேசு உன் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் அதிகாரம் உடையவராயிருக்கும்படி இப்பொழுதே இந்த தீர்மானத்தை எடுப்பாயா ? நீ தேவனையும், அவருடைய குமாரனையும் தெரிந்துகொள்ளும்போது அவருடைய வல்லமையையும், பிரசன்னத்தையும், சமாதானத்தையும் உன் வாழ்க்கையில் அனுபவிப்பாய்.

# பெரிய அற்புதம்

உலகிலேயே பெரிய அற்புதமாகிய அற்புத இரட்சிப்பை நீ பெற்று அநுபவிக்க விரும்பினால் இப்பொழுதே பெற்றுக் கொள்ளலாம் உன் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னிக்கும் படியாக இயேசுவை உன் வாழ்க்கையில் வரும்படியாக அழைப்பாயாக. அவர் உன் கடந்த வாழ்க்கையை அகற்றும் படியாகவும் உன் வாழ்க்கையின் ஆண்டவராக இருக்கும்படியாகவும் கேள். பின்பு தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்தில் விசுவாசி இது அவ்வளவு சுலபம்.

இப்பொழுதே நீ இந்த ஜெபத்தை என்னுடன் சேர்ந்து ஜெபிப்பாயா ?

அன்புள்ள இயேசுவே

நான் ஒரு பாவி என்பதை அறிவேன் என் பாவங்களை தயவாக மன்னித்து என் இருதயத்தை கழுவி பரிசுத்தப் படுத்தும். நீர் எனக்காக சிலுவையில் மரித்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

கர்த்தராகிய இயேசுவை என் இருதயத்தில் ஆண்டவரென்று விசுவாசித்தால் நான் இரட்சிக்கப்படுவேன் என்று வேதம் சொல்லுகிறது. இப்பொழுதே இயேசுவே நீர் ஆண்டவரென்றும், தேவன் உன்னை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்றும் என் இருதயத்தில் விசுவாசிக்கிறேன்.

துயவுசெய்து என் இருதயத்தில் வந்து வாசம் செய்யும். வந்து என் வாழ்க்கையின் ஆண்டவராக இரும் உம்மோடு நெருங்கி நடக்கவும்.

என் மீதமுள்ள வாழ்க்கையில் உமக்காக வாழவும் எனக்கு கற்றுத் தாரும் என் வாழ்க்கையை இரட்சித்ததற்காகவும் நித்திய காலமாக உம்முடன் பரலோகத்தில் வாழும்படியான வாய்ப்பை தந்ததற்காவும் உமக்கு நன்றி! ஆமென்.

இந்த ஜெபத்தை செய்திருப்பாயேன்றால் இப்பொழுது இயேசுவை உன் இரட்சகரென்று விசுவாசிப்பாய் என்றால் நீ புதிய வாழ்க்கைக்குள் மறுபடியும் பிறந்திருப்பதும் அல்லாமல் தேவனுடைய வியப்பூட்டும் கிருபையினால் இரட்சிக்கப்பட்டும் இருக்கிறாய். இப்பொழுதே பரலோகத்தில் உள்ள தேவத்தூதர்கள் எழுத்தின்படி உன் மீதும், உன் இரட்சிப்பினித்தமும் களிகூருகிறார்கள். தேவனுடைய குடும்பத்திற்குள் உங்களை வரவேற்கிறோம்.

கிறிஸ்துவை பின்பற்றுவதற்கு நீ எடுத்த தீர்மானத்திற்காக நான் அதிக சந்தோஷப்படுகிறேன் நீங்கள் ஏறெடுத்த அந்த சிறிய ஜெபத்தின் முலம் உங்கள் பெயரானது வேதம் கூறுகிற விசேஷப் புஸ்தகமாகிய ஆட்டுக்குட்டியானவரின் ஜீவப்புஸ்தகத்தில் இப்பொழுதே எழுதப்பட்டுவிட்டது. யாரெல்லாம் கிறிஸ்துவை தங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய பெயர்களை எல்லாம் இந்தப் புஸ்தகம் உள்ளடக்கி உள்ளது (வெளி 3:5) உங்கள் இரட்சிப்பை நித்திய காலமாக உறுதிப் படுத்தும்படியாக தேவனே உங்கள் பெயரை தம்முடைய புஸ்தகத்தில் எழுதி விட்டார். இப்பொழுது நீ தேவனுடைய பிள்ளையாக மாறிவிட்டாய்.

## உன்னைக் குறித்த தேவனுடைய திட்டம்

சூவதம் சொல்லுகிறது நீர் என் உள்ளநிதிரியங்களை கைக்கொண்டிருக்கிறீர். என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர் நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்ட படியால் உம்மைத் துதிப்பேன். (சங் 139:13, 14) தேவன் உன்னை அளவு கடந்து நேசிக்கிறார். அவர் உன்னுடைய வாழ்க்கைக்காக ஒரு சிறந்த திட்டத்தை வகுத்து வைத்துள்ளார். தேவன் உனக்காக வைத்துள்ள இந்த திட்டம் நீ செழிப்படைவதற்காகவேயன்றி உன் தீமைக்காக அல்ல, நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கவும் நல் நம்பிக்கையை தரவுமே இந்த திட்டம். (எரேமியா 29:11) தேவன் உனக்காக மேன்மையான காரியங்களை வைத்துள்ளார்.

நீ இந்த சாகசமான பரபரப்பூட்டுகிற பிரயாணமாகிய இந்த புதிய வாழ்க்கையை அவருடன் ஆரம்பிக்கும்போது, நீ அவருடன் அதிக நேரத்தை செலவழிக்கும்படி உன்னை உற்சாகப் படுத்துகிறேன். அவருடைய பிரசன்னத்தில் அமைதியாக உட்கார்ந்து, அவருடைய மெல்லிய சத்தம் உன்னுடன் பேசுவதை கேள்.

தினிமும் நீ அவருடைய வேதத்தை வாசிப்பது அவர் சத்தத்தை நீ கேட்பதற்கு உதவி செய்யும் ஒரு ஆட்டு மந்தையை நடத்தி செல்லுகிற மேய்ப்பனாக தன்னை குறிப்பிடுகிற இயேசு சொல்லுகிறார் ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால்அவனுக்கு பின்செல்லும் (யோவான் 10: 4). அவருடைய சத்தத்தை கண்டுகொள்ள அவருடைய வார்த்தையை நன்றாக தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

வேத அறிவிலும் உன்னுடைய புதிய விசுவாசத்திலும் நீ வளரும்போது உன் மனதிலும் இருதயத்திலும் தேவனுடைய குரலை கேட்க கற்றுக் கொள்ளுவாய் வேத வசனங்களை புரிந்து கொள்ளும் ஆற்றல் உன்னில் வளரும்போது அவர் உனக்கு மிகப்பெரிய ஆறுதலையும் உன் வாழ்க்கைக்கான சரியான பாதையையும் காண்பிப்பார்.

தேவனுடைய குரலை நீ கேட்க் கற்றுக் கொள்ளும்போது உன் வாழ்க்கைக்கான திட்டங்களையும், நோக்கங்களையும் தேவன் வெளிப்படுத்துவார். உனக்காக தேவன் ஆயத்தப்படுத்தி வைத்துள்ள காரியங்களை கண்டு பயப்பட வேண்டாம் தேவன் உனக்காக வைத்துள்ள திட்டம் பரபரப்பான நல்ல திட்டமாகும்.

## நீ திணற வேண்டாம்

ஒரே நேரத்தில் தேவன் உன் வாழ்க்கைக்கான எல்லா திட்டங்களையும் உனக்கு காண்பிக்க மாட்டார். அவர் சொல்லுகிறார் அவருடைய வசனம் உன் கால்களுக்கு தீபமும், உன் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.(சங் 119:105) இதின் அர்த்தம் என்னவென்றால் ஆண்டவர் தன் அன்பின் வெளிச்சத்தையும் தன் வார்த்தையின் வெளிச்சத்தையும் உன் வாழ்க்கையில் உட்புகுத்தி அடுத்த அடியை எடுத்து வைப்பதற்கான சரியான காரியத்தை அறிந்து கொள்ள வேண்டியதை வெளிப்படுத்துவார் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் நீ அவரை நம்ப கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே விசுவாசம் ஆகும்.

ஏளிமையாக சொன்னால் விசுவாசம் என்பது உன் வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தம் என்னவென்பதை நீ விசுவாசிக்கறாயோ அதற்கு ஏற்றவாறு

முற்றிலும் கீழ்படிவதாகும் நீ விசேஷமாக அவருடன் புதிய நடைபோட ஆரம்பிக்கும்போது அவர் உன்னுடன் என்ன பேசுகிறார் என்பதை 100ரூ துல்லியமாக அறிந்து கொள்ள முடியாது. ஆனாலும் பரவாயில்லை அவருக்கு நீ கீழ்படிய விரும்புவதும் அவருடைய சத்தத்தை கேட்க நீ முயற்சி எடுப்பதும் அவரை அதிகம் பிரியப் படுத்துகிறது.

தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள்ளும் இயேசுவை உங்கள் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டு ஆரம்பித்துள்ள இந்த புதிய வாழ்க்கை நடைமேல் நடைபோடுகிற தினசரி புனித பிரயாணமாகும் தேவனிடத்தில் சேருங்கள் அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். (யாக்கோபு 4:8) என்று வேதம் சொல்லுகிறது அவர் நீ எந்த இடத்திற்கு செல்ல வேண்டுமென்று விரும்புகிறாரோ அந்த இடத்திற்கு செல்ல ஒவ்வொரு அடியாக வழி நடத்துவார். தேவன் உனக்ாக வைத்துள்ள திட்டமே சிறந்தது என்றும் அவர் வழிகள் மாத்திரமே சரியானது என்றும் நீ அறிந்து தைரியங் கொள்ள வேண்டும்.

## குயவனின் கரங்கள்

தேவன் உன் இருதயத்தை அறிந்திருக்கிறார் நீ அறிந்திருப்பதைக் காட்டிலும் அவர் உன்னைக் குறித்து அதிகம் அறிந்து வைத்திருக்கிறார். ஆகவே நீ அவரை முற்றிலும் நம்பவும் அவர் உன் வாழ்க்கையை உருவாக்க அவரை அனுமதிப்பதும் மிகவும் முக்கியமான காரியம்.

இந்த சத்தியத்தை விளக்கும்படியாக தேவன் வேதாகமத்தில் எரேமியா என்ற ஒரு மனிதனோடு பேசுகிறார் தேவன் எரேமியாவை பார்த்து ஒரு குயவனுடைய வீட்டிற்கு போ என்று சொன்னவுடன் எரேமியாவும் தேவனுக்கு கீழ்படிந்து செல்லுகிறான்.

அவன் போய் சேர்ந்தவுடன் அங்கு குயவன் திரிகையினால் வனைந்து கொண்டிருந்தான். ஆனால் குயவன் வனைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப் போயிற்று. ஆகவே அவன் அதை திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான். அப்பொழுதுதேவன் எரேமியாவை பார்த்து களிமண் குயவன் கையில் இருக்கிறது போல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள் என்றார்.(எரேமியா 18: 6)

ஒரு குயவன் இல்லாமல் களிமண்ணானது ஒரு உருவத்தை பெற்றுக் கொள்வது கடினம் களிமண்ணானது தன்னிலோ தனக்காகவோ எந்த நோக்கமும் உடையது அல்ல குயவன் அந்தக் களிமண்ணை

அச்சு வார்த்து அதற்கு ஒரு வடிவத்தை கொடுக்காத பட்சத்தில் அது தானாகவே குயவன் விரும்பும் வடிவத்தையோ, நோக்கத்தையோ பெற்றுக் கொள்ள முடியாது.

களிமண்ணானது அதற்குரிய குயவனுடைய திட்டத்தின்படி அச்சு வார்க்கப்பட்டு வடிவமைக்கப் பட்டாலும் அதின் நோக்கம் நிறைவேற்றப் படும்படி அது இன்னும் குயவனுடைய கரத்திற்குள் அடங்கி இருக்க வேண்டும். அந்தக் களிமண்ணை குயவன் ஒரு கூஜாவாக உருவாக்கினாலும் அது தானாகவே தண்ணீரை நிரப்பிக் கொள்ள முடியாது அந்த கூஜாவில் தண்ணீரை நிரப்புவதையும் அந்த தண்ணீரை வெளியேற்றுவதையும் குயவனே செய்ய வேண்டும்.

1907 ம் ஆண்டு அடிலெய்ட் போலார்ட் ‘‘என்பவர்‘‘ உம்முடைய சொந்த வழியின் படியே செய்யும் என்ற ஒரு அற்புதமான துதி பாடலை எழுதி உள்ளார். இந்த புகழ் பெற்ற தனிச்சிறப்பு வாய்ந்த பாடலின் ஒரு சில வரிகளை இங்கே தருகிறேன்.

ஊம்முடைய சொந்த வழியின்படியே செய்யும் ஆண்டவரே
உம்முடைய சொந்த வழியின்படியே செய்யும்.
நீர் குயவன், நான் களிமண்.
நான் சரணடைந்து காத்திருக்கையில்
உம் சித்தத்தின்படி என்னை அச்சு வார்த்து உருவாக்கும்.
உம்முடைய சொந்த வழியின்படியே செய்யும். ஆண்டவரே
உம்முடைய சொந்த வழியின்படியே செய்யும்
என்னை முற்றிலும் ஆட்கொண்டு ஆளுகை செய்யும்
எல்லோரும் கிறிஸ்து ஒருவரே என்னில் வாழுவதை
காணும்படி என்னை உம்முடைய ஆவியினால் நிரப்பும்.

உன்னை உருவாக்கின சிருஷ்டி கர்த்தருக்கு நீ சரண் அடைவதில் அர்த்தம் இருக்கிறதா குயவன் கரத்தில் உள்ள களிமண்ணை போல நீ அவருடைய கரத்தில் உருவாக்கப்படும்படி அடங்கியிரு தேவனை நம்பு வேதம் சொல்லுகிறது உங்களில் நற்கிரியைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவார். (பிலிப்பியர் 1:6)

இயேசு கிறிஸ்துவின் நாள் என்பது இயேசு இவ்வுலகத்தில் வந்து தம்மை பின்பற்றுகிறவர்களை தம்முடன் பரலோத்தில் இருக்கும்படி அழைத்து செல்லும் நாளை குறிக்கிறது. அந்த நாள் எவ்வளவு ஒரு மகிமையான நாள்.

( குறிப்பு: உன்னிடத்தில் வேதாகமம் இல்லாமல் இருந்தால் உடனடியாக நீ ஒரு வேதாகமத்தை வாங்கும்படி உன்னை உற்சாகப்படுத்துகிறேன். கிறிஸ்தவ புஸ்தக சாலைகள் வேதாகமப் புஸ்தகங்களை விற்பனை செய்கிறது. நன்றாக எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் நவீன மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட வேதாகமத்தை வாங்கி வாசி. நீ வேதாகமத்தை வாசிக்க ஆரம்பிக்கும்போது முதலில் யோவான் எழுதின சுவிசேஷத்திலிருந்து ஆரம்பி. இந்தப் புஸ்தகம் இயேசு யார் என்பதையும் அவருடன் உனக்கு ஏற்பட்டுள்ள புதிய வாழ்க்கையை குறித்தும் அதிகமாக கற்றுக் கூகாடுக்கும்.)

அத்தியாயம் இரண்டு

# இந்த புதிய பாதை

நீங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கீறீர்களா ? அல்லது மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா ? என்ற வார்த்தைகளை ஜனங்கள் பயன் படுத்துவதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா புதிய கிறிஸ்தவனாக இருக்கும் உனக்கு இந்த வார்த்தைகளின் அர்த்தம் ஒருவேளை உனக்கு புரியாமல் இருக்கலாம்.

மறுபடியும் பிறப்பது என்பது. நீ இரண்டாந்தரம் மாம்சத்தின்படி பிறப்பது அல்ல மறுபடியும் பிறப்பது என்பது ஆவிக்குரியப் பிறப்பைக் குறித்து பேசுகிறது. நீ கிறிஸ்துவுடன் கூட நடக்க ஆரம்பிக்கும்போது உன் புதிய வாழ்க்கை ஆரம்பிக்கிறது. நீ தேவனிடத்தில் ஜெபித்து பாவங்களை மன்னிக்கவும். அவர் உன் ஆண்டவராக இருக்கவும் கேட்கும்போது நீ அந்த புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கிறாய்.

ஹிந்த சத்தியத்தை விளங்கிக் கொள்ள கஷ்டப்பட்ட ஒரு மனிதன் வேதாகமத்தில் இருக்கிறான். அவன் பெயர் நிக்கொதேமு மற்றும் இயேசுவின் நாட்களில் அவன் யூத மதத்தலைவனாக இருந்தான்.

நிக்கொதேமு இயேசுவினிடத்தில் கேள்விகளுடன் வந்தபோது இயேசு அவனிடத்தில் ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்றார். நிக்கொதேமு அவரை நோக்கி ஒரு மனுஷன் முதிர்வயதாய் இருக்கையில் எப்படிப் பிறப்பான் ? ஆவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ ? ஏன்றான்.

இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும, ஆவியினாலும, பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என்றார். (யோவான் 3: 3, 6)

இயேசு ஆவிக்குரிய பிறப்பைக் குறித்து இங்கு விவரிக்கிறார். நீ மறுபடியும் பிறக்கும்போது தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் உன்னுடைய ஆவியில் புதிய ஜீவனை ஊதுகிறார். இப்பொழுது கிறிஸ்து உனக்குள் பிறக்கிறார்.

கிறிஸ்துவை பின்பற்றினவரும் ஆதித் திருச்சபையில் இருந்த வல்லமை யான தலைவராக இருந்தவருமான பவுல் இந்தக் கருத்தை விளக்கும்படி கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார். (கொலோசெயர் 1: 27)என்கிறார்.

நீ கிறிஸ்துவை உன் இருதயத்தில் வரும்படி அழைக்கும்போது அவர்

உன்னுடைய வாழ்க்கையின் ஒரு புது மலர்ச்சி வாய்ந்த ஆரம்பத்தைத் தருகிறார். உண்மையில் வேதம் உன்னை “புதிய சிருஷ்டி” என்று அழைக்கிறது.

இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின. **(2 கொரிந்தியர் 5: 17)** தேவனுடைய ஆவியானவரே உன் இருதயத்தில் வாழும்படி இப்பொழுது வந்து விட்டார். இதுவே சுவிசேஷத்தின் இரகசியமும், வியப்பூட்டுகிற காரியமுமாக இருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் நீ ஆரம்பித்துள்ள புதிய வாழ்க்கையானது உன் இயற்கை பிறப்பிற்கு ஒத்ததாகவே உள்ளது. உண்மையில் மாம்சரீதியாக பிறந்த ஒரு புதிய குழந்தைக்கும். ஆவிக்குரியரீதியின்படி பிறந்த ஒரு புதிய குழந்தைக்கும் ஒரு பெரிய ஒற்றுமை உண்டு.

ஒரு குழந்தை பிறக்கும்போது அக்குழந்தை வளர்ச்சியடையவும் உயிர் வாழவும் அநேகக் காரியங்கள் சம்பவிக்க வேண்டும். அக்குழந்தை போஷிக்கப்படவும் ஊட்டச்சத்து அளிக்கப்படவும் வேண்டும். உணவும்,போஷாக்கும் அளிக்கப்படாத பட்சத்தில் அக்குழந்தை சீக்கிரம் பட்டினி கிடக்க ஆரம்பித்து விடும்.

ஒரு குழந்தை வாழ்க்கையின் ஆடிப்படைத் தேவைகளுக்காக அது தன் பெற்றோரையே சார்ந்திருக்கும். அக்குழந்தை தன்னை பராமரித்துக் கொள்ள முடியாது யாராவது ஒருவர் அதற்கு உணவளிக்கவும் உடுத்துவிக்கவும் வேண்டும். யாராவது ஒருவர் அதனிடம் அன்பு செலுத்தவும் பாதுகாப்பளிக்கவும் வேண்டும். ஒரு குழந்தை ஆற்றித் தேற்றப்படவும் பாதுகாப்பாக இருக்கவும் அதற்கு அரவணைக்கும் அன்புக் கரங்கள் தேவையாக உள்ளது.

ஒரு குழந்தையின் பயங்கள் தணிவதற்கு அதற்குக் கனிவாக பாடும் குரல் அவசியம். கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்ட ஒரு குழந்தை வாழ முடியாது. ஒரு குழந்தை அன்பையும் பெற வேண்டும். பாசத்தைப் பெறாதக் பின்நோக்கி செல்லவும் வாழ்வதற்கான உறுதியையும் இழந்து விடும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். சுருங்கச் சொன்னால் குழந்தைகள் மிகவும் மென்மையானவர்கள்.

# ஆவிக்குரிய போஷாக்கு

இதே உண்மைகள் ஒரு புதிதாக பிறந்த ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஒப்பாக சொல்லலாம் ஆவிக்குரிய உட்கருத்தின்படி ஒரு குழந்தை கிறிஸ்துவனுக்கு உணவும், பாதுகாப்பும், உடையும், நடபும், கவனிப்பும், அன்பும் தேவையாக உள்ளது. சரீர வளர்ச்சி ஒரு இரவில் எப்படி முடியாதோ அதே வண்ணம் ஆவிக்குரிய வளர்ச்சியும் ஒரே இரவில் ஏற்பட முடியாது. அதற்கு கால அவகாசம் தேவை.

புதிதாக பிறந்த ஒருவன் எப்படி ஆவிக்குரிய போஷாக்கைப் பெற்றுக் கொள்ளுகிறான் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதின் மூலமும் அதற்குக் கீழ்படிவதின் மூலமே எப்படி புதிதாக பிறந்த குழந்தை வளர, முன்னேற அதற்கு அடிக்கடி உணவு ஊட்டப்பட வேண்டுமோ, அதைப் போல நீயும் நல்ல கிறிஸ்தவனாக செழித்தோங்க வளர உன் ஆவிக்கு அடிக்கடி உணவளிக்க வேண்டும். பரிசுத்த வேதாகமம் ஜீவ அப்பமாகவும் அதிலுள்ள வார்த்தைகள் உன் ஆத்துமாவிற்கு உணவாகவும் இருக்கிறது. நீ வேதத்தை வாசிக்கும்போது அவருடைய வார்த்தைகளை புரிந்து கொள்ள தேவன் உனக்கு உதவி செய்யும்படி அவரிடத்தில் ஜெபிக்கும்போது கேட்க வேண்டும்.

நீ தேவனுடன் பேசும்போதும் நேரம் எடுத்து அவரை ஆராதிக்கும்போதும் கூட உன்னுடைய ஆவி போஷிக்கப்படும். அத்துடன் பரிசுத்த வேதாகமத்தின் முழு சத்தியத்தையும் விசுவாசிக்கக் கூடிய வேத ஆராய்ச்சி குழுவினருடன் அல்லது வேதத்தை விசுவாசிக்கிற சபையின் விசுவாசிகளுடன் ஐக்கியம் வைத்துக் கொள்ள வேண்டும் விசுவாசிகளின் ஐக்கியித்தில் நீ அன்பையும், ஆதரவையும், பாதுகாப்பையும், புகலிடத்தையும் காண்பாய். சபையானது முழு நிறைவடையாத நிலைமையில் இருக்கும்போதும் தேவனுடைய திட்டம் என்னவென்றால் நீ அவருடைய பிள்ளைகளின் ஐக்கியத்தில் வளர வேண்டும் என்பதாகும்.

ஒவ்வொரு நாளும் ஒரு குழந்தைக்கு பல புதிய பொருட்கள் முகங்கள் ஒலிகள் நிறங்கள் மற்றும் பல அசைவுகளும் கற்றுக் கொள்ளும் அனுபவங்களாக மாறுகிறது. புதிய உணவுகளையும், இடங்களையும், வார்த்தைகளையும், யோசனைகளையும் எதிர்பாராமல் அக்குழந்தை சந்திக்கிறது வாழ்க்கை என்பது வளருவதற்கும், கற்றுக் கொள்ளுவதற்குமான நடைமுறை என்பதை குழந்தை கற்றுக் கொள்ளுகிறது.

இந்த எல்லா அடிப்படை உண்மைகளும் ஆவிக்குரிய உலகத்திற்கும் ஏக மாக பொருந்தும். உன் புதிய வாழ்க்கையும், கிறிஸ்துவுடன் உள்ள உன்னுடைய உறவும் நீ வளருகிறதற்கும், கற்றுக் கொள்ளுகிறதற்கும் வழி முறையாக உள்ளது நீ அவருடன் வைத்துள்ள உறவானது நீ சந்திக்கிற ஒவ்வொரு அனுபவத்தின் மூலமும் கற்றுக் கொள்ளுகிய ஒவ்வொரு பாடத்தின் மூலமும் மேலும் வலுவடையும்.

# இந்த பிரயாணம்

*நீ தேவனுடன் கொண்டுள்ள உறவு ஒரு பிரயாணம் என்பதை நினைவில் கொள் தேவன் உனக்காக திட்டம் பண்ணி வைத்துள்ள எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள இது கற்றுக் கொள்ளுவதற்கும், வளருவதற்கும், வழிமுறையாக உள்ளது. நீ தேவனுடன் எவ்வளவுக்களவு அதிகமான நேரத்தை செலவழிக்கிறாயோ அவ்வளவுக்களவு நீ அவருடைய பரிபூரணமான சாயலுக்கொப்பாக மறுரூபமடைவதை காண்பாய். நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை போல் மாற வேண்டும் ...... இதுவே ஒரு கிறிஸ்துவனுடைய முதன்மையான இலக்காக இருக்க வேண்டும். நீ அவரை அறிந்து கொள்ளுவதற்கு நேரத்தை செலவழிக்கும்போது களிமண்ணை வைத்துள்ள குயவனைப்போல அவர் தம்முடைய குமாரனுடைய சாயலுக்கொப்பாக உன்னை வனைந்து கொள்ளுவார்.*

*உன்னுடைய வாழ்க்கையானது உயர்ந்த கட்டங்களும் தாழ்ந்த கட்டங்களுடைய ஒன்றாக இருக்கும். நீ தேவனுடைய வார்த்தையை பின்பற்றுகிற சமயங்களும் பின்பற்றாத நேரங்களும் இருக்கும். வேதாகமத்தில் உள்ள பெரிய தேவ மனிதர்களும் மனுஷிகளும் கூட தங்கள் வாழ்க்கையின் ஒரு சில காலக் கட்டங்களில் பாவத்துடன் போராடினார்கள்.*

*சரியான காரியத்தை செய்வதற்கு எதிராக தவறான காரியத்தை செய்வதற்கு தனக்கு இருந்த போராட்டத்தையும் தன் சரீரத்திற்குள் உண்டான யுத்தத்தையும் குறித்து பவுல் பேசி உள்ளார். ஒவ்வொரு முறையும் அவர் சரியான காரியத்தை செய்ய தெரிந்து கொள்ளவில்லை. (ரோமர் 7 :18) நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை உன் மாம்சத்திற்கும், உன் ஆவிக்கும், உன் நீதிக்கும், தேவனுடைய நீதிக்கும் இடையே ஏற்படும் யுத்தத்தை புரிந்து கொள்ள நேரம் கிடைக்கும்போது ரோமர் 7ம் அதிகாரத்தை முழுவதும் படித்துப் பார்ப்பது உனக்கு உதவியாக இருக்கும்.*

*கிறிஸ்துவுக்காக வாழ்வது உன்னை பரிபூரணப் படுத்தாது. ஆனால் தேவனுடன் கொண்டுள்ள உறவில் நீ அதிகமாக வளரும்போது சோதனை மற்றும் பரீட்சை காலங்களினூடாக கடந்து செல்லுவதற்கு அவரை நம்புவதற்கும், அவருடைய கிருபையை சார்ந்து கொள்ளுவதற்கும் சுலபமாக இருக்கும்.*

தன் போராட்டங்களின் மத்தியிலும் கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிறார். (2 கொரி 2 : 14) என்று பவுல் முழு நம்பிக்கையோடு சொல்ல முடிந்தது.

நீ போராடும்போதும் அல்லது தோல்வியுறும்போதும் (நாமெல்லோரும் இதை செய்கிறோம்) நம்மை புதுப்பித்து மீண்டும் சரியான பாதையில் நிறுத்துவதே எப்பொழுதும் தேவனுடைய இருதயமாக இருக்கிறது.

## சரணடைதலின் இனிமை

உன் வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் மறுபடியும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பதே நீ செய்யக்கூடிய மிக மிக முக்கியமான காரியம் என்பதை கண்டுகொள்ளுவாய். ரோமர் 12: 1ல் உங்கள் சரீரங்களை தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியுள்ளார். இதின் அர்த்தம் என்னவென்றால் உன் சித்தத்தையும், உன் தீர்மானங்களையும் தினமும் அவரிடத்தில் விட்டு விட கற்றுக்கொள்ள வேண்டும். உன் வாழ்க்கை இயேசுவின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறதென்பதே இதின் அர்த்தமாகும். நீ இயேசுவை ஆண்டவராக கொண்டு வாழும்போது மகிழ்ச்சி மற்றும் சமாதானம் என்பதின் உண்மையான அர்த்தத்தை நீ கண்டு கொள்ளுவாய்.

இராஜாவாகிய சாலொமோன் எழுதிய நிதிமொழிகள் புஸ்தகமானது நாம் ஆண்டவருக்கு நம்முடைய வாழ்க்கையை சரணடையச் செய்வதற்கு உதவியாக இந்த நடைமுறை ஆலோசனையை தருகிறது உன் சுயபுத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதிமொழிகள் 3: 5, 6).

நீ கிறிஸ்துவுக்கு உன் வாழ்க்கையை அதிகமதிகமாக சரணடையச் செய்ய ஆரம்பிக்கும்போது, அவருடைய பரிசுத்த ஆவியானவர் உன் வாழ்க்கையில் இருப்பதை தெளிவாக கண்டு கொள்வாய். நீ ஒரு சோதனையை அல்லது ஒரு கடினமான சூழ்நிலையை சந்திக்கும்போதும் உன்னுடைய மாம்சப்பிரகாரமான விருப்பங்கள் மறைவதையும் தேவனுடைய ஆவியானவர் உன் வாழ்க்கையில் கிரியை செய்வதையும் நீ கண்டு கொள்வாய்.

இது 2 கொரிந்தியர் 3 :18 கிரியை செய்வதாகும் இந்த வசனம் சொல்லுகிறது நாமெல்லோரும் மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். மகிமை என்ற வார்த்தைக்கு சுடரொளி பெருஞ்சிறப்பு "அபாரமான" என்று அர்த்தம் தேவன் உன் வாழ்க்கையை மகிமையின்மேல் மகிமைக்குக் கொண்டு சென்று ஒரு அருமையான நாளில் நீ அவருடைய மகிமையான சாயலுக்கொப்பாக முழுமையாக மறுரூபமடைந்து இயேசுவுடன் கூட பரலோகத்தில் நின்று கொண்டிருப்பாய்.

## உன்னுடைய சுதந்திரம்

ஹிப்பொழுது இயேசுவை உன் இருதயத்தில் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டபடியினால் நீ தேவனுடைய பிள்ளையாக மாறிவிட்டாய். கலாத்தியர் 4: 6, 7 சொல்லுகிறது நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய் நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்திரனுமாயிருக்கிறாய்.

எபிரெய பாஷையில் "அபா" என் பதற்கு அப்பா என்று பொருள் தேவன் உன்னை தன் இராஜ்ஜியத்திற்குள்ளும் தன் குடும்பத்திற்குள்ளும் தன் பிள்ளையாக சுவீகாரம் செய்து கொண்டார் அவருடைய நித்திய ஜீவனை சுதந்தரித்து கொண்டாய் ஓ என்ன வியப்பூட்டும் தனிச்சலுகை.

வாரிசுதாரர் என்பவர் ஒரு மனிதர் விசேஷமாக மற்றொரு மனிதருக்கு தன் சொத்தையும், தன் உடைமைககளையும் அல்லது இலாபங்களையும் கொடுக்க விரும்பும்போது அவைகளை உரிமை பாராட்ட அவர் தகுதியுள்ளவராகிறார். இந்த உலகில் நம்முடைய காலம் முடிவடைந்த பின்பு நாம் எவைகளையெல்லாம் விட்டு செல்லுகிறோமோ அவைகளையெல்லாம் நம்முடைய பிள்ளைகள் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். நாம் அவர்களை நேசிப்பதினாலும், அவர்களை ஆசிர்வதிக்க விரும்புவதினாலும் அவர்களை நம்முடைய சுதந்திரவாளிகளாக்குகிறோம்.

தேவனுடைய பிள்ளையாகவும் அவருடைய குடும்பத்தின் அங்கத்தினராகவும் உள்ள நீ இப்பொழுது அவருடைய எல்லா ஆசீர்வாதங்கள் மற்றும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறாய் தேவன் உன்னை கிறிஸ்துவுடன் உடன் சுதந்திரராக்கியிருக்கிறார் (ரோமர் 8: 17).

நீ எதை உடன் சுதந்தரிந்துக் கொண்டாய் ? முதலாவதாக, முக்கியமாக நீ நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொண்டாய். உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டன. நீ சென்றடையும் இடம் பரலோகம் அவருடைய பிள்ளையாக இருக்கிற நீ இப்பொழுதே வேதத்திலுள்ள எல்லா வாக்கத்தத்தங்களையும் கூட உனக்காக சுதந்தரித்துக் கொண்டாய்.

நீ அவருடன் நெருங்கி நடக்கும்பேது உனக்கு அவருடைய பிரசன்னமும், சமாதானமும், பராமரிப்பும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. அவருடைய மகிழ்ச்சி, பொறுமை, மற்றும் ஆறுதலுக்கும் நீ உரியவனாக மாறுகிறாய். அவருடைய பிள்ளையாக இருக்கிற நீ எந்த நேரத்திலும் அவரிடத்திற்கு செல்லவும், அவருடன் பேசவும், அவருடன் தங்கியிருக்கவும் உனக்கு தகுதி உள்ளது. அதோடு நீ மரிக்கும் சமயம் பரலோகத்தில் அவருடன் தங்கியிருக்கும் சுதந்திரத்தை, ஒருவரும் உன்னிடமிருந்து பறித்துக் கொள்ள முடியாத அந்த சுதந்திரத்தை நீ சுதந்தரித்துக் கொள்ளுவாய்.

இந்த சுதந்திரம் இந்த வரங்கள், மற்றும் ஆசிர்வாதங்கள் எல்லாம் தேவனுடைய பிள்ளைகளக்கு மாத்திரம் சொந்தம் என்பது உனக்கு புரிகிறதா ? இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசிக்கத் தெரிந்து கொள்ளாதவர்கள் தேவனுடைய சுதந்திரவாளிகள் அல்ல. ஆகையால் அவருடைய பிரசன்னத்தையும், அவருடைய சமாதானத்தையும், அவருடைய செழிப்பையும் பெற்றுக் கொள்ள அவர்கள் தகுதியானவர்கள் அல்ல இந்த ஆசிர்வாதங்கள் எல்லாம் ஒரு சுதந்திரமாக தேவனுடைய குமாரர்களுக்கும், குமாரத்திகளுக்கும் மாத்திரமே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

## வாழ்க்கை எப்பொழுதும் சுலபமானது அல்ல

இப்பொழுது நீ தேவனுடைய பிள்ளையாக இருப்பதினாலும், பரலோக இராஜ்ஜியத்திற்குரியவனாக இருப்பதினாலும், இவ்வுலகில் நீ வாழ்கிற உன் வாழ்க்கையானது சுலபமாகவோ, முழு நிறைவோடோ இருக்கப் போவதில்லை. கடினமான நேரங்களும் வரும் வேதம் சொல்லுகிறது சூரியன் தீயோர் மேலும் நல்லோர் மேலும் பிரகாசிக்கிறது போலவும், மழையானது நீதியுள்ளவர்கள், மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் பெய்கிறதுபோல (மத்தேயு 5 45) உன் வாழ்க்கையிலும் மழை நாட்களும் கடினமான நேரங்களும் வரும்.

ஆதலால் விசுவாசிப்பதினால் என்ன பயன் ? என்று ஒருவேளை நீ கேட்கலாம் நல்லது இப்பொழுது கிறிஸ்தவனாக இருக்கிற உனக்கு இப்படிப்பட்ட கடினமான நேரங்கள் வரும்போது உன்னை விட்டு ஒருபோதும் விலகாத கைவிடாத இந்த உண்மையான நன்பனை நீ முற்றிலும் நம்ப முடியும் (எபிரெயர் 13: 5) நீ இனிமேல் ஒருபோதும் தனிமையாக இருக்கப்போவதில்லை.

ஹிந்த எதிர்ப்புகளினூடேயும் நீ கடந்து போவதற்கு வேண்டிய பெலத்தை தேவன் உனக்கு எப்பொழுதும் தந்தருள்வார். உன் பெலவீனத்தில் அவருடைய பெலன் பரிபூரணமாக விளங்கும். (2 கொரிந்தியர் 12: 9) ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவன் நம்மைப் பார்த்து நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன். திகைாதே நான் உன் தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன் (ஏசாயா 41: 10) என்கிறார்.

இந்த அருமையான உலகத்தின் சிருஷ்டி கர்த்தர் நம்முடைய பட்சத்தில் இருக்கும்போது நீங்களும் நானும் எதற்காக கவலைப்பட வேண்டும் ? ஒரு பிரச்சினை உன்னை பாரமாக அழுத்தும்போது அதைத் தேவனிடம் தந்துவிடு. வேதம் சொல்லுகிறது கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார் நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் (சங்கிதம் 55: 22).

உன் சூழ்நிலை சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும் தேவன் உனக்காகக் கவலைப்படுகிறார் உன் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியைக் குறித்தும் கரிசனையுள்ளவராக இருக்கிறார். அவர் உன் தலையில் உள்ள மயிரையெல்லாம் எண்ணி வைத்துள்ளார் (மத்தேயு 10 :30).

## உற்சாகப்படு

நீ தேவனுக்கு அதிகம் விசேஷமானவன் அவர் உன் வாழ்க்கையின் எந்த சிறிய காரியமானாலும் அதைக்குறித்து விசாரியாமல் இருப்பவர் அல்ல மற்றும் அவர் கையாளக்கூடாத எந்த ஒரு பெரிய பிரச்சினையும் அல்ல. வேதம் சொல்லுகிறது.

''நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும்'' மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிய வல்லமையின்படியே (எபேசியர் 3: 20). நான் பெரிய காரியங்களை கற்பனை செய்ய முடியும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இந்த வசனம் நீயும் நானும் செய்யும் கற்பனைகளைக் காட்டிலும் தேவன் மிகவும் அதிகமாய் கிரியை செய்வார் என்பதை உறுதிப்படுத்துகிறது.

உன் வாழ்க்கையின் அஸ்திபாரம் புதை மணலைப் போல இருப்பதை நீ உணரும்போது தைரியங்கொள் (மத்தேயு 7: 24 - 27)ல் இயேசு உறுதியான அஸ்திபாரத்தின் மீது அஸ்திபாரம் போட்ட ஒரு மனிதனை பெருங்காற்று எவ்வாறு தாக்கிற்று என்பதை விவரிக்கிறார். இயேசு சொல்லுகிறார் பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின்மேல் மோதியும் அது விழவில்லை ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நீ உறுதியாக நிற்கும்படி இப்பொழுது இயேசு கிறிஸ்துவில் ஒரு திடமான கல் உள்ளது.

பேராபத்தான காற்றுகள் உன் வாழ்க்கையில் வீசும்போது ஓய்ந்திரு ''சூறாவளிக்காற்றின் மத்தியில் இப்பொழுது உனக்கு ஒரு புகலிடம் உள்ளது: நீர் ஏழைக்குப் பெலனும் நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும் பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும் வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர். (ஏசாயா 25 4)

நீ கைவிடப்பட்டவனாக மற்றும் நம்பிக்கையற்றவனாக இருப்பதை உணர்ந்தால் இருதயத்தில் தைரியங்கொள் நிதிமொழிகள் 18: 24 விவரிக்கிறது. அநேக சிநேகிதருள்ளவன் அழிவான். ஆனால் சகோதரனிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவனுமுண்டு இயேசு உன்னுடைய மிகச்சிறந்த நண்பர் ஆவார். உன் சகோதரனைக் காட்டிலும் உன்னுடன் அதிக நெருக்கமாக இருப்பார்.

## தேவன் யார்?

பரிசுத்த வேதாகமம் குறிப்பாக பழைய ஏற்பாடு தேவனை விவரிக்கும்படி பல பெயர்களை பயன்படுத்துகிறது பின்வரும் வசனங்கள் அவருடைய சுபாவத்தை தெளிவாக புரிந்து கொள்ள உதவுகிறது.

ஒருவேளை பணப்பிரச்சினைகளும் மற்றப் பிரச்சினைகளும் சமாளிக்க முடியாத அளவிற்கு அமிழ்த்துவதாக உணரும்போது உன் தேவன் "யெகோவாயீரே" என்பதை தெரிந்துக் கொள். யெகோவாயீரே என்றால் தேவன் நம்மை பராமரிக்கிறவர் என்று பொருள் அவர் உன் அருகிலேயே இருக்கிறார்.

ஒருவேளை வியாதி நோய் அல்லது வலி வேதனைகள் உன்னையோ அல்லது உன் குடும்பத்தையோ தாக்குமென்றால் நீ உரிமை பாராட்டுவதற்கென்று பெரிய மருத்துவரிடமிருந்து இரண்டாவது வழி உனக்கு உள்ளது. அவர் "யெகோவோரோஃபா" அதின் அர்த்தம் என்னவென்றால் "அவர் நமது பரிகாரி" ஏசாயா தெளிவாகக் கூறுகிறார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.(ஏசாயா 53 : 5).

ஒருவேளை நீ ஒரு குறிப்பிட்ட "வாழ்க்கைபாணி" அல்லது ஒரு பழக்கம் என்கிற கண்ணியில் சிக்கி அதின் இச்சைகளுக்கு அடிமைப் பட்டிருந்தால் தேவன் என இரட்சிப்பின் பெலனாக இருப்பதினால் இன்னும் உனக்கு நம்பிக்கை உண்டு (சங்கிதம் 140: 7).

ஒருவேளை மனச்சோர்வு சோகம் அல்லது தனிமையுணர்வு உன் இருதயத்தை உடைத்து சலிப்படையச் செய்திருக்குமென்றால் தேவன் உன்னை ஆறுதல்படுத்த வல்லவர் என்பதை தயவுசெய்து தெரிந்துக்கொள். 2 கொரிந்தியர் 1: 3 கூறுகிறது நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம் அவர் நம்முடைய "யெகோவாஷாலோம்" அதின் அர்த்தம் என்னவென்றால் ஆண்டவரே நம்முடைய சமாதானம்.

நீ பெலனடையும்படியாக தேவன் உன்னை இயற்கைக்கு அப்பாற்பட்ட மகிழ்ச்சியினால் நிரப்ப வல்லவர் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன். (நெகேமியா 8 :10)

ஒருவேளை உனக்கு களைப்பு மற்றும் அழுத்தம் அதிகமாக இருக்குமென்றால் தேவனை நம்பு ஏசாயா 26: 3 4 சொல்லுகிறது உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறப்படியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள். கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.

கடினமான நேரங்கள் வரும்போது தேவன் எல்லா புத்திக்கும் மேலான சமாதானத்தை தருபவர் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள். பிரிப்பியர் 4: 6, 7 சொல்லுகிறது நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

## ஒரு நித்திய மனக் கண்ணோட்டம்

நீ எப்பொழுதும் ஒரு நித்தியக் கண்ணோட்டத்தோடு வாழ வேண்டும் என்று உன்னை உற்சாகப்படுத்துகிறேன். நித்திய மனக் கண்ணோட்டத்துடன் வாழ்வது என்றால் கஷ்டங்கள் நிறைந்த தற்கால வாழ்க்கையை மாத்திரம் வாழ்வது அல்ல என்று அர்த்தம் இல்லை. விசவாசிகளாயிருக்கிற நாம் ஒரு நாள் இயேசு கிறிஸ்து திரும்பவந்து நம்மை நம்முடைய நித்திய வீட்டிற்கு அழைத்து செல்லுவார் என்ற முடிவை அறிந்து அதை நம் கண்முன் வைத்து வாழுகிறோம். கடைசியாக விசுவாசிகளாகிய நாமெல்லோரும் அவரை முகமுகமாக பார்க்கும்போது எவ்வளவு மகிமையாக இருக்கும்.

இதினிமித்தம் துன்பங்கள் வரும்போது நாமும் பவுலுடன் கூட சேர்ந்து ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். (ரோமர் 8 18) என்று சொல்ல முடியும்.

நீ இப்பொழுது எப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்தாலும் உன்னடைய அந்தக் குறிப்பிட்ட தேவையைச் சந்திக்க தேவன் வல்லவராக இருக்கிறார் அவர் உனக்குப் போதுமானவர். நல்ல நேரங்களிலும் மற்றும் கடினமான நேரங்களிலும் தேவன் உன்னுடைய பெலனாக இருப்பார். அவரை மாத்திரமே நீ வைத்திருக்கிறாய் என்று உணரும்போது அவர் மாத்திரமே உனக்குத் தேவை என்ற அறிவு, இளைப்பாறுதல் உனக்குண்டு என்பதை உறுதிப்படுத்தும்.

# தேவன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறார்

வேதத்திலுள்ள இந்த எல்லா வாக்குத்தத்தங்களும் நமக்கு பெரிய நம்பிக்கையை தருகிறது இவைகளை வாசிக்கும்போது நாம் உற்சாகம் கொள்ளுவதினால் உணர்ச்சிவசப்படுவதினால் விசுவாசம் நமக்குள் வளருவதை நாம் உணருகிறோம். எவ்வாறு இருப்பினும் வாழ்க்கையின் அழுத்தங்கள் நம்மை நெருங்கி வரும்போது சில சமயங்களில் தேனுடைய வாக்குத்ததங்களை மிகவும் சுலபமாக மறந்துவிட முடியும்.

நீ உன் வாழ்க்கையில் வேதனையான மற்றும் தீர்மானங்களை எடுக்க வேண்டிய நேரங்களை சந்திக்கும்போது அவைகளை அணுகுவதற்கு இப்பொழுது புதிய வழி உள்ளது. விவகாரங்களை உன் கையில் எடுத்துக் கொண்டு உன் பிரச்சினைகளை உன் சொந்த பெலத்தில் செய்வதை விட்டு விட்டு தேவனை முதலில் நோக்கிப்பார்த்து அவர் மீது உன் நம்பிக்கையை வைக்க வேண்டும்.

இதைச் செய்வது சுலபமல்ல என்பது எனக்குத் தெரியும் உன் வாழ்க்கையை நீயே சொந்தமாகக் கையாளுவது அதிக வழக்கமானதாகத் தோன்றும். பல ஆண்டுகளாக உன் பிரச்சினைகளை நீயே தனியாக சந்தித்து வருகிறாய் அதினால் எல்லாம் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது என்று நீ உணரலாம். ஆனால் உண்மை என்னவென்றால் உன் வாழ்க்கைக்கு மிகச்சிறந்தது என்னவென்பதை நீ அறியாமல் இருக்கிறாய். தேவன் உன் வாழ்க்கையின் கடைசி முதல் ஆரம்பம் வரை உள்ள எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். நாம் காத்திருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானம் வழிநடத்துதல் மற்றும் செல்ல வேண்டிய திசைக்காக தேவனை நோக்கிப் பார்க்கும்போது நம்முடைய வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளின் விளைவு மிகச் சிறந்ததாக இருப்பதை காணலாம்.

இவ்வியக்கத்தக்க உலகத்தை சிருஷ்டித்தவர் உன் பட்சத்திலிருக்கிறார் அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்ததும் அல்லாமல் எல்லாற்றையும் அறிந்திருக்கிறவர் நீ கிறிஸ்தவனாக தேவனுடைய பிள்ளையாக இருப்பதினால் எப்படிப்பட்ட வியக்கத்தக்க தனிச்சலுகைகளை பெற உரிமை பெற்றிருக்கிறாய். இந்த உலகத்தில் நீ முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் அவர் உன்னை நேசிக்கிறார் என்பதே. அவர் தம் இராஜ்ஜியத்திற்குள் தத்தெடுத்துக் கொண்டு உன்னை தம்முடைய பிள்ளையாகக் கொண்டார்.

அவர் உதவி செய்ய, வழிநடத்த, போதிக்க, ஆறுதல் படுத்த, மற்றும் சமாதானம், மகிழ்ச்சி, பொருமை, மற்றும் பெலன் தர எப்பொழுதும்

உன்னுடன் இருக்கிறார். உனக்கு எது தேவைப்பட்டாலும் அவைகளை தேவனுடைய கிருபையும் மற்றும் பராமரிப்பும் சந்திக்கும். இது நிச்சயமாகவே பரவசமூட்டுகிற பரிபூரண வாழ்க்கையை உச்சரிப்பதாக தோன்றுகிறதல்லவா ?

வெகு சீக்கிரத்தில் எப்படி ஆண்டவர் இல்லாமல் நான் இவ்வளவு காலம் வாழ்ந்தேன் என்று நீ ஆச்சரியப்படுவாய். இவ்வுலக வாழ்க்கையில் நீ அனுகூலமான நன்மைகளை அறுவடை செய்வதுமல்லாமல் ஒரு நாள் உன் இரட்சகருடன் நித்தியக் காலமாக வாழப்போகும் பரலோகத்திலும் உனக்காக பொக்கிஷங்களை சேகரித்து வைப்பாய்.

அத்தியாயம் மூன்று

# இயேசு ஏன் சிலுவையின் மேல் மரிக்க வேண்டும்

நாம் மன்னிக்கப்படவும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் நமக்காக ஏன் இயேசு மரிக்க வேண்டுமென்று ஒருவேளை நீ வியப்படையலாம். மற்றப் பல வழிகளில் இயேசு நம்மை இரட்சித்திருக்கலாமே என்று அடிக்கடி நான் விரும்பினது எனக்குத் தெரியும். ஆனால் அப்படி இல்லை அவர் எனக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்ததினால் நான் அவருக்கு எவ்வளவு நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தபோது அது முழுநிறைவாகவும் கறை மற்றும் பாவமற்றதாகவும் இருந்தது. ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் வாழும்போது தினமும் ஆண்டவருடன் நடந்தார்கள் அப்பொழுது வியாதியோ வலிவேதனையோ மரணமோ இல்லை.

தேவன் ஆதாம் ஏவாளுக்கு தாங்கள் எதைச் செய்ய விரும்பினாலும் அதை அவர்களே சுதந்திரமாக விரும்பி செய்வதற்கான ஆற்றலைக் கொடுத்தார். தேவன் பொம்மைகளைச் சிருஷ்டிப்பவர் அல்ல அவர் தம்முடையப் பிள்ளைகள் அவரை நேசிப்பதினால் தனக்கு சேவை செய்யவும், அவருடைய விதிமுறைகளுக்கு கீழ்படியவேண்டுமென்றும் விரும்புகிறார். தேவன் ஆதாம் ஏவாளுக்கு அவருடைய சிருஷ்டியின்மேல் முழு அதிகாரமும் கொடுத்தப்போது ஒரு கட்டளையை மாத்திரம் பிறப்பித்தார். தேவன் ஆதாமை நோக்கி நன்மை தீமை அறியத்தக்கதாக விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்றார் (ஆதியாகமம் 2 : 17).

## விலக்கப்பட்ட கனி

ஆதியாகமம் 3 : 1 ல் பிசாசானவன் ஏவாளிடத்தில் ஒரு சர்ப்பத்தின் உருவத்தில் வந்து “நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்றது ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம் ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்” என்றாள்.

அதற்கு சாத்தான் ஏவாளை நோக்கி தேவன் தான் சொன்னதை அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை நீங்கள் சாகவே சாவதில்லை என்று பொய் சொன்னது. மேலும் அது அவளைப் பார்த்து நீங்கள் இதைப் புசிக்கும் நாளில் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல இருப்பீர்கள் என்று கூறியது. பிசாசானவன் அவள் தேவனுக்கு சமமாக மாறிவிடுவாள் என்று ஏவாளை நம்பவைத்து, அவள் உடனடியாக சென்று அந்தப் பழத்தை சாப்பிடும்படி செய்தது.

து விசுவாசியாக இருக்கிற நீ பிசாசின் தந்திரங்களைக் குறித்து விழிப்புணர்வுள்ளவனாக இருக்க வேண்டும். அவள் ஏவாளை வெளிப்படையாக தேவனக்கு கீழ்படிய வேண்டாமென்று சொல்லவில்லை அவன் தேவனுடைய உண்மையையும் அவர் நன்மை செய்பவர் என்பதையும்.

சந்தேகப்பட வைத்தான். அந்த நேரத்திலிருந்து கீழ்படியாமை என்பது நாம் எடுத்து வைக்கும் ஒரு சிறு காலடியாகிவிட்டது சோதனையைக் குறித்து அதிகமாக இப்புஸ்தகத்தின் பின்பகுதியில் நாம் பேசுவோம் ஆனால் நீ உன் மனதையும், இருதயத்தையும் சந்தேகம், மற்றும் அவிசுவாசத்திற்கு விலக்கி பாதுகாக்க உன்னை உற்சாகப்படுத்த விரும்புகிறேன்.

ஏவாள் பொய்யை நம்பி சோதனைக்கத் தன்னை ஒப்புக்கொடுத்தாள் பின்பு தேவனை கனப்படுத்தவும் தன் மனைவியைப் பாதுக்காப்பதற்கும் மாறாக ஆதாம் தேவனுக்கு கீழ்படியாமல் விலக்கப்பட்டக் கனியையும் புசித்தான். அவர்களுடைய கீழ்படியாமையின் விளைவாக பாவம் இந்த உலகத்திற்குள் பிரவேசித்தது.

தேவன் தம்முடைய சிருஷ்டி பாவத்தின் விளைவுகளை அனுபவிக்க விரும்பவில்லை. ஆனால் அவர்கள் சுதந்திர விருப்பத்துடனும் தாங்களே தங்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு தகுதியுடையவர்களாகவும் இருக்க விரும்பினார்.

தேவன் ஆதாம் ஏவாளை பொம்மைகளாக சிருஷ்டிக்கவில்லை. அவர் அவைகளுக்குள் பொருத்தப்பட்ட கம்பிகளை இழுத்து இப்பொழுது நீங்கள் என்னைத் தொழுதுகொள்ளுகிற நேரம் என்ற நிலையில் அவர்கள் தன்னை தொழுதுகொள்ளவோ, தனக்கு கீழ்படியவோ வேண்டுமென்று விரும்பவில்லை. இல்லை அவர்கள் தாங்களே விரும்பி தெரிந்துகொள்ளுவதினால் தன்னைத் தொழுதுகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்.

ஆதாமும் ஏவாளும் தாங்கள் சுயவிருப்பத்தின்படி தேவனுக்கு கீழ்படியாமலிருக்க தீர்மானித்தப்போது பாவம் இந்த உலகத்திற்கள் வந்தது. அதோடு வியாதி, துக்கம், தீமை மேலும் மரணமும் இவ்வுலகில் பிரவேசித்தது. மாம்ச மரணம் மாத்திரம் இவ்வுலகத்திற்குள் பிரவேசிக்கவில்லை எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக அறியாதவர்கள் எல்லோரும் முடிவில் ஆவிக்குரிய மரணத்தையும், தேவனை விட்டு நித்தியப்பிரிவையும் அனுபவிக்க வேண்டியதாயிற்று.

## இரத்தம் சிந்தப்படுதல்

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபடியினால் அவர்கள் தேவனுடைய பிரசன்னத்திற்குள் இருக்க முடியவில்லை. ஆகையால் அவர் அவர்களை தோட்டத்தை விட்டு விரட்டிவிட்டார். ஆகையால் அவர் அவர்களை பல தலைமுறையினர் தோன்றி மறைந்தனர். ஆனால் தேவன் ஒரு திட்டத்தை

*தேவன் தம்முடைய தெய்வீக கால அட்டவணையின்படி தம்முடைய பழுதற்ற குமாரனை மரிக்கும்படி இவ்வுலகத்திற்குள் அனுப்பி அவர் சிந்துகிற இரத்தத்தினால் தேவன் நம் பாவங்களை மன்னிக்கும்படியாக வரும் ஒரு நாளை தேவன் திட்டம் பண்ணி வைத்திருந்தார். பாவங்களை மன்னிக்கப்பட ஏன் இரத்தம் சிந்தப்படுதலை தேவன் நியமானமாக ஏற்படுத்தினார் என்று எனக்குத் தெரியவில்லை ஆனால் அவர் அதைத்தான் செய்தார்.*

*எபிரேயர் **9: 22** சொல்லுகிறது நியாயப்பிரமாணத்தின்படி சொஞ்சங் குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது எளிமையாக சொன்னால் பாவம் மரணத்தைக் கொண்டு வந்தது. மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. ஆகவே ஆவிக்குரிய ஜீவனானது இரத்தப்பலி செலுத்தப்படுவதின் மூலம் புதுப்பிக்கப்படுகிறது.*

*இயேசுவின் தியாகப்பலி நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்றுகிறது விசுவாசிக்கிற எவரையும் முற்றும் முடிய இரட்சிக்கிறது.*

*நாம் செய்த எல்லா தவறுகளுக்கான பிராயச்சித்தம் கிடைக்க இரத்தப்பலி மாத்திரமே. நம்மை தேவனோடு ஒப்புரவாக்கிக் கொள்ளச்செய்யும் ஒரே வழியாக உள்ளது பிராயச்சித்தம் என்றால் மூடுவது அல்லது சுத்தம் பண்ணுவது என்று பொருள் நாம் பாவம் செய்யும்போது நான் இதற்காக வருந்துகிறேன். என்று சொல்வது போதாது. செய்யப்பட்ட அந்த பாவம் மூடப்பட சுத்திகரிக்கப்பட தேவனுடைய நியாயத்தீர்ப்பு உதவி செய்ய வேண்டும்.*

# இரத்தப்பலிகள் செலுத்தப்படுதல்

*மூழைய ஏற்பாட்டிலுள்ள தொடக்க புஸ்தகங்களில் தேவனுடைய ஜனங்களுக்கு பாவத்திற்கு பரிகாரம் உண்டாக எப்படி பிராணிகளின் பலிகளை தேவனுக்கு செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்ட வழிமுறைகள் தரப்பட்டது அவர்கள் தங்கள் பாவங்களுக்கு பரிகாரம் உண்டாக இரத்த பலி செலுத்தினால் அவர்கள் பாவங்களை மன்னிப்பதற்கான ஒரு பரிசுத்தமான மீண்டும் பெறமுடியாத ஒரு உடன்படிக்கையை தேவன் அவர்களுடன் ஏற்படுத்தினார். செலுத்துகின்ற பலிகளுக்கு அவர்கள் ஒரு கிரயம் செலுத்தியாக வேண்டும் அவைகள் உண்மையான பலியாக இருக்க வேண்டும்.*

*பலத்தரப்பட்ட நோக்கங்களுக்காக பலத்தரப்பட்ட பலிகள் தேவனுக்கு செலுத்தப்பட்டன. சில பலிகள் பாவம் சுத்திகரிக்கப்படசெலுத்தப்பட்டன. மற்றப்படி தேவனுக்கு பிரதிஷ்டை செய்வதற்கான சுட்டெரிப்பின் பலிகள் இன்னும் ஐக்கியத்தின் பலிகள் இருந்தன.*

இந்த நவீன சமுதாயத்தினருக்கு பிராணிகளின் பலிகளை செலுத்தும் திட்டம் ஒரு புதுமையாக தோன்றலாம். எப்படியானாலும் இதைத்தான் தேவன் நிலைநாட்டியிருக்கிறார். ஆனால் கடைசியாக நம் பாவங்களுக்கு முழுக்கிரயம் செலுத்தப்படத்தக்கதாக உண்மையான முக்கியத்துவம் வாய்ந்த பலியானது இன்னும் காணப்படவில்லை.

தினமும் தேவனுக்கு செலுத்தப்படுகிற பலிகள், காணிக்கைகள் பல நூற்றாண்டுகள் நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் வேதம் சொல்லுகிறது நம் பாவங்களுக்கான பரிகாரம் கிடைக்க உடன்படிக்கையானது போதுமானதாக இல்லை அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாமல் இருந்ததானால் இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே. அவர்களைக் குற்றப்படுத்தி அவர்களை நோக்கி இதோ கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில் இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்தும் காலம் வருகிறது (எபிரேயர் 8: 7,8)

# ஒரு புதிய உடன்படிக்கை

அவருடைய மகாபெரிய அன்பு மற்றும் இரக்கத்தினிமித்தம் தேவன் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்த விருப்பமுள்ளவராயிருந்தார். தேவனே விலையுயர்ந்த கிரயத்தை செலுத்தி இந்தக் கடைசி பலியை ஏற்படுத்துவார். அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்குள் அனுப்பினார். இயேசு இந்த முழு உலகத்தின் பாவங்களையும் சுமந்து தீர்க்க வந்தார். கல்வாரி சிலுவையில் அவருடைய பரிபூரணமான விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தி அவர் நமக்காக மரித்தார் மற்றும் நம்முடைய கடன்களுக்கான கிரயத்தை செலுத்தித் தீர்த்தார்.

சூதவனுக்கு இயேசு கடைசி பலியாக மாறினார். அவருக்குத் தரப்பட்ட பாரச்சுமையான வேலை சாதாரணமானது அல்ல அவர் பரலோகத்தில் உள்ள தம் வீட்டை விட்டு விட்டு மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மனித உருவெடுத்து இவ்வுலகத்திற்குள் வர வேண்டியதாயிற்று. பின்பு நாம் கற்பனைகூட செய்து பார்க்க முடியாத அளவிற்கு அவர் மிகவும் வேதனையுடன் சித்திரவதைப்பட்டு மரிக்க வேண்டியதாக இருந்தது. இயேசுவை சிலுவையில் அறைவதற்கு அவரைப் பிடித்துக்கொண்டு போக

போர்ச்சேவகர் வருவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு கூட அவர் வேறு ஏதாவது வழிமுறை உள்ளதா என்று எண்ணினார்.

சரீர வேதனைக்கு அப்பால் இந்த முழு உலகத்தின் பாவங்களும் தன்மீது சுமத்தப்படப்போகிறது என்பதை அறிந்திருந்தார். பாவம் நம்மை தேவனை விட்டு பிரிக்கிறதென்பதையும் அவர் சிலுவையில் தொங்குகிற அந்த ணி நேரங்களில் தாம் தம் பரலோகப் பிதாவை விட்டு பிரிக்கப் படப்போகிறார். என்கிற நினைவுகள் அவருக்கு தாங்க முடியாததாக இருந்தது, தாம் சிலுவையின் இந்த துன்பத்தையும், அவமானத்தையும் தவிர்ப்பதற்கு வேறு வழி ஏதாகிலும் உண்டோ என்று தம் பிதாவினிடத்தில் ஜெபித்து வேண்டிக் கொண்டார். ஆனாலும் அவர் தன் ஜெபத்தை முடிக்கும்போது ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார் (மாற்கு 14: 35 ,36).

இயேசு தன் பிதாவின் சித்தத்திற்கு அடிபணிந்தததினால் நான் அவருக்கு நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அவர் அப்படி அடிபணியாத பட்சத்தில் நாம் இன்னும் நம்முடைய பாவங்களில் கட்டப்பட்டு நம்பிக்கையற்றவர்களாக இருந்திருப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது நல்லவனுக்காக ஒருவேலை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் (ரோமர் 5 : 7, 8)

இயேசு சிலுவையில் தொங்கினபோது இயேசு எழுத்தின்படி உலகத்தின் பாவங்களை (தண்டனை மற்றும் அவமானத்தை) தம்மீது ஏற்றுக்கொண்டபோது பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. தேவன் பாவத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதவராகையால் தன் பிதாவின் பிரசன்னம் தன்னை விட்டு நீங்குவதை உணர்ந்தார். இயேசுவும், பிதாவும் பிரிகின்ற அந்த மரண வேதனையின் நேரத்தில் பொறுக்க முடியாத கடுந்துயரத்தோடு என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று கதறினார் (மத்தேயு 27: 46, 54)

நின்பு எல்லாம் முடிந்தது இயேசு அந்த கொடுரமான சிலுவையில் மரித்தபோது தம்முடைய சொந்த இரத்தத்தின் மூலம் நம்முடைய மீட்புக் கிரயத்தை செலுத்தித் தீர்த்தார். நம்முடைய பாவங்களுக்காக எவ்வளவு விலையுயர்ந்த கிரயத்தை இயேசு செலுத்தியுள்ளார். நாம் பரலோகத்தில் அவருடன் நித்தியக் காலமாக வாழவும், தேவன் நம்மை அளவு கடந்து நேசிக்கிறபடியினால் அவர் தம் சொந்த நேசக் குமாரனை

தம்முடைய இரத்தத்தை சிந்தினதின் மூலம் அவர் நம்முடன் செய்துள்ள உடன்படிக்கையைப் பற்றியும் கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தைப் பற்றியும் கூடுதலாக அறிந்து கொள்ள எபிரெயர் **8: 9** அதிகாரங்களை வாசிக்கும்படி உன்னை நான் உற்சாகப்படுத்துகிறேன்.

## கிழிக்கப்பட்டத் திரைச்சீலை

இயேசுவின் நாட்களில் தேவனை ஆராதிக்கும்படியாக யூதர்கள் எருசலேம் தேவாலயத்தில் கூடினார்கள். தேவாலயத்திற்குள், தேவாலயத்தின் உட்பிரகாரத்தையும், வெளிப்பிரகாரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தினின்று பிரிப்பதற்காக ஒரு பெரிய திரைச்சீலை மத்தியில் இருந்தது.

பிரதான ஆசரியன் தன்னுடைய மற்றும் ஜனங்களுடைய பாவங்கள் சுத்திகரிக்கப்பட மிருகங்களை பலியிட்டு இரத்தத்தை பலிபீடத்தில் தெளிக்கிற இடமே மகாபரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்பட்டது. தேவனுடைய பிரசன்னம் அந்த இடத்திலிருந்தபடியால் யாரும் அந்த மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல முடியாது. வருஷத்தில் ஒரு முறை சுத்திகரிப்பின் நாளில் மாத்திரம் பிரதான ஆசாரியன் இந்த மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க தேவன் அனுமதி கொடுத்தார்.

இந்த பிரதான ஆசாரியன் தேவனுடைய மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் தேவனுக்கு பலி செலுத்த உள்ளே செல்லும்போது, கீழே மணிகள் பொருத்தப்பட்ட ஒரு வஸ்திரத்தை அணிவதுமல்லாமல், அவன் கால்களில் ஒரு கயிறும் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்கிற விவரங்கள் “தல்மூத்” என்ற பரிசுத்த யூத நூலில் எழுதப்பட்டிருக்கிறது. இது கேட்பதற்கு ஒருவேளை வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் அவன் அப்படி உடையணிவதற்கு ஒரு காரணம் இருப்பதினால் இது நகைப்பதற்குரிய ஒரு காரியம் அல்ல.

அந்த மணிகள் எழுப்பும் ஓசையின் நோக்கம் என்னவென்றால் வெளியில் காத்துக் கொண்டிருக்கும் ஜனங்களுக்காகவே. அந்த மணிகள் ஒலிஎழுப்பும் சத்தத்தை ஜனங்கள் கேட்கும்போது பிரதான ஆசாரியன் இன்னும் உயிரோடிருந்து நடமாடிக் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுவார்கள். இக்குறிப்புக்கும் மேலாக மணிகள் எழுப்பும் ஒலியோசையானது தேவன் தங்களுடைய

பலிகளையும், காணிக்கைகளையும் அங்கீரித்து கொண்டாரென்பதை புலப்படுத்துவதாக இருந்தது இது எப்படி அவர்களுக்குத் தெரிந்தது? எப்படியென்றால் தேவன் அந்த ஆசாரியன் மீது கடந்து வந்தபடியால் எழுத்தின்படி தேவனுடைய பிரசன்னத்தின் கீழ் அவனுடைய முழு சரீரமும் குலுங்கினதின் மூலமாகவே அவன் சரீரம் குலுங்கினதினாலேயே அவன் வஸ்திரத்தின் கீழ் பொருத்தப்பட்டிருந்த மணிகள் ஒலியெழுப்பின பலியைக் கொண்டு வந்தவர்கள் தங்கள் காணிக்கைகள் தேவனுக்கு உகந்ததாக இருந்ததென்பதை மணிகள் எழுப்பின ஒலியின் மூலமாகவே தெரிந்து கொண்டார்கள்.

ஒருவேளை அந்தக் காணிக்கைகளும் பலிகளும் அங்கிகரிக்கப்படாமல் இருந்தால் தேவனுடைய பிரசன்னம் ஆசாரியன் மீது கடந்து வராததினால் அவன் வஸ்திரத்திலுள்ள மணிகள் ஒலியெழுப்பாது.

அல்லது ஒருவேளை அந்த ஆசாரியன் அசுத்தமாக இருந்தால் அல்லது அவனுடைய இருதயம் தேனிடத்தில் சரியாக இல்லாமலிருந்தால் அந்த பலி ஏற்றுக்கொள்ளப்படாமல் ஆசாரியன் கீழே விழுந்து மரித்து விடுவான்.

வெளியே இருக்கும் ஜனங்கள் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லக் கூடாததினால் தாங்கள் அழிக்கப்படாமலிருக்க ஆசாரியனின் மரித்த சரீதத்தை வெளியே இபப்பதற்கு அந்தக் கயிறு உதவியாக இருந்தது இப்படிப்பட்ட ஒரு வேலையைப் பெற்றுக் கொள்வதில் நாம் சந்தோஷப் பட்டிருக்கவோ அல்லது இப்படிப்பட்டக் காலக்கட்டத்தில் வாழ்வதற்கு நான் விரும்பியிருக்கவோ மாட்டேன்.

தமது குமாரனாகிய இயேசுவின் மூலம் ஒரு நெருங்கிய உறவின் திட்டம் சாத்தியமாகும்படி தேவன் தமது ஜனத்திற்காக ஒரு திட்டத்தை வைத்திருந்தார்.

இயேசு தமது ஜீவனை நமக்காகக் கொடுத்தபோது அவரே முபநிறைவுள்ள, பழுதற்ற கடைசி பலியாக மாறினார். முழு உலகத்தின் பாவங்களையும் அவருடைய இரத்தம் மூடிற்று அவர் மரித்தபோது தேவாலயத்தில் இருந்த திரைச்சீலை மேல் இருந்து கீழாக கிழிந்தது.

இந்தத் திரைச்சீலை ஒரு கை பருமனளவு அகலமுடையதாக இருந்ததினால் எந்த ஒரு மனுஷனம் அதைக் கிழித்திருக்க சாத்தியம் இல்லை அது 4 6 அங்குலம் பருமனில் நெய்யப்பபட்ட துதியாகும் பரலோகத்திலிருந்து இறங்கி வந்த தேவனுடைய கரமே இந்தத் திரைச்சீலையை இரண்டாகக் கிழித்திருக்க முடியும் இதற்கு முன்பு பூமியில் தேவனுடைய பிரசன்னம் திரைச்சீலைக்கு அந்தப் பக்கம் தங்கியிருந்தபடியால் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இயேசுவின் மரணம் நம்முடைய பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினதுடன் நமக்குப் பாவமன்னிப்பையும் பரலோகத்தில் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ளும்படி செய்தது. ஆனால் சிலுவையானது தேவனிடத்தில் நேரிடையாகச் செல்லும் வழியைத் திறந்தது அது எழுத்தின்படியான தேவப்பிரசன்னம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொருவருக்குள்ளும் தங்கியிருக்கும் படியான வழியைத் திறந்தது.

இப்பொழுது இயேசுவே நம்முடைய மகாபிரதான ஆசாரியராக மாறிவிட்டபடியால் நாம் இனிமேல் பிரதான ஆசாரியன் மூலம் செய்ய வேண்டிய அவசியம் அல்ல நமக்காக தேவனை நோக்கிப் பார்க்க யார் மீதும் சார்ந்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. இப்பொழுது தேவன் அதை விட மிகச்சிறந்த வழியை ஆயத்தம் பண்ணியுள்ளார். தேவன் தம்முடைய ஒவ்வொரு பிள்ளைகளிடத்திலும் தனிப்பட்ட உறவை வைக்க விரும்புகிறார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாளுடன் அவர் செய்ததுபோல நம்முடனும் நடக்கவும் பேசவும் விரும்புகிறார்.

சிலுவையில் கிறிஸ்துவின் தியாகமான மரணம் மற்றும் அவர் சிந்தின இரத்தத்தினிமித்தம் அவர் நம்முடைய இரட்சகராக ஆண்டவராக இருக்கும்போது நாம் அவரிடத்தில் நாம் இருக்கிறவண்ணமே வர முடியும் இப்பொழுது இந்த மகா உன்னதமான தேவனுடைய பிரசன்னத்திற்குள்ளேயே கடந்து வருவதற்கு நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றிருக்கிறோம்.

நாம் நம்முடைய துதிகளை செலுத்தி அவரை ஆராதிக்கும் போது நம் முடைய வஸ்திரங்களில் மணிகள் இல்லாமல் நம்முடைய கால்களில் கயிறு கட்டப்படாமல் நேரிடையாக மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல முடியும் நாம் அவருக்கு முன்பாக வந்து நம்முடைய ஜெபங்களை பரலோகத்திலுள்ள அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக கொண்டு வர முடியும். அவருடைய கிருபாசனத்தண்டையிலே நாம் தைரியமாய் சேருவதற்கு நமக்கு ஒரு வழியை உண்டு பண்ணின நம் இரட்சகர் மற்றும் பிரதான ஆசாரியருடன் நாம் நடக்கவும் பேசவும் முடியும். (எபிரெயர் 4 : 16) அத்துடன் இப்பொழுதும் எப்பொழுதும் அவருடன் நண்பர்களாக ஐக்கியம் கொள்ளவும் முடியம் இப்பொழுது சுத்திகரிப்பைப் பெற இளங்காளை வெள்ளாட்டுக்கடாவின் இரத்த பலிகளை கொண்டு வருவதற்கு பதிலாக (எரிரெயர் 13: 15) நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி கிறிஸ்துவினிடம் வர முடியும் இந்தப் புதிய உடன்படிக்கைக்காக தேவனுக்கு நன்றி.

அத்தியாயம் நான்கு

# வியப்பூட்டும் கிருபை

ஒரு புதிய விசவாசியைத் தாக்க பிசாசானவன் உபயோகிக்கும் மிகப்பொதுவான பொய்கள் என்னவென்றால் குற்ற உணர்வையும் மற்றும் கண்டன உணர்வையும் தருவதின் மூலமே.ஆனால் நான் ஒரு காரியத்தை உனக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன் இயேசு சிலுவையின்மேல் மரித்தபோது உன் பாதி பாவங்களிலிருந்து மீட்பு பெற கிரயம் செலுத்தவில்லை உலகத்தின் சில பாவங்களுக்கான கிரயத்தை மாத்திரம் அவர் செலுத்தவில்லை.

நம்முடைய பாதி விடுதலையைப் பெறுவதற்கு கிரயம் செலுத்த தேவன் தம் குமாரனாகிய இயேசுவை மனிதரூபம் எடுப்பதற்கும், சிலுவையில் வலிவேதனைகள் சித்திரவேதனையினூடாக செல்லுவதற்கும் தம் பரலோகப் பிதாவினிடத்திலிருந்து பிரிக்கப்படுவதற்கும் ஒருபோதும் அனுமதித்திருக்க மாட்டார். ஒரு போதும் கிடையாது. அது சிறிய பெரிய பாவமானாலும் எல்லா பாவங்களையும் இயேசுவின் இரத்தம் மூடும் இயேசுவின் இரத்தம் அவைகள் எல்லாவற்றையும் மூடி விடும் அவர் சிலுவையில் மரித்தபோது உலகத்தின் எல்லா பாவங்களுக்கான, கிரயத்தையும் செலுத்தி விட்டார் உன் வாழ்க்கையின் பத்தாயிரம் மடங்கு வாழ்க்கையில் செய்யும் பாவங்களுக்காகவும் செலுத்திவிட்டார்.

சங்கீதத்தில் உள்ள இந்த வார்த்தைகளை கவனிக்கவும் சங்கீதம் 103: 1, 3 என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னிக்கிறார்.

இந்த வசனப்பகுதி அவர் உன் எல்லா பாவங்களையும் மன்னிக்கிறார் என்று சொல்லுகிறது. தண்டனை, மற்றும் அவமானம் இரண்டையும் 10ரூ அல்ல 50ரூ அல்ல 75ரூ அல்ல எல்லா பாவங்களையும் மன்னிக்கிறார்.

பாதுகாப்பற்ற நிலைமை கண்டனம் செய்யப்பட்ட நிலைமை என்ற குற்ற உணர்வுகளில் புரண்டு கொண்டிருக்க உன்னை நீ ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இவைகளெல்லாம் உன் இரட்சகர் இயேசுவின் மரணத்தையும் உனக்குள் இருக்கும் அவருடைய ஜீவனையும் மட்டுப்படுத்த சாத்தான் எடுக்கும் முயற்சிகள் ஆகும்.

உன் வாழ்க்கையில் உள்ள ஒரு பாவத்தை தேவன் உணர்த்தும்போது அதை அறிக்கை செய்த பின்பு இயேசு முற்றிலும் பாவத்திற்கான தண்டனையையும் அவமானத்தையும் கழுவி விட்டார் என்று முற்றிலும் நீ நம்ப வேண்டும். உன் பாவக்கறையின் வல்லமை உன் பாவங்களை மன்னித்து சுத்தமாகக் கழுவக்கூடிய இயேசுவின் இரத்தத்தின் வல்லமையைக் காட்டிலும் வல்லமையுள்ளது என்ற பொய்யை பிசாசு உன்னிடம் சொல்ல அனுமதிக்காதே.

உன் விசுவாசத்தை குலைத்துப் போடும்படியாக உன் மனதிற்கு விரோத மான எதிர்மறையான எண்ணங்களைக் கொண்டு வந்து உன்னை கண்டனம் செய்ய பிசாசு முயற்சி செய்வான். தேவனுடைய வார்த்தையின் மேல் உறுதியாக நில் ரோமர் 8: 1, 2 சொல்லுகிறது ஆகையால் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல்

ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கிற்றே.

குற்ற உணர்வு மற்றும் கண்டனம் செய்யப்பட்ட உணர்வு என்கிற வலையில் சிக்கியிருப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்று காண்கிறாயா? விசுவாசியாயிருக்கிற நீ கிறிஸ்துவுக்குள் முழுமையாக விடுதலை பெற்றிருக்கிறாய். (யோவான் 8:36) தேவன் உனக்குத் தந்துள்ள வாக்குத்தத்தை உறுதியாகப் பற்றிக்கொள்.

## வியப்பூட்டும் தேவனுடைய கிருபை

நீ உன் கடந்த காலத்தில் வாழ்ந்து கொண்டு மற்றம் அதின் குற்ற உணர்வின் பாரத்தில் மூழ்கிப் போகக்கூடாது. பின்னால் நோக்கம் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு ஒரு காரை ஒட்டுவது மிக கடினமாக இருக்கும் குற்ற உணர்வும் கண்டன உணர்வும் உன்னை கட்டி வைக்கவும் சோர்வுறச்செய்யவும் உன்னையும் தேவனுடைய இராஜ்ஜியத்தையும் கட்டியெழுப்புவதற்கு உன்னை உதவியற்றவனாக இருக்கச் செய்யும் பிசாசின் ஆயதங்களாகும்.

இயேசு சிலுவையில் பலியானதற்கு மற்றும் தேவனுடைய கிருபையை பெற்றுக் கொள்ளுவதற்கு நம்மில் ஒருவரும் தகுதியானவர்கள் அல்ல நாமனைவரும் எப்படி தேவனுடைய வியப்பூட்டும் கிருபையை சார்ந்து கொள்ள வேண்டும் மற்றும் நம்ப வேண்டுமென்பதைக் கற்றக் கொள்ள வேண்டும் கிருபை என்பது தகுதியற்ற நமக்கு தேவன் தரும் கருணையும் ஆசீர்வாதமும் ஆகும் அவர் தம் கிருபையினால் தகுதியற்ற நமக்கு இரக்கத்தையும் மன்னிப்பையும் தந்திருக்கிறார். இதற்காக நாம் கெஞ்ச வேண்டிய அவசியமில்லை நாம் செய்ய வேண்டியதெல்லாம் தேவனுடைய இருதயம் களிகூரும்படி தேவனுடைய கிருபையை நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக் கொள்வதே ஆகும்.

## நற்செய்தி

நின்வரும் இந்த ஐந்து வசனங்களும் ரோமரின் புஸ்தகத்தில் இருக்கிறபடியால் பொதுவாக ரோமரின் சாலை என்று அழைக்கப் படுகிறது. இவ்வசனங்கள் அனைத்தையும் சேர்த்தால் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை காட்டும் தெளிவான பாதையின் வரைப்படம் உருவாகும்.

*ரோமர் 3: 23 எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானோம்.*

*ரோமர் 5: 8 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*

*ரோமர் 6: 23 பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்.*

*ரோமர் 10: 9 என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.*

*ரோமர் 10: 13 ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.*

### பரலோகத்திற்கு செல்ல ஒரே வழிதான்

*நாம் பாவிகள் ஆனால் தேவன் நம்மை நேசித்ததினால் நமக்கு நித்திய ஜீவனாகிய ஈவை தரும்படி இயேசுவை நம்முடைய பாவங்களுக்காக மரிக்க அனுமதித்தார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் நாம் பாவிகள் என்பதை அறிக்கை செய்து இயேசுவை இரட்சகரென்றும் ஆண்டவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.*

*எந்த ஒரு மனிதனும் நல்லவனாக இருப்பதினால் பரலோகத்திற்குள் செல்ல முடியாது. நம்முடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள நாம் எந்த நல்ல கிரியையும் செய்ய முடியாது. பத்துக் கற்பனைகளைக் கைக்கொள்ளுவதும் மற்றும் தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதும் நம்மை பரலோகத்திற்குள் கொண்டு செல்ல முடியாது. சபைக்கு செல்லுவதும் அல்லது ஞாயிறு பள்ளிக்கு செல்லுவதும் நாம் பரலோகத்திற்குள் செல்லுவதற்கான நியாயமான தகுதியைத் தரமுடியாது. தேவன் ஒருவர் இருக்கிறாரென்று விசுவாசிப்பதும் கூட நம்மை மகிமையான பரலோக வாசல்களுக்குள் செல்ல அனுமதிக்காது. பரலோகம் ஒன்று உண்டு என்று விசுவாசிக்கிற பெரும்பாலான மக்கள் இவைகளில் ஏதாவதுதொன்று தங்களை பரலோக வாசல்களினூடாக கொண்டு செல்லும் என்று நினைக்கிறார்கள் இப்படி அவர்கள் தப்பான எண்ணம் கொண்டிருப்பது துக்கமான ஒரு காரியம்.*

பரலோகத்திற்கு செல்ல ஒரே ஒரு வழிதான் உண்டு. நித்தியத்திற்கென்று நாம் இரட்சிக்கப்பட்டது தேவனுடைய கிருபையின் மூலமும், விசுவாசத்தின் மூலமும் இயேசுவின் மூலமுமே. அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும். (அப்போஸ்தலர் 4: 12).

## கிருபை பாவம் செய்வதற்கு அனுமதி சீட்டா

நீ இரட்சிக்கப்பட்டபோது தேவனுடைய வியப்பூட்டும் கிருபையை பெற்றுக் கொண்டாய் அவர் தம்முடைய கிருபையை உனக்குத் தந்ததினால் அவருடைய இரக்கத்தை அனுகூலமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. யூதாவின் புஸ்தகம் சொல்லுகிறது, ஏனேனில் நமது தேவனுடைய கிருபையை காமவிகாரத்துக் கேதுவாக புரட்டி ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்கள் என்று (யூதா 1: 4 ) நாம் தேவன் நம்மை மன்னிப்பவர் என்பதை அறிந்திருப்பதினால் கவலையற்றவர்களாக பாவம் செய்து சுற்றிக்கொண்டிருக்கக் கூடாது. தேவனுடைய கிருபை என்பது பாவத்தை செய்வதற்கான அனுமதி சீட்டல்ல கலாத்தியர் 5 :13ல் சகோதரரே நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள் இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அனுசரியாமல் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள் என்று நம்மை ஞாபகப்படுத்துகிறது.

தேவனுடைய ஆவியானவர் உனக்குள் வாசம் செய்ய வரும்போது ஒரு பெரிய மாற்றம் உனக்குள் உண்டாகிறது. இந்த மாற்றத்தை நீ உணர்ந்தாலும் உணரக்கூடாமல் போனாலும் உன்னைச் சுற்றியுள்ள ஜனங்கள் அதை கவனிக்க முடியும்.

பவுல் எழுதுகிறார் இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின (2 கொரிந்தியர் 5 :17).

முத்தேயு 7 :20ல் இயேசு நம்மை கனி மரங்களுக்கு ஒப்பிட்டு பேசுகிறார். நாம் எப்படி ஒரு மரத்தின் கனியைக் கொண்டு மற்றொரு மரத்தை அடையாளம் கண்டு கொள்ளுகிறோமோ எப்படி ஒரு முள்ளில் உள்ள பழத்தை பறித்து சாப்பிடுவதை தவிர்ப்போமோ அதைப் போல் நாம் அவருடைய பிள்ளைகள் என்பதை அவருடைய கனிகளினால் அறிவோம். உன்னுடைய செய்கைகளே உன்னை மற்றவர்களை விட்டு வேறுபடுத்திக் காண்பிக்கும்.

*என்னைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். நீ உன்னுடைய இரட்சிப்பை உன் கிரியையின் மூலம் சம்பாதித்துக் கொள்ள முடியுமென்று நான் சொல்லவில்லை ஞாபகத்தில் கொள். நீ நடப்பிக்கிற எந்தக் கிரியைக் கொண்டும் இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது. உன் இரட்சிப்பிற்கான முழு கிரயமும் இயேசுவின் இரத்தபலியின் மூலம் மாத்திரம் முழுமையாக செலுத்தப்பட்டு விட்டதுமல்லாமல் அவரை உன் இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக் கொள்ள நீ ஏறெடுத்த விசுவாச ஜெபத்தின் மூலம் முத்திரை செய்யப்பட்டும் விட்டது. தேவன் உன்னை இரட்சிப்பதற்கு காண்பித்த இரக்கத்திற்கு நீ நன்றியறிதலுள்ளவனாக இருப்பதினால் இப்பொழுது நீ நல்ல காரியங்களை செய்வதற்கும் சந்தோஷமுள்ள மனப்பான்மையுடனும் இருக்க ஊக்குவிக்கப் படுகிறாய். உன் நற்கனியானது தேவன் உனக்குள் ஆரம்பித்துள்ள நற்கிரியையின் வெளி அடையாளமாக உள்ளது.*

## அவர் கிருபையில் நடப்பது

*கிறிஸ்துவுடன் நாம் நடப்பது என்பது தேவனுடைய வழியில் நாம் நடக்கக் கற்றுக் கொள்ளுவதாகும். இயேசு சொன்னார் ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். **(லூக்கா 9: 23)** தினமும் உன் மாம்ச விருப்பங்களை கீழே வைத்துவிட்டு அவருடைய கிருபையில் மாத்திரம் நடப்பதின் மூலம் நீ இயேசுவைப் பின்பற்றக் கற்றுக் கொள்ளுகிறாய்.*

*சில நேரங்களில் நீ வீழ்ச்சியடையும்போது தேவன் உன்னை மன்னிக்கம்படி கேட்டு மறுபடியும் அவருடைய கிருபையில் நடந்து உன்னுடைய பெலனைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நீ உன் இலக்கைத் தவறவிடும்போது குற்ற உணர்வு, மற்றும் கண்டன உணர்வுகள் உன்னை மேற்கொள்ள விட வேண்டாம். சில நேரங்களில் நாம் பாவம் செய்வோம் என்பதை தேவன் அறிவார். நமக்கப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாகயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். **(1 யோவான் 1: 8 ,9)***

இங்கு நம் வாழ்க்கையில் உள்ள பாவங்களைக் குறித்து தேவன் எப்படி செய்ல்படுகிறார் என்பதற்கான வழிமுறைகள்

1. பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்க்கையில் உள்ள பாவங்களைக் குறித்து உணர்த்துகிறார்

2. நாம் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்கிறோம்.

3.நம்முடைய பாவங்களுக்காக நாம் வருந்துகிறோம் (அல்லது முழுமையாக திரும்புவது)

4. அதை மறந்து விடுகிறோம் அவரும் மறந்து விடுகிறார். பவுல் பிலிப்பியர் 3: 13, 14ல் ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் கூதாடருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

உன் பாவங்களை தேவனிடம் அறிக்கை செய்து அவர் உன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்ட பின்பு புதுப்பிக்கப்ட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையினால் இப்பொழுது தொடர்ந்து முன்னேறி செல்ல வேண்டும். இது நீ விசுவாசியாக இருப்பதினால் உனக்குள்ள உரிமையும் தேவனால் கிடைக்கும் ஈவும் ஆகும். சங்கீதம் 103: 12 மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார் என்று சொல்லுகிறது.

உன் வாழ்க்கைப் பிரயாணத்தின் எந்தக் கட்டத்தில் இருப்பதாக நீ உணர்ந்தாலும் எப்பொழுதும் இதை நினைவில் கொள்.

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் (எபேசி 2: 6- 10).

அத்தியாயம் ஐந்து

# ஆவிக்குரிய வளர்ச்சி

## தண்ணீர் ஞானஸ்நானம்

நீ இயேசுவை பின்பற்ற தீர்மானித்துப் பின்பு உன் புதிய விசுவாசத்தைப் பற்றி மற்றவர்களுக்கு அறவிப்பதற்கான பரவசமூட்டுகிற சந்தர்ப்பம் இப்பொழுது உனக்கு உள்ளது தண்ணீர் ஞானஸ்நானம் என்பது இயேசுவுடன் நமக்குள்ள உறவை எப்படி வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென்பதை அறிய தேவன் நமக்குத் தந்துள்ள வேதத்தின் உதாரணமாக உள்ளது.

விசுவாசிகள் தண்ணீரில் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு பல காரணங்கள் உண்டுஅதில் முதலாவது கீழ்படிதல் ஆகும். இயேசு தான் பொது ஊழியத்தை செய்ய ஆரம்பிக்கும் முன்பு தேவனுக்கு தன்னுடைய முழு விசுவாசத்தையும் அறிவிக்க தயக்கம் காண்பித்த யோவான் ஸ்நானனின் கரங்களினால் ஞானஸ்நானம் பெற முழுமையாக தம்மை ஒப்புக் கொடுத்தார். தேவனுடைய குமாரனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க கலக்கமுற்ற யோவானுக்கு பிரதியுத்தரமாக இயேசு தன்னுடைய ஞானஸ்நானம் இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது என்றார். (மத்தேயு 3 :15) இயேசு யோர்தான் நதியில் உண்மையில் மூழ்கினபோது தேவன் இவர் என்னுடைய நேசக்குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்ற ஒரு சத்தத்துடன் பதிலளித்தார் (மத்தேயு 3 :17) பவுல் நாம் இயேசுவை பிரதிபலிக்க வேண்டுமென்று வறியுறுத்துகிறார். (1 கொரிந்தியர் 11: 1) நாம் கிறிஸ்துவை பிரதிபலிக்க ஞானஸ்நானம் மிகச்சிறந்த வழிகளில் ஒன்றாக இருக்கிறது.

இயேசு தம்முடைய சிஷர்களை நோக்கி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் (மத்தேயு 28: 18- 20).

தாம் அவர்களுக்குக் கற்பித்த யாவையும் இவ்வுலகத்திற்கு உபதேசம் பண்ணுவதற்கு புறப்பட்டு செல்லும்படி இயேசு தம் சீஷர்களுக்கு கட்டளையிட்டதுமன்றி விசுவாசித்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி குறிப்பாகச் சொன்னார். ஆகவே ஞானஸ்நானம் என்பது தேவனுக்கக் கீழ்படிகின்ற ஒரு செயலாகும்.

## தண்ணீர் ஞானஸ்நானத்தின் அடையாளம்

ஞானஸ்நானம் என்பது உள்ளாகப் பெற்ற அனுபவத்தின் வெளிப் படையான தோற்றமாகும். நீ தண்ணீரில் ஞானஸ்நானம் எடுக்கும்போது நீ கிறிஸ்துவுக்குள் புதுச்சிருஷ்டியானதும் நீ ஆண்டவரைநேசிக்கிறாயென்றும் அவர் உன் வாழ்க்கையின் ஆண்டவரென்றும் உன்னைச் சுற்றியுள்ள அனைவருக்கும் பிரகடனப்படுத்துகிறாய்.

நீ தணிணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதின் மூலம் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியுமா ? என்று சிலர் கேட்கிறார்கள். அதற்கு பதில் “இல்லை” என்பதுதான் தண்ணீர் ஞானஸ்நானம் என்பது உள்ளாக ஏற்பட்ட மாற்றத்தின் அறிகுறியும், அடையாளமும், தோற்றமும் ஆகும், இதைச் செய்ய வேதம் நம்மை அறிவுறுத்துகிறது.

இதை இப்படி யோசித்துப் பார் ஜனங்கள் திருமணம் செய்யும்போது அவர்கள் மோதிரங்களை மாற்றிக்கொள்ளுகிறார்கள். ஒருமனிதன் திருமணமானவன் என்பதை காண்பிக்க மோதிரமானது வெளிப்படையான அடையாளமாக இருக்கிறது.

நீ மோதிரத்தை அணிந்து கொள்ளுவதினால் திருமணமானவன் என்று ஆகி விடுமா ? இல்லை அதற்குப் பதிலாக உன்னுடைய திருமண மோதிரத்தை அணியாமலிருப்பதினால் நீ திருமணமானவனல்ல என்று ஆகி விடுமா ? இல்லவே இல்லை. திருமண மோதிரம் என்பது உன் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் அடையாளமாக உள்ளது.

தண்ணீர் ஞானஸ்நானமும் அதைப்போலத்தான் தண்ணீரில் மூழ்கும் போது அது உன் பழைய வாழ்க்கையை உள்ளே அடக்கம் செய்வதற்கு ஒப்பனையாக உள்ளது. ஒரு விதத்தில் கிறிஸ்து சிலுவையில் உன் பாவங்களுக்காக மரித்ததுபோல நீயும் மறிக்கிறாய் என்று பொருள்படும்.பின்பு இயேசுவைப் போல நீயும் கழுவப்பட்டவனாக சுத்திகரிக்கப்பட்டவனாக வெளியே வந்து இயேசுவைப் போல புதிய வாழ்க்கைக்குள் உயிர்த்தெழுகிறாய். தேவன்பேரில் வைத்துள்ள விசுவாசத்தின் மூலம் நீ ஒரு புதிய மனிதனாக இருக்கிறாய் கொலோசெயர் 2: 12 , ஞானஸ்நானத்தில் அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும் அயலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனின் செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் என்று சொல்லுகிறது. நீ தண்ணீரில் ஞானஸ்நானம் எடுத்த செயலானது மனந்திரும்பிய இருதயம் மற்றும் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் வந்ததற்கு அடையாளமாக உள்ளது.

ஆப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு ஒரு திரள்கூட்டத்திற்கு பிரசங்கம் பண்ணுகிறார். ஜனங்கள் அவருடைய வார்த்தைகளால் தொடப்பட்டு நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டபொழுது பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த

*ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான் 41ம் வசனத்தில் இரட்சிப்பின் சுவிசேஷச் செய்தியை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 2: 38- 41).*

*நீ அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தை முழுவதும் தொடர்ந்து வாசிப்பாயென்றால் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் செய்தியைக் கேட்டு அதினால் பெற்றுக்கொண்ட புதிய விசுவாசத்தை வெளிப்படையாக நிரூபிக்க தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என்பதைக் காண முடியும்.*

*ஹியேசு நாம் அவர் மீது வைத்துள்ள அன்பை வெளிப்படையாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று விரும்புவதினால் தண்ணீர் ஞானஸ்நானம் என்பது மிக முக்கியமான ஒன்றாகும் தண்ணீர் ஞானஸ்நானம் மனம்திரும்பிய இருதயம் மற்றும் நீ கிறிஸ்தவத்திற்குள் வந்ததைக் காண்பிப்பதற்கான அடையாளமாக உள்ளது.*

## திரித்துவம்

*திரித்துவத்தைக் குறித்த ஒரு சிறிய விளக்கத்தை இங்கு உட்புகுத்துவது நாம் பரிசுத்த ஆவியின் நிறைவைக் குறித்து பேசும்போது உதவியாக இருக்குமென்று நான் உணருகிறேன். நீ உன் விசுவாசத்தில் அதிகமாக உறுதிப்படும்போது திரித்துவத்தைக் குறித்த சில அடிப்படை உண்மைகளை புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம் பரலோகத்தில் நமக்கு மேலாக உயர்த்தப்பட்டுள்ள பிதாவாகிய தேவன் இருக்கிறார். குமாரனாகிய இயேசுகிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார் மற்றும் பரிசுத்த ஆவியானவர் வந்து நமக்குள் கூட வாசம்பண்ணுகிறார்.*

# பரிசுத்த ஆவியானவர்

ஜனங்கள் திரித்துவத்தைக் குறித்து பேசம்போது பிதாவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும் மாத்திரமே அதிக கவனத்தைப் பெறுகிறார்கள் பரிசுத்த ஆவியானவரும் திரித்துவத்தின் முக்கியமான இடத்தைப் பெறுவதினால் அவரை புறக்கணிக்க முடியாது.

நம்மை போதிக்கிறவராகிய பரிசுத்த ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறவர் (யோவான் 16 :13) என்று நாம் சொல்லுகிறது. அவர் நம்முடைய தேற்றரவாளனும் நம்மை போதிக்கிறவருமாக இருக்கிறார் (யோவான் 14 :26) தேவனுடைய ஆவியானவர் உன்னுடைய வழ்க்கையின் அச்சாரமுமாயிருக்கிறார் 2 கொரிந்தியர் 5 :5 இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே.

பரிசுத்த ஆவியானவரைக் குறித்து புரிந்துக் கொள்ள அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தை படிப்பது மிகச்சிறந்தது. இந்த முழு புஸ்தகத்திலும் விசுவாசிகளின் வாழ்க்கையில் அவர் செயல்படுகிற விதங்களை நீ காணமுடியும். எங்கெல்லாம் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அவர் சிஷர்களுக்கு அறிவுரைகளையும், வழிநடத்துதலையும் தந்திருக்கிறார். இதற்கான சில உதாரணங்கள் அப்போஸ்தலர் 1: 2 மற்றும் 10: 9 -22 பகுதிகளில் காணப்படுகிறது.

பரிசுத்த ஆவியானவர் சபையை பெலப்படுத்துகிறவரும் மற்றும் உற்சாகப்படுத்துகிறவருமாயிருக்கிறார். அதற்கு உதாரணமாக அப்போஸ்தலர் 9: 31 ல் அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று பக்திவிருத்தியடைந்து கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின என்று வாசிக்கிறோம். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் அவருடைய பிரசன்னம் ஊற்றப்பட்டப் பின்பு எப்படி பரிசுத்த ஆவியானவர் ஜனங்களுக்கு உதவி செய்தார் என்பதைக் காண்பிப்பதினால் இந்த வசனம் மிக முக்கியமானதாக உள்ளது.

ஊண்மையில் இயேசு பரலோகத்தில் உள்ள தம் பிதாவினிடத்தில் செல்லும்வரைக்கும் பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் ஜனங்களுடைய இருதயத்தில் வாசம்பண்ணியதில்லை (அப்போஸ்தலர் 1) பழைய ஏற்பாட்டில்

பரிசுத்த ஆவியானவர் ஜனங்கள் மீது ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்ற குறுகிய காலம் மாத்திரமே அவர்கள் மீது வந்தார். இதற்கான உதாரணங்கள் நியாயாதிபதிகள் புஸ்தகத்தில் நான்கு வித்தியாசப்பட்ட இடங்களில் வேதம் விவரிக்கிறது. கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினது (நியாயாதிபதிகள் 14: 6 19; 15: 14) ஒரு குறிப்பிட்ட வேலையை நிறைவேற்றி முடிக்க பரிசுத்த ஆவியானவர் சிம்சோன் மூலம் நம்பமுடியாத பெலத்தை வல்லமையைக் கொண்டு செயல்பட்டபோது இது சம்பவித்தது.

பழைய ஏற்பாடு முழுவதும் இதே மாதிரிதான் காரியங்கள் நிகழ்ந்தன.

# பரிசுத்த ஆவியின் வரம்

இயேசு இப்பூமியை விட்டு பரலோகத்திற்கு சென்ற பின்பு இவையெல்லாம் முற்றிலும் மாறிவிட்டது. இயேசு தம் சீஷர்களிடத்தில் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற போய் காத்திருக்கச் சொன்னார். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்றுக் கட்டளையிட்டார். (அப்போஸ்தலர் 1: 5) இயேசு பேசின இந்த வாக்குத்தத்தம்தான் என்ன? அதற்கான பதிலை 4ம் வசனத்தில் தருகிறார். யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் தம் பிதாவின் இந்த ஈவு ஆசிர்வதிக்கும் பரிசுத்த ஆவியானவரே.

நம்புதற்கரிய செய்தி என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது ஒருவர் மீது வருவது கிடையாது. எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலுமுள்ள விசவாசிகளை நிரப்ப அவர் வருகிறார்.

அப்போஸ்தலர் 1: 8 ல் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றப்பின்பு இரண்டு காரியங்கள் நிகழும் என்று இயேசு சொன்னார்.

1, அவர் உங்களுக்க பெலன் தருவார்.

2, நீங்கள் எனக்கு சாட்சிகளாக இருப்பீர்கள்.

இந்த சாட்சிகள் என்பதற்கு "ஆதாரத்துடன் நீருபித்தல்" அல்லது சான்றுடன் சாட்சி கூறுதல் என்று அர்த்தம் பரிசுத்த ஆவியின் வல்லமை என்பது இயேசு தன்னை யாரென்று உரிமைப் பாராட்டினாரோ அதை ஜனங்கள் ஆதாரத்துடன் தெளிவாய் சாட்சி கூற அது அவர்களுக்கு பெலன் அளிக்கும் இதுதான் அப்படியே அங்கு சம்பவித்தது.

# வல்லமை அளித்தல்

இயேசு தங்களுக்கு சொன்னதை சீஷர்கள் அப்படியே செய்தார்கள். அவர்கள் எருசலேமுக்கு சென்று ஒரு மேல்வீட்டறையில் காத்திருந்தார்கள். அவர்கள் அப்படி காத்திருந்து தேனைத் துதிக்க ஆரம்பித்தப்போது தேவன் தந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது. சீஷர்கள் பரீசத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அதன் பின்பு பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு தேவனுடைய மகத்துவத்தைக் குறித்து பிரசங்கிக்கவும் சாட்சி கொடுக்கவும் தைரியம் கொடுத்தார். அவர்கள் அப்படி செய்தபோது அற்புதங்கள் நிகழ ஆரம்பித்தன.

பவுலும் ஜனங்களிடத்தில் பேசும்போது உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு என் பேச்சும், என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல் ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது (1 கொரி 2 4 5) என்றார்.

வேதாகமாவது அல்லது இன்று நமக்கு இருக்கும் அச்சடிக்கும் இயந்திரங்கள், வானொலி, தொலைக்காட்சி, அல்லது இணையத்தளம் போன்ற நவீன தொழில் நுணுக்கங்கள் இல்லாத நாட்களில் நடைமுறையில் முழு உலகத்தையும் சுவிசேஷமயமாக்க பரிசுத்த ஆவியானவர் ஆதி சபைக்கு பெலத்தையும், அதிகாரத்தையும் கொடுத்தார் இயேசு மரித்து உயிர்த்தெழுந்த முதல் 200 ஆண்டுகளுக்குள் முழு உலகமும் சுவிசேஷமயமாக்கப்பட்டு விட்டதென்று சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லா இடங்களிலும் ஆதிகிறிஸ்தவர்கள் சென்று சுவிசேஷத்தை அறிவித்தார்கள் அவர்களி பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்ததின் விளைவாக அது சாதாரணமாக அவர்களுக்குள்ளிலிருந்து பாய்ந்து சென்றது.

# இதைக் காட்டிலும் பெரிய காரியங்கள்

ஆப்போஸ்தலனாகிய பேதுருவின் நீழல்கூட வியாதியஸ்தர்களுக்கு சுகத்தைக் கொண்டு வந்தது (அப்பொஸ்தலரி 5: 15). இது நடந்தது பேதுருவின் சுயசக்தியினால் அல்ல. ஆனால் பேதுரு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்ததினாலேயே நிகழ்ந்தது.

இயேசு தான் உலகத்தில் நடந்த நாட்களில் செய்தக் கிரியைகளைப் பார்க்கிலும் தம்மைப் பிப்பற்றுகிறவர்கள் பெரிய திரியைகளைச் செய்வார்கள் என்றார். (யோவான் 14: 12) அது எப்படி? ஏனென்றால் அவர் பரலோகத்திலுள்ள அவருடைய பிதாவினிடத்திற்கு போகிறபடியினாலும், தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அவர் அனுப்புவதின் மூலமாகவுமே.

இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் எடுத்த சமயம் அவரை நிரப்பின அதே பரிசுத்த ஆவியானவரே இப்பொழுது நம்மையும் வல்லமையினால் நிரப்பி ஊழியம் செய்வதற்கு தேவையானவற்றைக் கொடுப்பார். (அப்போஸ்தலர் 1 4 5 8) இயேசு வியாதியஸ்தரை சுகப்படுத்தினார். அவர் குருடர்களுடைய கண்களைத் திறந்தார். முடவர்கள் நடந்தார்கள். அநேகருடைய வாழ்க்கை புதுப்பிக்கப்பட்டது மற்றும் மரித்தவர்களும் உயிரோடு எழுந்தார்கள். இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்த இயேசு நாம் இதைக் காட்டிலும் பெரிய கிரியைகளைச் செய்வோம் என்றார். நாம் தேவனுடைய ஆவியினால் பெலப்படுவதினால் மாத்திரமே இப்படிப்பட்ட கிரியைகளைச் செய்ய முடியும். ஆக நாம் அவரை அணுகி அவர் வல்லமையை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவர் தம்முடைய வல்லமையையும், அதிகாரத்தையும் நமக்குத் தந்திருக்கிறார்.

அப்போஸ்தலர் 3ம் அதிகாரத்தில் பவுல் சப்பாணியை நோக்கி வெள்ளியும், பொன்னும் என்னிடத்திலில்லை என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்றான். பேதுருவினிடத்தில் இருந்தது என்ன? வல்லமை? அதை எங்கிருந்து பெற்றுக் கொண்டான் பரிசுத்த ஆவியானவர்.

குறைந்தது இரண்டுமுறை இயேசு சொன்னா.ர் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். (யோவான் 17: 18 யோவான் 20: 21) பிதா எப்படி இயேசுவை அனுப்பினார்? எல்லா வல்லமையுடனும், அதிகாரத்துடனும் அனுப்பினார். மத்தேயு 28: 18 ல் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இயேசு சொல்லுகிறார்.

# எல்லா அதிகாரம்

இயேசு தம் பிதாவினால் எல்லா அதிகாரத்துடனும் அனுப்பப்பட்டது போல நம்மையும் அவருடைய பிதா அவரை அனுப்பினது போல அனுப்புகிறார். பின்பு கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்ட அதே வல்லமை நமக்கும் கொடுக்கப்படுகிறது. 1 யோவான் 4 :17 சொல்லுகிறது.

ஏனென்றால் அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம் ஓஹோ !

தேவன் முதல் நூற்றாண்டில் இருந்த சபை மாத்திரம் வல்லமையில் நடை போட வேண்டுமென்று எண்ணினாரா ? இல்லை, நிச்சயமாக இல்லை. இன்றைய இறையியல் வல்லுனர்கள் பிரசங்கிப்பதற்கு மாறாக ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு ஆதிச்சபையில் இருந்த சீஷர்கள் அனுபவித்த ஆவியின் வரங்கள் இன்றும் மரித்துப் போகவில்லை. இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபிரேயர் 13 :8).

இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் இயேசு நடந்த அதே வல்லமையில் நாமும் நடக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

# பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்

இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த நாட்களில் நடப்பித்த அதே அற்புதங்களை விசு வாசிகளாகிய நாமும் இன்று எப்படி நடப்பிக்க முடியும் ? என்று ஆச்சரியப்படலாம். அவர் நடப்பித்த கிரியைகளைக் காட்டிலும் நாம் பெரிய கிரியைகளைச் செய்வோம் என்று எப்படி இயேசு சொன்னார் ? அதற்கான பதில் பரிசுத்த ஆவியானவர் என்ற ஆள்தத்துவத்திற்குள் இருக்கிறது.

நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்து பேசி இருக்கிறோம். நான் இரண்டாவது ஒரு ஞானஸ்நானத்தைக் குறித்து பகிர்ந்து கொள்ளப்போகிறேன். அது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஆகும்.

அப்போஸ்தலர் 2: 38- 39ல் அப்போஸ்தலனாகிய பேதுரு நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகியக் கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொன்னார்.

இங்கு பேதுரு குறிப்பிடும் மூன்று குறிப்புகள் கவனிக்கவும்

1. மனந்திரும்புங்கள் மனந்திரும்புதல் என்றால் உங்கள் சொந்த சுயநலமுள்ள விருப்பங்களை மற்றும் உங்கள் பாவங்களை விட்டு விட்டு தேவனுடைய இராஜ்ஜீயத்திற்கும் அவருடைய வழிகளுக்கும் திரும்ப

*2. ஞானஸ்நானம் பெறுங்கள் பேதுரு இங்க தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்து பேசுகிறார்.*

*3. பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

*இன்று சில சபைகள் மற்றும் சில குழுக்கள் நீ மறுபடியும் பிறக்கும்போது இயேசுவை ஏற்றுக் கொள்ளுகிறாய். அப்படி இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போதே நீ பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுகிறாய் என்று போதிக்கிறார்கள்.*

*மற்ற சபைகளும் பிரிவுகளும் உள்ளான பரிசுத்த ஆவியின் நிறைவு கிறிஸ்துவின் நாட்களில் இருந்த சீஷர்கள் அல்லது விசுவாசிகள் அல்லது ஆதிச்சபைக்கு மாத்திரம் அருளப்பட்டது என்று போதிக்கிறார்கள்.*

*முற்றும் சிலர் இரட்சிக்கப்படுவதும், பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறுவதும் இரண்டு வித்தியாசமான அனுபவங்கள் என்று விசுவாசிக்கிறார்கள் இந்தப் பரிசுத்த ஆவியைக் குறித்த வாக்குத்தத்தம் இன்றைய நாட்களில் உள்ள எல்லா விசுவாசிகளுக்கும் கூட உள்ளது.*

*வித்தியாசப்பட்ட சபைப் பாரம்பரியங்களைக் கடந்து சட்ட விளக்கங்களும், மற்றும் சட்டங்களுக்கு விதிவிலக்குகளும் உள்ளன. மத்தேயு 18: 16ல் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும் என்று இயேசு சொன்னார். பெரும்பாலாக நீதித்துறைகளிலும் கூட ஒரு மனிதன் இழைத்த பெரியக் குற்றத்தை நிரூபிக்க குறைந்தபட்சம் நேரில் கண்ட இரண்டு சாட்சிகள் அவசியமாக உள்ளது. இல்லையென்றால் ஒரு மனிதனுடைய வார்த்தை மற்றொருவனுக்கு எதிராக சொல்லப்படும் வார்த்தையாக இருக்கும். நற்செய்தி என்னவென்றால் வேதத்திலுள்ள பரிசுத்த ஆவியானவருக்கு பல சாட்சிகள் உள்ளன.*

*விசுவாசிகள் பலவிதங்களில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதை "புதிய ஏற்பாடு" எடுத்துக் காட்டுகிறது. சில நேரங்களில் "பரிசுத்த ஆவி" வரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற நேரங்களில் அது ஊற்றப்பட்டது (அப்போஸ்தலர் 10 :45) என்று வேதம் சொல்லுகிறது. சில நேரங்களில்*

இதைக் குறிக்கும்போது "நிரப்பப்படுதல்" என்கிறது (அப்போஸ்தலர் 2 :4) இன்னொரு இடத்தில் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுதல் என்று சுட்டிக்காட்டுகிறது. (மாற்கு 1: 8, அப்போஸ்தலர் 1: 5) இந்த வசனங்களைத் தியானிக்கும்பொழுது இந்தப் பல்வேறு குறிப்புகள் அர்த்தத்தில் இடம் மாறக்கூடியது என்பதை நீங்கள் காணலாம்.

இரட்சிக்கப்படுவதும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறுவதும் இரண்டு வித்தியாசப்பட்ட ஈடுஇணையற்ற அனுபவங்கள். என்று வேதம் தெளிவாக போதிப்பதை நான் விசுவாசிக்கிறேன்.

இதற்கான ஒரு குறிப்பை இங்கே தருகிறேன் சமாரியர் தேவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு பேதுருவையும் யோவானையும் அங்குள்ள விசுவாசிகளிடத்தில் அனுப்பினார்கள்.

ஏன்? பேதுருவும், யோவானும் சமாரியாவிற்கு ஒரு நோக்கத்துடன் அனுப்பப்பட்டார்கள். எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதைக் கேள்விப்பட்டார்கள் எதற்காக பேதுருவையும் யோவானையும் அனுப்ப வேண்டும்? ஏனென்றால் சமாரியாவிலுள்ள விசுவாசிகள் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை என்பதைக் கேள்விப்பட்டதினித்தமுமே.

அப்போஸ்தலர் 8: 14, 17ல் பேதுருவும் யோவானும் வந்த பொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றக்கொள்ளும்படி அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள். அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.

இங்கு நாம் விசுவாசிக்கிற ஜனங்களைப் பார்க்கிறோம் இவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றிருந்தார்கள். ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக எருசேலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் இந்த புதிதாக மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் முக்கியமாக ஏதோ ஒன்றை பெறாமலிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தார்கள். அவர்கள் பேதுருவையும், யோவானையும் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி கரங்களை அவர்கள் மீது வைக்கும்படி அனுப்பினார்கள்.

ஹிரட்சிப்பும் பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் முற்றிலும் வேறுபட்டஅனுபவங்களென்பதற்கு இங்கே இன்னுமொரு உதாரணம்.

அப்போஸ்தலர் 19ல் பவுல் கடந்து வந்த கொரிந்து பட்டனத்தில் அநேகர் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களானார்கள். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களென்றால் அர்த்தம் என்ன? நிச்சயமாக இவர்கள் மனம்திரும்பினவர்கள். அவர்கள் வாழ்க்கையில் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள். அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய உயிர்த்தெழுந்த குமாரனென்று விசுவாசித்து தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றவர்கள்.

பவுல் அவர்களை நோக்கி நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டான். இயேசுவை ஆண்டவரென்று விசுவாசிப்பதும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெறுவதும் ஒரே மாதிரியான அனுபவமாக இருந்திருந்தால் பவுல் ஏன் இந்தக் கேள்வியை கேட்க வேண்டும்?

அவர்கள் பவுலிடத்தில் பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். (வசனம் 2) நிச்சயமாக அவர்கள் விசுவாசிகள்தான் நிச்சயமாக அவர்கள் விசுவாசிகளென்று அழைக்கப்பட்டார்கள். (வசனம் 1) அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (வசனம் 6).

இந்த இரண்டு உதாரணங்களிலும் பேதுரு அப்போஸ்தலர் 2 :38ல் விசுவாசியுங்கள், ஞானஸ்நானம் பெறுங்கள் மற்றும் பரிசுத்த ஆவியைப் பெறுங்கள் என்று எடுத்துக் காண்பித்திருப்பதை நீங்கள் காணலாம். எப்படியிருந்தாலும் இந்த எடுத்துக்காட்டிலிருந்து ஒரு சட்டத்தை உருவாக்க நாம் அவசரப்பட்டு விடக் கூடாது.

ஆப்போஸ்தலர் 9ல் சவுலின் மாற்றத்தைக் குறித்து வாசிக்கிறோம் சவுல் சமயப்பற்றுடைய யூதனாக இருந்தப்படியினால் சபையையும், கிறிஸ்தவர்களையும் துன்புறுத்தினான். தமஸ்குவுக்கு போகும் பாதையில் இயேசு அவனுக்குத் தோன்றி ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? என்றார். இந்த அனுபவத்தில் சவுல் சரீரப்பிரகாரமாக தன் பார்வையை இழந்து ஆவியில் மாற்றத்தைப் பெற்றுக்கொண்டான். சில நாட்களுக்குப் பின்பு அனனியா என்னும் பேருள்ள ஒருவன் வந்து பவுல் மீண்டும் பார்வையடையவும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கும் தன் கைகளை சவுல் மீது வைத்தான். சவுல் உடனடியாக பார்வையடைந்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான். பின்பு தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றான் சவுல் பவுல் என்று மறுபெயர் பெற்று புகழ்பெற்ற அப்போஸ்தலர்களில் ஒருவனாக மாறி முழு புதிய ஏற்பாட்டின் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பகுதியை எழுதினான்.

*வரிசை முறை மாறுவதை வேதத்தில் உள்ள பல உதாரணங்கள் மூலம் நாம் சுட்டிக் காண்பிக்க முடியும் 1, மனந்திரும்புதல் 2, தண்ணீர் ஞானஸ்நானம் மற்றும் 3, பரிசுத்த ஆவியைப் பெறுதல்.*

*மனம்திரும்புவதற்கு முன் ஞானஸ்நானம் பெற முடியுமா? ஆம் முடியும் ஆனால் அது ஒருவன் உள்ளத்தில் மாறுதல் ஏற்படாமல் குளிப்பதற்கு ஒப்பாக இருக்கும். ஏனென்றால் மனந்திரும்புவதும் உன் ஆண்டவராக இருக்கும்படி இயேசுவைக் கேட்டுக்கொள்ளுகிற செயலும் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதற்கும் அல்லது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்கும் முன் நிபந்தனையாக உள்ளது.*

*எப்படி மனந்திரும்பி பின்பு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற இயலுமோ அதைப் போலவே மனந்திரும்பின பின்பு தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறுவதும் சாத்தியம் என்பதை நாம் தெளிவாகக் கண்டிருக்கிறோம்.*

# இயேசுவின் உதாரணம்

*இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் இருந்தபோது குமாரனாகிய தேவனை சரீரத் தோற்றத்தில் சீஷர்கள் கண்டார்கள் தேவனுடைய ஜீவனுள்ள குமாரனாகிய இயேசுகிறிஸ்து இப்பூமியில் மாம்சத்தில் வெளிப்பட்டவர்.*

*யோவான் 1: 14ல் அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என்று வேதம் சொல்லுகிறது.*

*முறபடியும் பிலிப்பியர் 2 :6,7 அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்.*

தேவன் குமாரனுடைய சாயலில் பரலோகத்தை விட்டு வெளியே காலடி எடுத்து வைத்து இந்த உலகத்தில் வந்து மாம்சமும், இரத்தமுமுடைய மனிதனாக உருவெடுத்து பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்து சிலுவையில் அறையப்பட்டு, மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பின்பு பல நாட்கள் அவர் பூமியில் நடந்து தாம் உயிர்த்தெழுந்ததை மெய்யான ஆதாரங்களால் நூற்றுக்கணக்கான மக்களுக்கு நிரூபித்துக் காண்பித்தார். பின்பு சீக்கிரமாக அவர் உயர எழுந்தருளி பரலோகத்திற்கு சென்று அங்கு இப்பொழுது தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வந்தபோது ஒரு குழந்தையின் ரூபத்தில் வந்தார். அவர் ஒரு நாள் தீடிரென்று முழு மனித வடிவத்தில்வந்து தான் தேவனுடைய குமாரனென்று உரிமை பாராட்டவில்லை. கன்னிகையாகிய மரியாளின் கர்ப்பத்தில் பரிசுத்த ஆவியானவர் இயேசுவை கர்ப்பந்தரிக்கச் செய்தார். லூக்கா 1 :35ல் பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் என்று நாம் வாசிக்கிறோம். எந்தக் குழந்தையும் பிறப்பதற்குரிய கர்ப்பக்காலமாகிய ஒன்பது மாதங்கள் கழித்து இயேசு பிறந்தார்.

நும்முடைய புதுப்பிறப்பிற்கும் இதற்கும் இங்கே சம்பந்தம் உள்ளது கன்னிகையாகிய மரியாளின் கர்ப்பத்தில் இயேசுவை வித்தாக கர்ப்பந்தரிக்கச் செய்த அதே பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது கிறிஸ்துவின் ஆவிக்குரிய வித்தைக் கொண்டு நம்மையும் கர்ப்பந்தரிக்கச் செய்கிறார். இதினிமித்தம் கிறிஸ்து உனக்குள் பிறந்திருக்கிறார். இந்தக் காரியம் நிகழுவதற்கு கர்ப்பக்காலக் கட்டமாகிய ஒன்பது மாதங்கள் எடுக்கவில்லை நீ அவரிடத்தில் உன் பாவங்களை மன்னிக்கும்படியும் உன் வாழ்க்கையில் வரும்படியும், அவருடைய பிள்ளையாக மாற்றும்படியும் கேட்ட அந்தக் கணப்பொழுதே அது நிகழ்ந்து விட்டது.

அப்போஸ்தலனாகிய பவுல் இதை சுவிசேஷத்தின் இரகசியம் என்கிறார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம் (கொலோசெயர் 1 :27) பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்து என்கிற ஆவிக்குரிய வித்தை நமக்குள் வைக்கும்பொழுது நாம் மறுபடியும் பிறக்கிறோம். கிறிஸ்து நமக்குள் பிறந்திருக்கிறார் என்பது இதின் அர்த்தம்.

சரியாக இதைத்தான் இயேசு நிக்கொதேமுவினிடத்தில் பேசும்போது நீ மறுபடியும் பிறக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். நாம் இரட்சிக்கப்படுகிற அனுபவத்தில் பரிசுத்த ஆவியானவர்தான் வந்து நமக்குள் கிறிஸ்து என்கிற வித்தை வைக்கிறார்.

இயேசுவின் பிற்கால ஊழியத்தில் அவர் ''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்பார்.'' இயேசு குறிப்பிட்டது ''தகப்பனைப் போல மகன்'' என்ற முதுமொழிக்கு ஒப்பாக உள்ளது. மேலும் இயேசு தன் பிதா அவருக்கு போதித்தபடியே அவர் பேசுகிறார் என்றும் சொன்னார். (யோவான் 8 :28)

இயேசு இந்தப் பூமியில் இருந்தபோது அவர் பரிபூரணமாக தேவனாக இருந்த அதே சமயத்தில் குமாரனாகிய தேவன் என்னும் ஆள்தத்துவத்தோடும் இருந்தார். கொலோசெயர் 2 :9 தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசிமாயிருக்கிறது என்று சொல்லுகிறது அதாவது பிதாவின் பிரிபூரணமும் இயேசுவுக்குள் வாசம் பண்ணிற்று.

என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று இயேசு சொன்னபோதிலும் அவர் பூமியில் இருந்தபோது பிதாவாகிய தேவனாக இருக்கவில்லை. அல்லது பரிசுத்த ஆவியாகிய தேவனாகவும் இருக்கவில்லை. எப்படியிருந்தாலும் பரிசுத்த ஆவியான தேவன் இப்பூமிக்கு வந்து கிறிஸ்துவின் வாழ்க்கையை நிரப்பி பெலப்படுத்தினார்.

## ஊழியத்திற்கு பெலப்படுதல்

இயேசு யோர்தான் நதியில் யோவான் ஸ்நானனுல் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது வானம் திறந்து பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல ரூபங்கொண்டு அவர்மேல் இறங்கினார். மற்றும் தேவனுடைய சத்தம் எழும்பி நீர் என்னுடைய நேசக்குமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன் (லூக்கா 3 :22) என்று உரைத்தது. திரித்துவத்துவத்தின் மூன்றாவது நபராகிய ஆசீர்வாதத்தின் பரிசுத்த ஆவியானவர் இயேசுவுக்குள் வாழும்படி வந்து அவர் வாழ்க்கையை பெலப்படுத்தினார்.

*யோவான் ஸ்நானன் யோவான் 1: 33 ,34ல் நானும் இவரை (இயேசு) அறியாதிருந்தேன். ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர் (பிதா) ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதை (நிலைத்திருத்தல், தொடர்ந்திருத்தல், தங்கி வசித்தல்) காண்பாயோ அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான்.*

*இந்த பரிசுத்த ஆவியானவரின் உள்நிறைவின் அனுபவத்தைப் பெற்றப் பிறகுதான் இயேசு தன் ஊழியத்தை ஆரம்பித்தார் (மத்தேயு 3: 11- 17 ; 4: 17)*

*டேவிட், தேவனுடைய கிரியைகளை நடப்பிக்கும்படி இயேசுக்கு பரிசுத்த ஆவியானவரின் பெலன் தேவை என்று சொல்லுகிறீர்களா ? என்று ஒருவேளை நீங்கள் என்னிடத்தில் கேட்கலாம் ஆம் என்று சொல்லுகிறேன்.*

*ஆம் இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தாலும் பரிசுத்த அவி யானவரே இயேசுவின் வாழ்க்கையையும் ஊழியத்தைபும் பெலப்படுத்தினார்.*

*ஒருநாள் தான் சிலுவையில் அறையப்படப் போகிறாரென்பதும், ஒரு நாள் தான் உயிரோடு எழும்புவார் என்பதும், பின்பு ஒரு நாள் பரலோகத்திலுள்ள தன் பிதாவினிடத்திற்கு ஏறிப்போவார் என்பதும் இயேசுவுக்குத் தெரியும். மற்றும் ஒரு நாள் அவர் சபையாகிய நம்மிடத்தில் உலகமெங்கும் புறப்பட்டுப்போய் சுவிசேஷத்தை ஒவ்வொருவருக்கும் பிரசங்கிப்பதற்கான பொறுப்பை ஒப்படைப்பார் என்பதும் அவருக்குத் தெரியும்.*

*இயேசு பெற்றிருந்த அதே வல்லமையைப் பெறாமல் நாம் எப்படி அதை நிறைவேற்ற முடியும் ? ஆகவே இயேசுவும் பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். ஆகவே இயேசு பரலோகத்திலுள்ள தன் பிதாவினிடத்திற்கு தாம் போகிறதை சீஷர்களிடத்தில் சொன்னார். ஆனால் அவரை நிரப்பின அதே வல்லமை அவர்களை நிரப்பும்வரைஅவர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டுமென்றார்.*

*தம் பரலோகப் பிதாவின் கிரியைகளை நடப்பிக்கும்படி இயேசுதாமே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டியது அவசியமாக இருந்தது. அதைப் போல தேவனுடையக் கிரியைகளை நடப்பிக்கும்படி சீஷர்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிற அனுபவம் அவர்களுக்கு அவசியமாக உள்ளது. தேவனுடைய கிரிளைகளை நடப்பிக்கும்படி பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுகிற அனுபவம் நமக்கு அவசியமாக உள்ளது.*

ஊழியத்தை ஆரம்பிக்கும் முன் இயேசு ஞானஸ்நானம் பெற்ற போது அவரை நிரப்பின அதே பரிசுத்த ஆவியானவர் மேல் வீட்டறையில் சீஷர்களையும் நிரப்பினார். அந்தக் குறிப்பிட்டக் கட்டத்திலிருந்து அவர்களுடைய ஊழியம் ஆரம்பித்தது. அப்போஸ்தலர் 1 :8ல் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும். சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாகயிருபீர்கள் என்றார்.

நற்செய்தி என்னவென்றால் அதே பரிசுத்த ஆவியானவர் வந்து இன்றும் சபையை நிரப்ப விரும்புகிறார். பரிசுத்த ஆவியானவர் தேவனிடத்திலிருந்து வரும் ஈவாக இருக்கிறார் அவர் எல்லா விசுவாசிகளுக்குமுரியவர் ஆகையால் தேவன் தன் முழு சபையும் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

பரலோகத்தில் தம் பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கும் இயேசு தமக்குக் கீழ்படிகிறவர்கள் மீது பரிசுத்த ஆவியைப் பொழிந்தருள ஆவலுடன் காத்திருக்கிறார்.

தேவன் பெலவீனமுள்ள ஒரு சபையை பிறப்பிக்கவில்லை தேவன் தம் சபையானது தம்முடைய ஆவியினாலும், வல்லமையினாலும் நிரப்பப்பட்டிருக்க வேண்டுமென்று எண்ணினார். வேதம் (யோவான் 3: 34)ல் "தேவன் நமக்கு அவருடைய ஆவியை அளவில்லாமல் கொடுக்கிறார்" என்று சொல்லுகிறது. தேவன் தமது வல்லமை உன் வாழ்க்கையில் செயல்பட வேண்டுமென்று விரும்புகிறார். இது அவர் உனக்குத் தரும் ஈவாக இருக்கிறதுமல்லாமல் நீ அவருடைய சாட்சியாக இருக்க வேண்டுமென்பதும் முன்பே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாம் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை வாஞ்சையோடு நாட வேண்டுமென்று வேதம் நமக்கு போதிக்கிறதென்பதை நான் விசுவாசிக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவுக்காக வெற்றியுடன் வாழ்வதற்கும், தேவனுடைய கிரியைகளை நடப்பிப்பதற்கும் தேவையான பெலத்தை நமக்குத் தருகிறார்.

சூயாவான் ஸ்நானன் மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன் எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளைசுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினையினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் (மத்தேயு 3 :11- 17).

நாம் பரிசுத்த ஆவியின் உள்ளான பிரசன்னத்தை பெற்றுக்கொள்ளும்போது இயேசுவை நம்மை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணுகிறார். யோவான் 1: 33ல் யோவான்ஸ்நானன் அவரே (இயேசு) பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று சொன்னதை நினைவு கூரவும்.

## தேவனுடைய சில முக்கியமான பண்புகள்

இயேசு குமாரனாகிய தேவன் பரிசுத்த ஆவியினால் உற்பவித்து பிறந்தார் பின்பு யோவானால் அவர் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது பரிசுத்த ஆவியினாலெ நிரப்பப்பட்டார்.

சூவதவசனம் சொல்லுகிறது தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. (கொலோசெயர் 2 9) யோவான் 10: 30ல் இயேசு என்னைக் கண்டீர்களென்றால் நீங்கள் என் பிதாவையும் கண்டீர்கள் நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார். இயேசு தெளிவாக பிதாவின் இருதயத்தையும் சுபாவத்தையும் பிரதிபலித்தார். அவருடைய செய்கையும், பேச்சும் பிதாவை பிரதிபலித்ததுமல்லாமல், அவருடைய முழுச்சாரமும் பிதாவாகவே இருந்தது. உண்மையில் இயேசுவின் பெயர்களில் ஒன்று இம்மானுவேல் என்பதாகும். இம்மானுவேல் என்பதற்கு எழுத்தின்படி தேவன் நம்மோடிக்கிறார் என்று அர்த்தம்.

இயேசு பிதா விரும்பினதை மாத்திரம் தாம் பேசினதாகவும், செய்வதாகவும் சொன்னார். அதே நேரத்தில் அவர் முற்றிலும் வேறுபட்ட தனித்தன்மையுடையவராக இருந்தார். இதுவே விசுவாசத்தின் ஒரு பெரிய இரகசியமாகும். இயேசு ஒரே சமயத்தில் தேவனுடைய குமாரனாகவும் குமாரனாகிய தேவனாகவும் இருந்தார்

இயேசுகிறிஸ்துவை நம்முடைய இருதயங்களில் வரும்படி அழைக்கும்போது நாம் மறுபடியும் பிறப்பதுடன் கிறிஸ்துவின் சுபாவமும், குணாதிசயமும், இயல்புகளும் நமக்குள் பிறக்கின்றன. எப்படி பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய வித்தாகிய கிறிஸ்துவை கன்னிகையாகிய மரியாளின் கர்ப்பத்தில் வைத்தாரோ அதைப்போல அவைகளும் பரிசுத்த ஆவியானவரால் அங்கு வைக்கப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டிலும் பரிசுத்த ஆவியானவர் வந்தார். ஆனால் ஒரு குறிப்பிட்ட வேலைகளை நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே ஜனங்கள் மீது அவர் கடந்து வந்தார்.

அந்த நாட்களில் தேவ ஆவியானவர் மனிதருக்குள் வாசம் பண்ணவில்லை. தேவ ஆவியானவர் மனிதர்கள் மீது அடிக்கடி கடந்து வந்தபோது குறிப்பாக தாவீது, சிம்சோன் போன்றவர்களுக்கு யுத்தத்தில் அசாதாரணமான பெலத்தையும், தீர்க்கதரிசிகளான ஏசாயா மற்றும் எசேக்கியேல், தானியேல் போன்றவர்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட ரீதியில் ஆவியில் பகுத்தறியும் திறனையும் கொடுத்தார். உண்மையில் பழைய ஏற்பாட்டையும் சேர்த்து வேதாகமத்தில் உள்ள எல்லா புஸ்தகங்களையும் எழுதினவர்கள் பரிசுத்த வேத எழுத்துக்களை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதினார்கள்.

எப்படியாயினும் இயேசு முதற்கொண்டு பரிசுத்த ஆவியானவர் நிலைத்திருக்கவும், தங்கியிருக்கவும் தொடர்ந்து நம்முடன் இருக்கவும் விரும்புகிறார். இயேசு பரலோகத்திற்கு திரும்பி சென்ற பின்பு பரிசுத்த ஆவியானவரின் நிரந்தரமான ஊழியம் ஆரம்பித்தது அப்போஸ்தலர் **1 :4**ல் இயேசு தம் சிஷர்களிடம் பேசம்போது யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்கள் சில நாட்களுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்றார்.

அவர் தொடர்ந்து அப்போஸ்தலர் **1: 8**ல் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வழிகாட்டியும், ஆலோசகராகவும் இருக்கிறார். அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார். இப்பூமியில் ஊழியம் செய்ய இயேசுவை பெலப்படுத்தினவர் நமக்கும் வேதத்தின் மகத்துவங்களை விளக்கிக் காண்பிப்பதுடன் நம்மையும் பெலப்படுத்துகிறார். கிறிஸ்தவ வாழ்க்கை வாழுவதற்கு இயேசுவே நம்முடைய முன் உதாரணமாக இருக்கிறார். அவர் எப்படி பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு பெலப்படுத்தப்பட்டு ஆயத்தப்படுத்தப்பட்டாரோ அதைப் போல நாமும் இருக்க வேண்டும்.

## தேவனுடைய சத்தியம்

இன்று சபையிலுள்ள அநேக மக்கள் பெலவீனமான மற்றும் சோகையுள்ள விசுவாசத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் மனந்திரும்பியிருக்கக் கூடும். அவர்கள் தண்ணீரில் ஞானஸ்நானமும் எடுத்திருக்கக் கூடும் தேவனுடைய அருமையான வாக்குத்தத்தம் இருந்தபோதிலும் அவர்கள் பரிசுத்த ஆவியானவராலும், அவர் பெலத்தினாலும் நிரப்பப்படாமல் இருக்கிறார்கள்.

குடைசியாக நான் செய்யப்போவது உங்கள் மனதை குழப்பப் போகிறேன். இந்த் வேறுபட்ட நிலைகளில் உங்களுக்கு சில தகவல்களை அறிவிக்கவே இவைகளை இங்கு தருகிறேன். நீங்கள் கிறிஸ்தவ நடைபோடும்போது இந்த வித்தியாசப்பட்ட கீழ்கண்ட நோக்கங்களை உறுதியாக பிடித்துக் கொண்டு வாழ்கிற மக்களை நீங்கள் சந்திக்கக்கூடும்.

கன அளவுள்ள பல புஸ்தகங்கள் பரிசுத்த ஆவியானவர் என்கிற தலைப்பில் எழுதப்பட்டுள்ளன. இப்புஸ்தகத்தில் பரிசுத்த ஆவியைக் குறித்து பல்வேறு சபைகளின் வித்தியாசப்பட்ட போதனைளின் விசுவாசத்திற்கு உங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்பது என் எண்ணம் கிடையாது.

நான் ஒரு இறையியல் வல்லுநர் அல்ல. நான் வேதாகமத்தின் சாதாரண மாணவன் மாத்திரமே. இந்த முழு புஸ்தகத்திலும் எந்த ஒரு சபையோ அல்லது எந்த ஒரு பிரிவினரோ சொல்லுவதைக் கூறாமல் வேதம் சொல்லுகிறதையே உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன்.

பலவிதமான தோற்றங்களைக் குறித்து கவலைப்பட வேண்டாம் நீங்கள் சாதாரணமாக அறிந்து கொள்ள வேண்டியதென்னவென்றால் ஜனங்கள் வேதாகமத்தை பல விதங்களில் விளக்கும்போது கருத்து வேறுபாடுள்ளவர்களாக இருக்கிறார்கள். என் சபையிலுள்ள விசுவாசிகள் எல்லோரும் ஒரே மாதிரியான விசுவாசம் உள்ளவர்கள் அல்ல என்று ஒரு போதகர் ஒருமுறை சொன்னதை நான் நினைவுகூருகிறேன். அவர் தொடர்ந்து சொல்லும்போது தான் நடத்துகிற சபையிலுள்ள எல்லா விசுவாசிகளும்கூடி ஒரேவிதத்தில் வேதத்தை விளக்குகிறவர்கள் அல்ல என்றார். கடைசியாக அவர் சொல்லும்போது நானும் என் மனைவியும் கூட வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வசன விளக்கத்தைப் பொறுத்தவரை ஒத்துப்போவது கிடையாது என்றார்.

ஹிந்தப் புஸ்கத்தை நீ வாசிக்கும்போது தேவன் உன்னிடத்தில் பேசும்படியாகவும், அவருடைய சத்தியத்தை உன் இருதயத்தில் வெளிப்படுத்தும்படியாகவும் நீ ஜெபித்து தேவனிடத்தில் கேட்க வேண்டுமென்று நான் உனக்குச் சொல்லுகிறேன். நான் உன்னிடத்தில் என்ன சொல்லுகிறேன் என்பதைவிட தேவன் உனக்கு என்ன சொல்லுகிறார் என்பதே முக்கியம்.

# வாக்குத்தத்தத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்

மனித சமுதாயத்தின் சரித்திரத்தின் ஏறத்தாழ கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறறோம். இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகையை முன்னறிவிக்கிற கடைசி தலைமுறையினராக ஒருவேளை நாம் இருக்கலாம். இது உண்மையாக இருக்குமென்றால் எல்லா காலத்தையும் விட இப்பொழுது அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தின் உபதேசத்தை நன்றாக கேட்க வேண்டும். சபையானது ஞானத்தை பயன்படுத்தி முதல் நூற்றாண்டு சீஷர்களிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் தைரியத்துடன் நிற்கவும் ஏற்கனவே நமக்கு சொந்தமான ஜெயத்தில் நடைபோட வேண்டும்.

நாம் பிதாவின் வாக்குத்தத்தத்தை எட்டிப் பிடித்துக் கொள்ள வேண்டும் நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக ஆசீர்வாதத்தின் ஆவியானவர் நம்மை பெலப்படுத்த ஆயத்தப்படுத்த இடம் கொடுக்க வேண்டும். தேவன் கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்றார். (அப்போஸ்தலர்) இன்று தம்மீது பசிதாகத்தோடு இருப்பவர்களுக்காக தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார். தமக்கு தைரியத்துடன் கீழ்படிகிறவர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்.

இப்பூமியில் இதுவரைக் கண்டிராத தேவனுடைய வல்லமையை நிரூபிக்கக் கூடிய அற்புதங்களை காண ஆயத்தப்படவும், தேவன் இந்தக் கடைசி நாட்களில் முழு உலகத்திலேயும் இப்பொழுதே தம்முடைய ஆவியை தம் சிஷர்கள் மீது ஊற்றிக் கொண்டிருக்கிறார். நீங்களும் நானும் அதைக் கடந்து போவதில்லை தேவன் தம்முடைய சபை வல்லமையில் நடைபோட வேண்டுமென்று விரும்புகிற நேரம் இதுவே 100ரூ சத்துருவின்மேல் 100ரூ வெற்றி 100ரூ நேரமும்.

மத்தேயு 28ம் அதிகாரத்தின்படி நாம் சகல ஜாதிகளையும் சிஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கிறோம். இது நம்முடைய அதிகாரம் இது நம்முடைய கடமை இந்த வாக்குத்தத்தத்தை சபையானது பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டிய நேரம் இதுவே. இப்பொழுது விசுவாசியாக இருக்கிற நியும் இதில் அடங்குகிறாய் ஒருவேளை நீ புதிய கிறிஸ்தவனாக இருந்தாலும் இந்த கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்தின் பங்காக இருக்கிறாய்.

பேதுரு 1 பேதுரு 2: 9ல் நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துக்கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் என்று எழுதி உள்ளார். இது உன் கற்பனைக்கு எட்டாத ஒன்றாக இருந்தாலும் ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்தஆவியின் வல்லமையினால் இந்த உலகத்தில் தேவனுடைய பிரதிநிதியாக செயல்படுவதற்காக தேவனுடைய பரிசுத்த ஆசாரியனாக இருக்கிறான்.

## பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும்

இப்புஸ்தகத்தின் இந்தப் பகுதியை தயவுசெய்து வேகமாக படித்து கடந்து போக வேண்டாம். இன்று நாம் வாழுகிற இந்த உலகத்தில் நம் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையே இயங்க வேண்டிய உயிர்த்துடிப்புள்ள ஒன்றாக உள்ளது. ஆதியில் சிஷர்கள் நடப்பித்த அற்புதங்களை நடப்பிப்பதற்கான வல்லமை சபைக்கு உள்ளது ஆகையால் நாம் ஏன் நடப்பிக்கக் கூடாது ?

ஒரவேளை இவ்வுலகத்தில் ஆர்வமின்மை என்பது பெரிய ஒன்றாகக் காணப்படுகிறது. இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் பெரிய வித்தியாசமானதொன்றை செய்ய முடியாதென்று உணருகிறார்கள். எனென்றால் சிலர் இரட்சிக்கப்பட்டிருந்தும் இன்னும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படாமலும், ஆயத்தப்படாமலும், பெலப்படாமலும் இருப்பதினாலேயே அப்படி உள்ளது. நீங்கள் ஒரு வித்தியாசத்தை உண்டு பண்ணக் கூடும். அந்த நேரம் இதுவே நீங்கள் ஏற்கெனவே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படாமலிருந்தால் இயேசு உங்களை பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் நிரப்பப்பட இடம் கொடுங்கள் இப்பொழுதே என்னுடன் சேர்ந்து இந்த ஜெபத்தை பண்ணுங்கள்.

அன்புள்ள பரலோகப் பிதாவே உம்முடைய சீஷர்களுக்கு பரிசுத்தஆவி என்கிற ஈவை அனுப்புவதாக வேதாகமத்தில் வாக்குப் பண்ணியிருக்கிறீர் ஆண்டவரே என் வாழ்க்கையில் உம்மால் நிறைந்திருக்க வாஞ்சிக்கிறேன். உம்முடைய அளவற்ற வல்லமை எனக்குத் தேவை ஆக இப்பொழுதே என்னை நிரப்பும்படியாக தயவுசெய்து உம்முடைய பரிசுத்தஆவியை அனுப்பும். இயேசுவே என் இருதயத்தைக் கழுவி உம்முடைய விலையேறப்பெற்ற பரிசுத்தஆவியினால் என்னை நிரப்பும். இந்த வியக்கத்தக்க ஈவிற்கான நன்றி நீர் இந்த உலகத்தில் இருந்தபோது எதையெல்லாம் செய்தீரோ அதையெல்லாம் நான் செய்வதற்கும் உமக்கு சேவை செய்வதற்குமான பெரிய ஆர்வத்தை எனக்குத் தாரும். உம்முடைய மகா பெரிதான அன்பை மற்றவர்களுக்கு அறிவிக்க தயவுசெய்து என்னை பரிசுத்தஆவியின் வல்லமையினால் நிரப்பும். பரிசுத்தஆவியானவரே என் வாழ்க்கையில் உம்மை வரவேற்கிறேன். என் இருதயத்தை உமக்கு திறக்கிறேன் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பிதாவே ஆமென்.

இப்பொழுது உங்கள் இருதயத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு அவருடைய முழுமையான வல்லமையுடன் வாழுங்கள்.

# பகுதி இரண்டு



## இயேசுவில்
## நிலைத்திருத்தல்

அத்தியாயம் ஆறு

# தேவனுடைய வார்த்தையை வாசி

உனக்கு ஒரு சரீரம் உண்டு அதை நீ தினமும் போஷிக்கிறாய். அதைப் போலவே உனக்கு ஒரு ஆவி உண்டு. அதுவும் கூட தினம்தோறும் ஆரோக்கியமான ஆவிக்குரிய உணவைக் கொண்டு போஷிக்கப்பட வேண்டும்.

இப்படி நீ யோசித்துப் பார் எவ்வளவு நாட்கள் நீ சாப்பிடாமல் இருக்க முடியும்? ஒரு நாள்? பிரச்சினை இல்லை அந்த நாளின் இறுதியில் நீ எப்படி உணருவாய்?

ஒரு வாரம் சாப்பிடாமல் இருந்தால்? இது அதிக சவால் நிறைந்ததாக இருக்கும். ஒருவேளை அதையும் கூட நீ செய்யலாம். மறுபடியும் அந்த வார இருதியில் நீ எப்படி உணருவாய்? களைத்து விடுவாயல்லவா அநேகமாக பெலவீனமாகி விடுவாயல்லவா. நிச்சயமாக 30 அல்லது 40 நாட்கள் சாப்பிடாமல் இருந்து பார் உன் சரீரம் முழுவதும் பெலவீனமடைந்து நீ மரித்து போவாயல்லவா?

தேவன் நாம் உயிருடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கும் படியாக இந்த சுய ஒழுக்க விதியை நிலைநாட்டியுள்ளார். நாம் வளருவதற்கு சாப்பிட வேண்டும். நான் சாப்பிடாமல் இருப்பேன் என்கிற கோட்பாட்டை நீ நம்ப வேண்டியதில்லை இந்த விதிமுறையை நீ மீறி பின்பு என்ன நடக்கிறதென்று பார் 30 நாட்கள் 40 நாட்கள் ஒருவேளை 50 நாட்கள் கழித்து நீ மரித்து போவாய்.

இந்த ஒழுக்கவிதி ஆவிக்குரிய காரியத்திலும் உண்மையாக இருக்கிறது நம்முடைய ஆவிக்குரிய போஷாக்கு என்றால் என்ன? தேவனுடைய வார்த்தையே எவ்வளவு நாட்கள் ஆவிக்குரிய போஷாக்கை எடுக்காமல் இருக்கிறோமோ அந்தஅளவு நம்முடைய ஆவியும் பெலவீனமாகி விடும். என் ஆவியில் உள்ள கிறிஸ்துவின் ஜீவன் வளரவும் பெலப்படவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்படியாக அது போஷிக்கப்பட வேண்டும். வேதத்தை வாசிக்கும்போது அது உன் ஆவிக்கு போஷாக்கை அளிக்கிறது. அவரைத் துதிப்பதும், ஆராதிப்பதும், ஆவிக்குரிய பாடல்களைப் பாடுவதும் ஜீவத்தண்ணீரிலிருந்து பருகுவதைப் போல இருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 22: 1).

கிறிஸ்துவுடன் பெலனுள்ள மற்றும் அர்த்தமுள்ள உறவை கட்டியெழுப்ப அவருடன் நேரம் எடுத்து பேசுவதே முக்கியமான ஒன்றாக உள்ளது. நீ வேதத்தை வாசிப்பாயென்றால் அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருந்தாலும் இதிலுள்ள வார்த்தைகள் இன்றைக்கும் உன் வாழ்க்கைக்கு சம்பந்தமுள்ளதாக இருப்பதை சிக்கிரத்தில் கண்டு கொள்வாய். இந்த வேதப்புஸ்தகத்தின் பக்கங்களுக்குள் உன்னுடன் ஒருமைப்பட்டிருக்கும் ஜனங்களின் வரலாறுகளையும், கற்றுக்கொள்ள வேண்டிய புதிய பாடங்களையும் உன் ஆத்துமாவிற்கு புத்துயுரையும், தேவையான நேரங்களில் ஆறுதலையும் பெற்றுக் கொள்ளுவாய்.

# தினசரி தியானம்

இயேசு எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் (மத்தேயு 6: 11) என்று ஜெபித்தார். ஒவ்வொரு நாளும் வேதத்தை வாசித்து ஆவிக்குரிய ஆகாரத்தை உட்கொள்ள நேரம் எடுப்பது உனக்கு மிக மிக முக்கியமான ஒன்றாகும். இதைத்தான் கிறிஸ்தவர்கள் அடிக்கடி தியானித்தல் என்று குறிப்பிடுகிறார்கள்.

தியானம் என்பது ஒரு நாளில் அமைதியான நேரத்தைதேவனிடத்தில் பேசவும், அவரை ஆராதிக்கவும் பரிசுத்த ஆவியானவர் உனக்காக எதைக் கற்றுக் கொடுக்கிறாரென்பதை கற்றுக்கொள்ளவும் அர்ப்பணிப்பதாகும். தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் உன்னுடன் பேசுவதுமல்லாமல் அவர் பேசியது அந்த நாளுக்குரிய பெலத்தை உனக்குத் தரும்.

இந்த அமைதியான நேரம் காலை அல்லது மாலை நேரமாக இருக்கலாம். எவ்வளவு நேரம் எடுக்கிறோம் என்பது முக்கியமல்ல நீ செலவிடுகிற அந்த நேரத்தின் தரமே முக்கியம்.

மற்ற விசுவாசிகள் வேதத்தில் செலவிடும் நேரத்தை விட நீ அதிகமான நேரத்தை வேதத்தை தியானிப்பதற்கு செலவிடுவதினால் அவர்களை விட அதிகமாக பரிசுத்தமாகி விட முடியாது. நீ தேவனுடன் செலவழிக்கும் அமைதியான நேரம் அவர் மீது வைத்துள்ள அன்பினிமித்தம் செயல்படவேண்டுமேயொழிய கடிகாரத்தினால் செயல்படக் கூடாது.

தேவனுடன் நேரத்தை செலவழித்தல்

நீ ஒருவரை அதிகமாக நேசிக்கும்போது அவர் உனக்கு விசேஷித்தவராக இருப்பதினால் இயற்கையாக நீ அந்த நபருடன் அதிக நேரத்தை செலவழிக்க விரும்புவாய் அதே வண்ணமாக நீயும் ஆண்டவருடன் செலவழிக்கும் நேரமும் இருக்கும் அவருடன் நீ செலவழிக்கும் நேரம் ஒரு நல்ல ஒழுங்காக இருந்தாலும் அது ஒரு சமயச்சடங்காக இருக்கக் கூடாது. ஒருநாள் நீ வேதத்தை வாசிக்கத் தவறிவிட்டாயென்றால் அதைக் குறித்து குற்ற உணர்வு கொள்ள வேண்டாம். அநேக கிறிஸ்தவர்கள் வழக்கமான பக்தி வழிபாடுகளில் கட்டப்பட்டிருப்பதினால் ஆண்டவருடன் செலவழிக்க வேண்டிய அமைதியான தரமுள்ள நேரத்தின் நோக்கத்தை இழந்து விடுகிறார்கள். இதை தேவன் விரும்புவதேயில்லை.

உன் வாழ்க்கையானது பல வேலைகளை முடிப்பதற்கான கால எல்லைகளும் பணம் செலுத்தவேண்டிய விலைப்பட்டியல்களும் உள்ள அலுவல்கள் நிறைந்த ஒன்று என்பதை தேவன் புரிந்து கொண்டிருக்கிறார். நாள் முழுவதும் அவருடைய ஜீவனுள்ள பிரசன்னம் உன்னுடன் இருக்க நீ கற்றுக்கொள்ளவும் நீ ஒவ்வொரு நாளும் அவருடன் இருக்க நேரத்தை அர்ப்பணிக்க வேண்டும். பவுல் 1 தெலோனிக்கேயர் 5: 17ல் இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்றார். இதின் சாரம் அர்த்தம் என்னவென்றால் நான் செய்கிற எல்லா வேலைகளைக் காட்டிலும் ஆண்டவரே என்னுடைய ஆழ்ந்த சிந்தையாக இருக்க வேண்டும் என்பதே ஆகும் இயேசு சொன்னார் என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன். (யோவான் 15: 4) இயேசு நாம் அவருக்கு ஊழியம் செய்வதில் கனியுடையவர்களாக இருக்க நாம் நம்முடைய எல்லா நினைவுகளிலும் செயல்களிலும் எல்லா நேரத்திலும் அவருடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்று இயேசு நமக்கு சவால் விடுகிறார்.

நீ பரலோகத்தில் தேவனுடன் நித்தியஜீவனை அனுபவிக்கும்படியாக தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை பலியாகத் தந்தார் அவர் உன்னை அதிகமாக நேசிப்பதினால் உன்னுடன் அதிகமான நேரத்தை செலவழிக்க அவர் ஏங்குகிறார். நீ அவருடன் ஐக்கியம் கொள்ளவும், அவருடைய வார்த்தையை வாசிக்கவும் நேரத்தை செலவழிக்குக்கும்போது அவருடன் உள்ள உறவு வளருகிறது.

ஊன்னுடைய தியான நேரம் உனக்கு ஒரு விசேஷித்த நேரமாக மாறவும் உனக்கு அருகில் தேவனுடைய பிரசன்னத்தை உணரக்கூடிய ஒரு நேரமாக இருக்கவும் ஒவ்வொரு நாளும் நீ வாஞ்சிக்கும் நேரமாக இந்த நேரம் இருக்கவும், இப்படிப்பட்ட ஒரு மனநிலை நாள் முழுவதும் உன்னை சுமந்துக்கொண்டு செல்லும் என்பதில் என் மனதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அவருடன் உன் உறவை கட்டியெழுப்ப நடைமுறை வழியென்னவென்றால் அவருடைய வார்த்தையில் நேரத்தை செயவழிப்பதின் மூலமேயாகும்.

## தேவனுடைய குரலை கேட்பது

கிறிஸ்தவம் என்பது ஜீவனுள்ள தேவனுடன் வைத்திருக்கிற ஒரு உறவு என்பதை நினைவுகூற வேண்டும். நீ ஒரு நபருடன் பேசாமல்

அவருடன் உறவு கொள்ள இயலாது தேவனுடன் தொடர்பு கொள்ளுவதற்கு பல்வேறு வழிகள் உள்ளது. ஆம் தேவனும் உனக்கு மறுஉத்தரவு கொடுப்பார். அதற்கு நீ வானத்திலிருந்து திடீரென்று மின்னலையோ அல்லது மேகங்களிலிருந்து ஒரு பெரிய குரலையோ எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. தேவன் தம் பிள்ளைகளுடன் பல்வேறு வழிகளில் பேசுகிறார்.

அவைகளில் ஒன்று தேவன் தம் வார்த்தையின் மூலம் பேசுகிறார். நம்முடைய தியான நேரங்கள் மிக மிக முக்கியமான நேரங்கள் என்பதற்கு இது மற்றுபொரு காரணம். அந்த நேரங்கள் தேவன் உன்னிடம் பேசுவதற்கான சந்தர்ப்பங்கள் அவர் உன்னிடம் பேசுவதை ஏற்றுக்கொள்ள நீ உன் இருதயத்தை திறப்பாயென்றால் அவர் சத்தத்தை, ஞானத்தை மனதில் அறியும் பகுத்துணர்வை வெளிப்படுத்துவதுமன்றி உன் வாழ்க்கைக்குப் பொருத்தமான நடைமுறை உதவிகளையும் செய்வார்.

தேவன் பேசும் மற்றுமொரு வழி மெல்லிய குரலில் பேசுவதாகும் (1 இராஜாக்கள் 19 :12) அவருடைய குரல் பொதுவாக காதில் கேட்கக்கூடிய ஒன்றாக இருக்காது. ஆனாலும் அதைக் கேட்க முடியும். அதிக நேரங்களில் நீ உன் இருதயத்தில் உணரும் சமாதானமே ஆண்டவர் உன்னுடன் பேசுகிறாரென்பதற்கான தைரியத்தை உண்டுபண்ணுகிறது.

நம் இருதயத்தில் உள்ள சமாதானம் என்கிற விழிப்புணர்வின் மூலமாகவே அடிக்கடி தேவன் நம்முடன் பேசி வழிநடத்துதல்களை தருகிறார். பிலிப்பியர் 4 :7 அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும் என்று சொல்லுகிறது. கிறிஸ்தவர்களாக இருக்கிற நாம் தேவசமாதானம் நம் இருதயங்களை ஆளுவதற்கு இடம் தரவேண்டும் (கொலோசெயர் 3 :15)

எப்படியிருந்தாலும் அவருடைய சத்தம் பரிசுத்த ஆவியின் மூலமாக பரிசுத்த வசனங்கள் மூலமாக சீராக அவர் உன்னுடன் பேசிக் கொண்டே இருப்பார்.

## என் ஆடுகள் என் சத்தத்தை அறியும்

ஹியேசு வேதத்தில் குறிப்பிடப்பட்ட பதங்களில் ஒன்று மேய்ப்பன் என்பதாகும். நாம் அவருடைய ஆடுகள் என்று அழைக்கப்படுகிறோம் 23ம் சங்கீதத்தில் உள்ள "கர்த்தர்" என் மேய்ப்பராய்இருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன் என்ற வசனம் உனக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்.

யோவான் எழுதின புஸ்தகத்தில் இயேசு சொன்னார் வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான். வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான். ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு அவைகளை வெளியே விட்ட பின்பு அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல் அவனை விட்டோடிப்போம் என்றார்.

எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமான நேரத்தை ஆண்டவருடன் செலவழிக்கிறாயோ அவ்வளவுக்களவு அவர் குரலை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும் தொலைபேசியின் மறுபக்கத்திலிருந்து வரும் நண்பனின் குரலை நீ எப்படி தெரிந்துகொள்ளுகிறாயோ அதைப்போல நீ ஆண்டவரை அறிந்துக்கொள்ள அதிக நேரம் செலவழிப்பாயானால் அவர் உன்னிடம் பேசும்போது நீ எளிதில் புரிந்துக்கொள்ள முடியும். நீ உன்னுடைய மேய்ப்பனின் குரலை அறிந்து அவரை பின்பற்றி செல்லுவாய் நீ அந்நியனுடைய சத்தத்தைக் கேட்டு அவனைப் பின்பற்றி செல்லமாட்டாய்.

சூதவனுடைய சத்தத்தைக் கேட்கிற விஷயத்தில் உனக்குக் குழப்பம் அல்லது சந்தேகம் எழும்புமென்றால் அதைக்குறித்து தேவனிடம் ஜெபத்தில் பேசு. தேவன் உன்னிடத்தில் பேசுவதில்லையென்றும் மற்றும் நீ உன் எண்ணத்தில் கேட்கிற சத்தம் உன்னுடைய வெறும் கற்பனையே என்று நீ எண்ணுவதில் பிசாசு ஆனந்தம் கொள்ளுகிறான் பிசாசின் பொய்கள் உன்னை மேற்கொள்ள விடாதே.

ஒருவேளை நீ குழப்பத்துடன் இருந்தால் தேவன் உனக்கு உதவி செய்யும்படி அவரிடம் கேள். (1 கொரிந்தியர் 14 :23)ல் தேவன் குழப்பத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். நீ அவரைக் கேட்பாயென்றால் அவர் உனக்குச் சமாதானத்தைத் தந்து தமது பதிலை உறுதிப்படுத்துவார் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமான காரியங்களைக் கேட்டு அதை விசுவாசிக்கும்போது நீ அவைகளை சரிசெய்து கொள்ளலாம் தேவன் எப்பொழுதும் தன் எழுதப்பட்ட வார்த்தையின்படியே செயல்படுவாரேயன்றி அவருடைய வார்த்தைக்கு ஒருபோதும் முரண்பாடாக செயல்படமாட்டார்.

# உனக்குத் தேவனுடன் நேரடியான தொடர்பு உள்ளது

சூதவன் மற்றவர்கள் மூலமும் உன்னுடன் பேசுவார். எப்படியானாலும் வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. (2 பேதுரு 1: 20) மற்றப்படி சொல்லப்போனால் தேவனுடைய சித்தத்தைக் குறித்துப் பேச ஒரு மனிதனை தேவன் பயன்படுத்தும்போது ஒரு உண்மையான தீர்க்கத்தரிசன வார்த்தையானது வேதவசனத்தையும், ஏற்கெனவே தேவன் உன்னுடன் பேசின காரியத்தையும் உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும். உன்னுடைய வாழ்க்கையில் நீ பெற்றுக் கொண்ட ஆலோசனையானது கிறிஸ்துவை நம்புகிற தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்படுகிறவர்களிடத்திலிருந்து வந்துள்ளதா? என்பதை நிச்சயப்படுத்துவது முக்கியமான ஒன்றாகும்.

ஒரு புதிய விசுவாசி அறிந்துக்கொள்ள வேண்டிய துக்ககரமான ஆனால் மிக முக்கியமான காரியம் என்னவென்றால் சில கிறிஸ்துவர்கள் தாங்கள் தான் மற்றவர்களுக்கு தொனிக்கும் தேவனுடைய குரல் என்பது போல நடித்து அவர்களைக் கட்டுப்படுத்த முயற்சி செய்கிறார்கள். உனக்குள் இருக்கிற தேவனுடைய ஆவியானவரே ஒருவர் எனக்கு தேவனுடைய இருதயத்தை தெரியப்படுத்துகிறாரா இல்லையா என்பதை சொல்ல முடியும். மற்ற ஜனங்கள் உன்னை திறமையாகக் கையாளுவதற்கு எடுக்கும் முயற்சிகளைக் குறித்து ஜாக்கிரதையாக இரு ஜனங்கள் மெய்யாகவே தவறானவர்களாக இருக்கக் கூடும் தெய்வீக ஆலோசனையானது தேவனுடைய வார்த்தையில் வேரூன்றி அவருடைய சமாதானத்தில் வரும்.

யாரோ ஒருவர் உனக்குச் சொல்லுகிறக் காரியத்தைக் குறித்து தேவன் ஏற்கெனவே உன்னுடைய ஆவியில் பேசாமலிருந்தால் அந்தச் செய்தியானது தேவனிடத்திலிருந்து வந்த செய்தியல்ல என்பதை நீ கற்பனை செய்துக் கொள்ளலாம். நமக்கு கற்பிக்கப்படுகிற இருதயம் இருப்பதுடன் நம்முடைய வாழ்க்கையில் ஆவியினால் வழிநடத்தப்படுகிற மக்கள் தேவனுடைய சத்தியங்களைப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையைக் குறித்து மற்றவர்களிடத்திலிருந்து வரும் கற்பனைகளை, திடீரென ஏற்படும் மனத்தூண்டுதல்களை, ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்ளக் கூடாது. மற்ற ஒருவர் சொல்லுகிற வார்த்தை தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப் போகவில்லையென்று நீ உன் ஆவியில் உணர்ந்தால் உடனே வெளியேற்றும் பொத்தானை அமுக்கு.

தேவனிடத்திலிருந்து உனக்கு நேரடியான தொடர்பு இருப்பதுடன் உனக்கும் தேவனுடன் நேரடியான தொடர்பு உண்டு. தேவன் நம்முடைய வாழ்க்கையை நடத்துவதற்கு ஜனங்களை உபயோகப்படுத்துவது இல்லையென்றாலும் நம்முடைய வாழ்க்கையில் உள்ள ஒன்றை உறுதிப்படுத்த, உற்சாகப்படுத்த, மற்றும் கரிசனை கொள்ள அவர் மற்ற ஒரு கிறிஸ்தவரை பயன்படுத்தக் கூடும். தேவனே நம்மை வழிநடத்துகிறார் அவர் தம்முடைய வார்த்தையின் மூலமாக நம்முடைய இருதயத்தில் உண்டாகும் மெல்லியக் குரலின் மூலமாக மற்ற நேரங்களில் அதை உறுதிப்படுத்த வேறொரு நபர் மூலமாக வழிநடத்துதலைத் தருகிறார்.

வேதம் சொல்லுகிறது "பிரியமானவர்களே! உலகத்தில் அநேகங்கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்து அறியுங்கள் (யோவான் 4 :1).

முதல் கண்ணோட்டமாக பரிசுத்தமானதைக் கொண்டு அசுத்த ஆவியை எளிதாகக் கண்டுக்கொள்ளலாம் என்று நீனைக்கலாம் ஆனால் எச்சரிக்கையாக இரு. அது ஆச்சரியமல்ல சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே (2 கொரிந்தியர் 11: 14 ,15) என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது.

நீ எந்த அளவிற்கு தேவனை அறிந்து வைத்திருக்கிறாயோ அந்த அளவிற்கு சுலபமாக போலியான காரியத்தை அடையாளம் கண்டுக் கொள்ளலாம். சாத்தானானவன் ஏமாற்றுகிறவனும், பொய்களைச் சொல்லி வழி விலகச் செய்வதில் திறமையுள்ளவனாகவும் இருக்கிறான். உன் ஆவிக்குரிய கால்களில் நீ ஊன்றி நின்று ஜெபித்து அந்த ஆவிகள் தேவனிடத்திலிருந்து வந்தவைகளா என்பதை நிச்சயப்படுத்த சோதித்து அறிய வேண்டும். இந்த ஒரு காரணத்திற்காகவே உன்னுடைய தினசரி தியான நேரங்களில் ஆண்டவருடன் நெருங்கி இருக்க வேண்டும். அவருடன் பேசுவதற்கு அவர் சத்தத்தை கேட்பதற்கு அவரை ஆராதிப்பதற்கு மற்றும் அவருடைய வார்த்தையை வாசிப்பதற்கு நாம் நேரத்தைசெலவழிப்பதின் மூலம் அவருடையக் குரலை கற்று உணர்ந்துக் கொள்ள முடியும் இந்தப்பிரகாரம் எந்த உருவத்திலும் வருகிற வஞ்சகத்திலிருந்து நீ பாதுகாக்கப்படுவாய்.

அத்தியாயம் ஏழு

# ஆராதித்து ஜெபம் பண்ணு

உன்னுடைய தியான நேரத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்குள் வந்து அவரை ஆராதித்து அவருடன் பேசுவதின் முக்கியத்துவத்தைக் குறித்து சற்றுக் கூடுதல் நேரம் எடுத்து இந்த அதிகாரத்தில் உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் கிறிஸ்தவர்களுக்கு ஆராதனையும் ஜெபமும் முக்கியமானவைகள் அவருடைய பிரசன்னத்திற்குள் நாம் பிரவேசிப்பதோடு அவருடைய பிரசன்னத்திலேயே அநேக காரியங்கள் சாத்தியமாகிறது.

அவருடன் நேரம் செலவழிப்பதின் மூலம் நீ அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மறுரூபப்படுவாய். மாற்றப்படுவாய் இதுதான் உனக்காக தேவன் வைத்திருக்கிற இலக்காகும். கடந்து போகிற ஒவ்வொரு நாளிலும் உன்னை இயேசுவைப் போல உருவாக்குவது.

உன்னுடைய பயங்கள், ஏமாற்றங்கள், காயங்கள் மற்றும் பிரச்சினைகளை ஆண்டவரிடத்தில் சரணடையச் செய்ய ஆராதனையும் ஜெபமும் உதவி செய்யும் அவர் மாத்திரமே உன் போராட்டங்களுக்கான பதில்களை வைத்திருக்கிறார். என்பதற்கு ஆராதனையும் ஜெபமுமே உன் அங்கீகாரமாக உள்ளது. மற்றும் உன் சொந்த பெலத்தைக் கொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வை நீ பெற இயலாது.

நீ உண்மையாகவே தேவனை அறிய விரும்பினால்; அவர் உன்னை மாற்றவும், மறுரூபப்படுத்தவும் நீ விரும்பினால்; நீ அவருடன் ஒரு நெருங்கிய உறவை வைத்துக் கொள்ள ஆவலுடன் விரும்பினால்; உனக்கும் மற்றவர்களுக்கும் பரிபூரணத்தை சுகத்தைப் பெற்றுக்கொள்ள அவருடைய வல்லமையும், பெலனும் உனக்கு அவசியம் என்ற உண்மையைக் கண்டறிந்தால் ..... நீ அவரை ஆராதிக்கவும், அவருடன் பேசவும், தேவனுடனும், அவர் பிரசன்னத்திலும் நேரத்தை செலவழிக்க வேண்டும்.

## ஆராதனை என்றால் என்ன?

தேவன் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஆராதனை செய்வதற்கான ஆவலையும் விருப்பத்தையும் வைத்துள்ளார். நாம் நம்முடைய அர்ப்பணிப்பு மற்றும் வழிபாட்டை அவருக்கு நேராகத் திருப்பும்போது தேவன் அந்த ஆவலை திருப்திப்படுத்த விரும்புகிறார்.- ஒரே உண்மையுள்ள தேவனுக்கு நேராக.

மூலத்தரப்பட்ட சபைப் பாரம்பரியங்கள், மற்றும் நாகரீகங்களில் ஆராதனை என்பது கணக்கற்ற வழிகளில் விளக்கப்பட்டுள்ளது. ஆனாலும் தேவனை உண்மையாக கனம் பண்ணி கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஆவியால் வழிநடத்தப்பட்ட ஆராதனை எப்பொழுதும் “நன்றி” “வியப்பு”, மற்றும் “வழிபாடு” கொண்டதாக இருக்கும். எளிமையாகச் சொன்னால் “ஆராதனை” என்பது இரண்டு வார்த்தைகள் கொண்ட திருமணமாகும். விலைமதிப்புள்ள மற்றும் கப்பல் என்ற வார்த்தைகள் கொண்ட திருமணமாகும். நாம் உண்மையாக ஆராதிக்கும்போது அவருடைய விலைமதிப்பையும் அல்லது பெருமதிப்பையும் எழுத்தின்படி நாம் நம் உள்ளக்கருத்தை அவருக்குத் திருப்பித் தெரிவிக்கிறோம்.

## ஏன் ஆராதனை?

அவர் உன் ஆராதனை அவருக்குத் தேவை என்பதால் அவர் உன்னை அவரை ஆராதிக்கச் சொல்லவில்லை. அவருடன் உனக்கு நெருங்கிய உறவு தேவையாக இருப்பதினாலும் உன்னுடைய வழிபாட்டிற்கு அவர் முழுவதும் தகுதியுடையவராக இருப்பதினாலும் நீ அவரை ஆராதிக்கவேண்டுமென்றும் விரும்புகிறார்.

நீ ஆண்டவரை ஆராதிக்கும்போது உன்னைக் காட்டிலும்உயர்ந்த ஆற்றல்மிக்க ஒருவர் இருப்பதை உண்மை என்று ஒப்புக்கொள்ளுகிறாய். நீ ஜீவனுள்ள தேவன் ஒருவர் உண்டென்பதையும் அவர் உன் வாழ்க்கையின் ஆண்டவரென்பதையும் அங்கீகரிக்கிறாய். இது உன் வாழ்க்கையில் நீ சந்திக்கிற எல்லா சூழ்நிலைகள் மீதும் ஜெயம் எடுப்பதற்கு அவருடைய பெலத்தை இழுத்துக்கொள்ள மூலகாரணமாக இருக்கும்.

ஆராதனையானது இந்த உலகத்தின் எல்லா கடுந்துயரங்களிலிருந்தும் விடுவித்து உன்னை உயரத்தில் தூக்கி பின்பு உன்னை ஆவி மண்டலத்தில் கொண்டு போய் நிறுத்தும். அங்கு தேவன் தம்முடைய பிரசன்னத்தை உன் மீது பெய்யப்பண்ணி தாம் எல்லாவற்றின் மீதும் கட்டுப்பாடு உடையவர் என்பதை உறுதிப்படுத்துவார்.

ஒரு பழைய துதிப்பாடல் சொல்லுகிறது ஓ என்ன ஐக்கியம் ஓ என்ன தெய்வீக மகிழ்ச்சி நித்திய தோள்களில் சாய்ந்திருப்பேன் உண்மையான ஆராதனையானது ஜீவனுள்ள தேவனுடன் கொள்ளும் நெருங்கிய சிநேகத்தின் மூலம் நம்முடைய கவலைகளுக்கு மாற்றாக நம்பமுடியாத மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும். சமாதானம் நிறைந்த இடத்திற்கு நம்மைக் கொண்டு வருகிறது.

## நான் எப்படி தேவனை ஆராதிக்க வேண்டும்?

தேவனை ஆராதிப்பதும், துதிப்பதும் இசையில் மேற்கொள் அடங்கிய மாதிரியாக நினைவுகூறப்பட்டுள்ளது. என்றாலும் தேவனுக்கு உண்மையான ஆராதனையை வெளிப்படுத்த நிஜமாக பல வழிகள் உண்டு.

சூவதம் சொல்லுகிறது பூமியின் குடிகளே நீங்களெல்லாரும் கர்த்தரை நோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள். முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள் சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுங்கள். சுரமண்டலத்தாலும் கீத சத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள். கர்த்தராகிய ராஜாவின்

சமூகத்தில் பூரிகைகளாலும், எக்காள சத்தத்தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள் (சங்கீதம் 98: 2, 6) இசைக்கருவிகளைக் கொண்டு இன்னிசை உண்டுபண்ணுவது, பாடல்களைப் பாடுவது, களிகூர்ந்து சத்தமிடுவது போன்ற எல்லாம் தேவனைத் துதிப்பதற்கான உணர்வுகளை வெளிப்படுத்துவதாகும். நீ ஒரு இசைக்கலைஞனாக இருந்தால் உன் இசைக்கருவியைக் கொண்டு தேவனுக்கு ஆராதனை செய். அவர் உனக்கு அந்தத் தாலந்தையும் திறமையையும் தந்திருப்பதினாலே நீ அவருக்காக வாசிக்கும்போது நீ அவருக்கு ஆராதனை செய்து மகிமைப்படுத்துகிறாய் நீ இப்படிச் செய்யும்போது தேவனும் நீயும் ஆசிர்வதிக்கப்படுகிறீர்கள்.

நான் வாசிக்கக் கூடிய மிகச் சிறந்த இசைக்கருவி என் இரண்டு சொந்தக் கரங்களே சகல ஜனங்களே கைக்கொட்டி தேவனக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள் (சங்கிதம் 47: 1) கைக்கொட்டுவது ஆராதனையின் ஒரு முறையாகும்.

பாடல்களை பாடுவது ஆராதனையின் ஒருமுறை என்று சொல்லக் கூடிய வசனங்களால் வேதம் நிறைந்துள்ளது. இந்த ஒரு வசனம் மாத்திரம் நம்மை நான்கு முறை பாடச் சொல்லுகிறது தேவனைப் போற்றிப் பாடுங்கள். நம்முடைய ராஜாப் போற்றிப் பாடுங்கள் பாடுங்கள். (சங் 47: 6) தேவனைத் துதிப்பதற்கு நீ ஒரு பாடல் வல்லுனஞுக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. நீ இருதயத்தின் ஆழத்திலிருந்து பாடுபவதை அவர் கேட்கிறாரேயொழிய உன் தொண்டையின் சத்தத்தை அவர் கேட்பதில்லை.

முகிழ்ச்சியின் ஆர்ப்பரிப்பும் கூட ஆராதனையே தேவனுடைய ஜனங்கள் சத்தமிட்டதைக் குறித்து 30க்கும் மேற்பட்ட சான்றுகள் வேதத்தில் உள்ளன. சங்கிதம் 5: 11 சொல்லுகிறது உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து எந்நாளும் கெம்பீரிப்பார்களாக நீர் அவர்களைக் காப்பாற்றுவிர். உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக சங்கிதம் 32 : 11 சொல்லுகிறது நீதிமான்களே கர்த்தருக்கள் களிகூருங்கள் துதிசெய்வது செம்மையானவர்களுக்குத் தகும் சங்கிதம் 47: 1 சொல்லுகிறது சகல ஜனங்களே கைகொட்டி.

## தேவனுக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

தேவனிடத்தில் சத்தமிடுவது ஒருவேளை புதுமையாக இருக்கலாம். இப்படி யோசித்துப்பார் ஒரு விளையாட்டு நிகழ்ச்சியில் நீ இருப்பாயென்றால் உன்னுடைய விளையாட்டுக் குழு மைதானத்தில் நுழையும்போது வழக்கமாக நீ என்ன செய்வாய்? நீ சத்தமிடுவாய் நீ ஆதரிக்கிற விலையாட்டுக்குழு ஆட்டத்தில் கெலிப்பெண்கள் பெற்றால் இன்னும் அதிகமாக சொன்னால் அது வெற்றி பெற்று விட்டால் நீ பரவசமடைவாயல்லவா? நீ வெற்றியின் சத்தமிடுவதை காண முடிகிறதா? ஆந்த முழு அரங்கமும் கூச்சலாலும் கைக்கொட்டும் சத்தத்தாலும் நிறைந்திருக்மல்லவா? அப்படியே தேவனும் உனக்காக சண்டையிட்டு ஒரு பெரிய யுத்தத்தை ஜெயித்திருக்கிறார். ஒரு கிறிஸ்தவன் ஏன் பரவசத்துடனும், மகிழ்ச்சியுடனும் தேவன் எடுத்த வெற்றிக்காகவும் சத்தமிட விரும்புகிறான் என்பது முழுமையாக புரிந்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

சிலர் தேவனை ஆராதிக்கும்போது அவருக்கு முன்பாக நடனம் பண்ணுகிறார்கள். வேதம் சொல்லுகிறது கர்த்தருடைய ஆவியானவர் தாவிதின் மீது வந்ததினால் அவன் தன் முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான். (2 சாமுவேல் 6 : 14).

## கொடுப்பதும் ஆராதனையின் ஒரு முறையாகும்

தேவனை ஆராதிப்பதற்கு சிறந்த வழி பணத்தை காணிக்கையாக அவருக்குக் கொடுக்கிற தனிச்சலுகையின் மூலம் ஆகும். இந்த காணிக்கைகள் பொதுவாக தசமபாகங்கள் என்று அழைக்கப்படுகிறது. எளிமையான அர்த்தம் என்னவென்றால் அவர் உனக்குத் தந்திருக்கும் எல்லாவற்றிலேயும் 10ரூ ஐ தேவனுக்குத் திருப்பித் தருவதாகும்

வேதம் தசமபாகம் கொடுப்பதைக் குறித்து மல்கியா 3: 8 - 12ல் போதிக்கிறது.

முனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள் எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். துசமபாகத்திலும், காணிக்கைகளிலுந்தானே நீங்கள் சபிக்கப்பட்டவர்கள் ஜனத்தாராகிய நீங்கள் எவ்லோரும் என்னை வஞ்சித்தீர்கள் என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கம்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்துஇடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன். அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை வெளியிலுள்ள திராட்சைக்கொடிபழமமில்லாமற் போவதுமில்லை அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான் என்பார்கள். தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஹிந்தப் பகுதியில் கொடுப்பதற்கான தேவனுடைய கட்டளையில் ஆரம்பித்து அதைத் தொடர்ந்து தேவனிடத்திலிருந்து ஒரு வாக்குத்தத்தமும் அத்துடன் கீழ் படிகிறவர்களுக்கு ஆசிர்வாதங்கள் கிடைக்கும் என்கிற தெளிவான வளர்ச்சியைக் காண்கிறோம். அவருடைய ஜனங்கள் அவருக்கு தசமபாகத்தை கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்பது தெளிவாகிறது அப்படி அவர்கள் தேவனுக்குக் கொடுக்காமல் இருந்தால் அது "வஞ்சித்தல்" ஆகும்.

தேவனுக்குக் கொடுப்பதில் உள்ள பிரச்சனையின் உள்பகுதி என்னவென்றால் நம் இருதயத்தின் மனோ நிலையே ஆகும். தேவன் நம்மைப் பார்த்து நீ என்னை நம்புகிறாயா ? என்று கேட்பதற்கு ஒரு வழியாக தசமபாகம் உள்ளது. உனக்குத் தெய்வீக உள்ளக் காட்சி இருக்குமென்றால் உனக்குள்ள எல்லாம் தேவனுடையதே என்று கண்டுக்கொள்ளுவாய். தசமபாகம் என்பது தேவன் உன்னை ஆசிர்வதித்துக் கொடுத்ததிலிருந்து ஒரு பகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுக்கிற ஒரு எளிய வழியாகும். இதை நீ செய்வதினிமித்தம் அவர் உன்னை போஷிப்பதற்காக மற்றும் உன் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் அவரை வழிபடுவதற்காக நீ அவருக்கு நன்றியறிதலுள்ளவனாக இருப்பதை நிருபிக்கிறாய். ஒருவேளை தசமபாகம் கொடுப்பதற்கான நிறைய பணம் சம்பாதிக்கவில்லையென்று நீ கவலைப்படுவாயென்றால் நீ விசுவாசத்தில் வளருவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும் தேவன் உன் பணத்தை பெற்றுக் கொள்ளுவதற்கு தகுதியுள்ளவராக இருப்பதினால் அதை அவருக்குக் கொடுக்காமல் வைத்துக்கொள்ளுவது திருடுவதாகும்.

முல்கியா புஸ்தகத்திலுள்ள வியக்கத்தக்க மற்றும் வல்லமையான வாக்குத்தத்தங்களை மறக்க வேண்டாம் நீ தசமபாகத்தைக் கொண்டு வந்து அவரைக் கனப்படுத்தும்போது நீ அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையை அவர் ஆசிர்வதிப்பார் தேவன் உண்மையுள்ளவராகையால் அவர் உன் கீழ்படிதலுக்காக உன்னைக் குனப்படுத்துவார்.

## பண்டகசாலை என்றால் என்ன?

மல்கியா புஸ்தகத்தில் நாம் நம்முடைய தசமபாகங்களை பண்டகசாலைக்கு கொண்டுவரவேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளோம். பண்டகசாலை என்ற அமைப்பைக் குறித்து அநேக விவாதங்கள் உண்டு. எழுத்தின்படி பண்டகசாலை என்பது ஜனங்களின் தேவைகள் சந்திக்கப்படுவதற்கான உணவுப் பொருட்கள் வைக்கப்படும் இடம் என்று நான் விசுவாசிக்கிறேன். ஒரு நபர் தன் தசமபாகத்தைக் கொண்டு வந்து தேவனைக் கனப்படுத்தும்போது அவர்கள் பயிர்களை ஆசீர்வதிப்பேன் என்பது தேவனுடைய வாக்குத்தத்தம் ஆகும். உன்னுடைய பயிர் என்பது உன் குடும்பாமாகவோ அல்லது ஒரு வியாபாரமாகவோ அல்லது ஒரு வேலையாகவோ இருக்கலாம். தேவன் உண்மையுள்ளவர் மற்றும் நீ கீழ்படிவதற்காக உன்னை ஆசிர்வதிப்பார்.

இணையான செல்தடத்தின்மேல் உன் ஆவிக்குரிய பண்டகசாலை என்பது உன்னுடைய வாழ்க்கையின் சாரமான ஆவிக்குரிய ஊட்டத்தை சேகரித்துக் கொடுக்கிற சபையாக அல்லது ஒரு ஊழியமாக இருக்கலாம்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து திருச்சபைக்கு இப்படியாக நான் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? என்று எடுத்துரைத்துள்ளார் (1 கொரிந்தியர் 9 : 11) கொரிந்து சபையிலிருந்த விசுவாசிகளுக்கு மிகுதியான செல்வச்செழிப்பு இருந்தது. ஆனால் பவுலும் மற்றத் தலைவர்களும் அவர்கள் வாழ்க்கையில் மூலதனம் செய்த ஆன்மீக ஆன்மிக ஞானநன்மைகளின் மீது சரியான விலைமதிப்பை அவர்கள் வைக்கவில்லை.

நீ ஆண்டவருக்குள் வளரும்போது நீ கிறிஸ்துவுக்குள் வளருவதற்கு உனக்கு உதவி செய்யும் ஊழியங்களைக் குறித்தும் இந்தப் பண்டக சாலைகளுக்குள் எப்படி விதைக்க வேண்டுமென்பதைக் குறித்ததான பகுத்தறிதலைத் தரும்படி ஆண்டவரிடத்தில் கேள்.

## விதை விதைத்தல்

இந்த தசமபாகம் பழைய ஏற்பாட்டில் மாத்திரம் விவாதிக்கப்பட்டிருப்பதால் தேவன் இதை அந்த நாட்களுக்கு மாத்திரம் திட்டம் பண்ணியுள்ளார் என்ற அர்த்தம் கிடையாது. இல்லை தேவன் இன்னும் தம்முடைய ஜனத்திடத்திலிருந்து தசமபாகத்தை எதிர்பார்க்கிறார்.

அநேகக் கிறிஸ்தவர்கள் "தசமபாகம்" என்பது பழைய ஏற்பாட்டின் காலத்தில் போதனை செய்யப்பட்டபடியால் இன்று தேவனுக்கு அவர்கள் வருமானத்தில் 10ரூ கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்கிற பொய்யை நம்புகிறார்கள். நாம் இப்பொழுது புதிய ஏற்பாட்டின் (கிருபையின்) காலத்தில் வாழ்கிறபடியால் நாம் இனிமேல் எப்பொழுதும் தசமபாகம் என்கிற அடிப்படை உண்மையை கனப்படுத்தவேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் வாதம் செய்கிறார்கள்.

ஹிந்தப் புஸ்தகத்தில் தேவனுக்குக் கொடுத்தல் பெற்றுக் கொள்ளுதல் விதைக்கும் நேரம் மற்றும் அறுவடைக்காலம் தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களில் வாழ்வது மற்றும் உன்னை செழித்தோங்கச் செய்ய அவர் வைத்துள்ள திட்டம் என்கிற வியக்கத்தகும் மூலக்கோட்பாட்டை இந்தப் புஸ்தகத்தின் மூலம் நான் உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் இப்பொழுது நான் இந்த விதையை உன்னுடைய இருதயத்தில் விழப்பண்ணுகிறேன் பிற்பாடு தசமபாகம் மற்றும் தேவனுடைய வார்த்தையில் கொடுப்பதைக் குறித்து பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளிலும் உள்ள ஒழுக்கவிதிகளை நீயே கவனமாக கற்றுத் தெரிந்துக் கொள்ளலாம்,

இங்கு நீ சிந்திக்கும்படியாக ஒரு சில உதாரணங்கள்

- பழைய ஏற்பாட்டின் தொடக்க அத்தியாயங்களுக்கு கடந்து செல்வோமானால் தேவன் மோசேக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதற்கு முன்பாகவே ஆபிரகாம் தன் தசமபாகத்தை மெல்கிசேதேக்கு என்னும் அந்நாட்களில் இருந்த பிரதான ஆசாரியனுக்கு கொடுத்தான் (ஆதியாகமம் 14: 17 - 20)

- தேவன் தாம் இந்தப் பூமியை இனிமேல் ஒருபோதும் வெள்ளத்தினால் அழிக்கப்போவதில்லை என்பதற்கான உடன்படிக்கையை நோவாவுடன் ஏற்படுத்தினபோது அவர் அவனிடத்தில் பூமியுள்ள நாளளவும் விதைப்பும், அறுப்பும் அழிவதில்லை என்று வாக்குப்பண்ணினார். (ஆதியாகமம் 8 : 22) தேவன் விதைகள் விதைக்கப்படும்போது அவைகளின் பலன் அறுவடைகளாக இருக்குமென்று தெளிவாகக் கூறுகிறார்.

- நிற்காலத்தில் யாத்திராகமம் புஸ்தகத்தில் தேவன் நியாயாப்பிரமாணத்தை சீனாய்மலையின் மேல் மோசேயிடம் கொடுத்தபோது தேவனுடைய ஜனத்துக்கு தசமபாகம் கொடுப்பதை ஒரு அடிப்படை உண்மையாக உறுதிப்படுத்தினார்.

- அடுத்து புதியஏற்பாட்டில் பவுல் கொடுத்தல் மற்றும் விதைத்தல் மற்றும் அறுவடை செய்தல் என்கிற அடிப்படை உண்மையை வலுப்படுத்த அவர் எழுதும்போது பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில் சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல கட்டாயமாயுமல்ல. தன் தனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும் நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். (2 கொரிந்தியர் 9: 6 - 8) என்கிறார்.

அவருடைய வார்த்தையின் ஆரம்பத்திலேயே தேவன் தசமபாகம் மற்றும் விதைக்கும் நேரம் மற்றும் அறுவடைக் காலம் என்கிற அடிப்படை உண்மையை உறுதிப்படுத்தியுள்ளார். பின்பு இந்த அடிப்படை உண்மைகளை பழைய மற்றும் புதிய ஏற்பாடு முழுவதும் கூறியிருக்கிறார். தேவன் உனக்குத் தந்ததிலிருந்து குறைந்த பட்சம் 10ரூ ஆண்டவருக்கு திருப்பிக் கொடுக்கும்போது உன்னுடைய காணிக்கை தேவனுடைய இராஜ்ஜியத்தில் நீ விதைக்கும் விதையாக மாறிவிடுகிறது. தேவன் இந்த விதையை எடுத்து ஒரு அறுவடையை சிருஷ்டிக்க பயன்படுத்தி அதைக் கொண்டு உன் வாழ்க்கையையும் மற்றும் மற்றவர்களுடைய வாழ்க்கையையும் ஆசிர்வதிக்க பயன்படுத்துகிறார். ஆண்டவர் உன்னை உபயோகப்படுத்துவதுடன் உன்னுடைய செல்வத்தையும் அவருடைய ஊழியத்திற்கு பயன்படுத்த விரும்புகிறார். தேவனுடன் கூட்டாளியாக இருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்.

நீ தேவனுக்கு தசமபாகத்தைக் கொடுக்கும்போது அதிருப்தியோடு கோபத்தோடு ஒருபோதும் கொடுக்கக் கூடாது. அவர் உன்னை ஆசிர்வதித்ததிலிருந்து நீ தேவனுக்குத் திருப்பி கொடுப்பது என்பது உண்மையாகவே நீ அவரை ஆராதிப்பதை நேசிப்பதை அதிகப்படுத்துவதாகும்.

2 கொரிந்தியர் 9 :7 சொல்லுகிறது அவனவன் விசனமாயுமல்ல கடடாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்பதை ஞாபகத்தில் கொள்.

கொடுக்கிற காரியத்தில் உன் இருதயத்தையும் உன் எண்ணங்களையும் பரிசோதித்துப் பார்.

உன் தசமபாகத்தைக் கொண்டு தேவனைக் கனப்படுத்த கீழ்படிய நீ தெரிந்துக்கொள்ளும்போது, நீ தேவனுடைய ஆசிர்வாதங்களையும் போஷிப்பின் ஆசிர்வாதங்களையும் புதிய பரவசமூட்டும் விதத்தில் அனுபவிக்க ஆரம்பிப்பாய்.

# காணிக்கைகள்

காணிக்கைகள் தசமபாகத்தை விட வித்தியாசமானது. அது உன் தசமபாகத்திற்கு அதிகமாக மற்றும் அதற்கும் மேலாக கொடுக்கப்பட வேண்டியதாகும். நீ தேவனுக்கு ஒரு விசேஷித்த காணிக்கையைக் கொடுக்கும்போது அந்த பலியைக் கொடுப்பதினிமித்தம் உனக்கு ஒரு இழப்பு ஏற்பட வேண்டும். இதுதான் தியாகத்துடன் கொடுப்பதின் பொதுக் கொள்கையாகும்.

இதற்கான உதாரணம் 2 சாமுவேல் 24ம் அதிகாரத்தில் உள்ளது. ராஜாவாகிய தாவீது ஜனங்களை எண்ணிக்கை செய்தப் பாவத்தினிமித்தம் தேவன் இஸ்ரவேல் தேசத்தின் மேல் ஒரு கொள்ளை நோயை வரப்பண்ணினார் பின்பு தாவீது மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினான். தேவனுடைய ஒரு தீர்க்கதரிசி தாவீதிடம் வந்து அர்வனா என்ற மனிதனுக்கு சொந்தமான களத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டும்படி கற்பிக்கப்பட்டான். தாவீது அர்வனாவின் போரடிக்கிற களத்தை விலைக்கு வாங்கி அதில் அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டும்படியாக அர்வனாவிடம் வந்தான். அர்வனா தாவீதிடம் பலிபீடத்தைக் கட்டுவதற்கும், மற்றும் பலியைச் செலுத்துவதற்கு தேவையான அனைத்தையும் இலவசமாக எடுத்துக்கொள்ளச் சொன்னான். அர்வனா தாவிதிற்கு முன்பு தரைமட்டும் குனிந்து அவன் பலியைச் செலுத்துவதற்கு ராஜாவிற்குத் தேவையான வழங்கீட்டுப் பொருட்கள் அனைத்தையும் கொடுப்பதற்கு முன்வந்தான். அதற்கு தாவீது அவனை நோக்கி நான் இலவசமாய் வாங்கி என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலிகளைச் செலுத்தமாட்டேன் என்றான். தாவிது அவன் வழங்கிய பொருட்கள் அனைத்திற்கும் கிரயத்தை செலுத்தி பின்பு அவன் தேவனுக்கு பலியைச் செலுத்தினான்.

ஆராதனையின் பலிகள் செலுத்துவதில் உனக்கு இழப்பு ஏதும் ஏற்படாத பட்சத்தில் அவைகள் உனக்கு அரித்தமற்றவைகளாயும் மற்றும் உண்மையற்ற ஆராதனையாகவுமே இருக்குமென்பதை நீ கண்டுக்கொள்ள வேண்டும். நீ தேவனுக்கு ஒரு பலி செலுத்தும்போது அது உனக்கு ஒரு விசேஷமான ஒன்றாக இருக்கும்படி உனக்கு ஒரு இழப்பு ஏற்படுவதோடு அது உனக்கு முக்கியமானதாக மற்றும் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

இது எப்பொழுது உண்மையென்றால் நீ தசமபாசம் மற்றும் காணிக்கைகளை கொடுக்கும்போது அல்லது உன் நேரத்தை தியாகம் செய்யும்போதுதான் உன்னுடைய நேரம் உனக்கு மிகவும் அருமையானது என்று தேவனுக்குத் தெரியும். நீ அவரை நினைக்க ஆராதிக்க அல்லது மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய ஒரு நாளில் உன் தரமான நேரத்தைக் கொடுக்கும்போது அவர் உன்னை ஆசீர்வதிப்பது மாத்திரமல்லாமல் இன்னும் அதிகமான நேரத்தை திரும்ப உனக்கு வெகுமதியாகத் தருவார். இதை அவர் எப்படிச் செய்கிறாரென்பது ஒரு இரகசியம் நான் என் வாழ்நாள் முழுவதும் தேவனுடன் வைத்துள்ள உறவின் மூலமும் மற்றும் கணக்கற்ற தனிப்பட்ட அனுபவங்களின் மூலமும் இது உண்மையென்று எனக்குத் தெரியும்.

## தேவனை ஆராதிப்பது 24 ஓ 7

தேவனை ஆராதிப்பது என்பது சபைக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டது அல்ல அதற்கு மாறாக ஆராதனை என்பது ஒரு மனோ நிலையாகும். ஆராதனை என்பது வாரம் முழுவதும் உன் இருதயத்தில் சுமந்து செல்லுகிற ஒன்றாகும் ஒரு நாளில் செய்கிற சாதாரண செயல்களில் நீ ஆண்டவரை துதிக்க முடியும் இப்படி ஒவ்வொரு நிமிடமும் ஆண்டவருடன் வைக்கும் தொடர்பைத்தான் “கிறிஸ்துவுடன் நடத்தல்” என்று நாம் குறிப்பிடுகிறோம். வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிற தேவனை ஸ்தோத்திரியுங்கள் (கொலோசெயர் 3: 17).

நீ ஒருவேளை வீட்டு வேலை செய்தாலும், பள்ளியில் வேலை செய்தாலும், வியாபார சம்பந்தப்பட்ட வேலை செய்தாலு அல்லது கைக்கு நேரிடுகிற எந்த வேலை செய்தாலும் அதை தேவனுடைய பெலத்தைக் கொண்டு நிறைவேற்ற முடியுமென்று எண்ணி உன்னால் முடிந்தவரை சிறப்பாக செய் நீ இப்படிச் செய்யும்போது நீ உண்மையாகவே ஆராதனை செய்து தேவனுக்கு மகிமையை செலுத்துவதோடு நீ ஆசிர்வதிக்கப்பட்டு மற்றும் அதற்கான வெகுமதியையும் பெற்றுக் கொள்ளுவாய்.

சூதவனுடைய வார்த்தை சொல்லுகிறது ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் என்று சொல்லுகிறது. நமக்குக் கிடைக்கிற எந்தக் காரியத்தையும் நாம் செய்யும்போது அதை ஆவியினால் செய்வதுடன் தேவனை ஆராதிக்கிற ஜீவனுள்ள பாத்திரம்என்று நினைவுகூர்ந்து செய்ய வேண்டும்.

நீ தேவன் உன்னை அதிகமாக நேசிக்கிற எஜமானென்றும், உன் போதகர் மற்றும் உன்னைக் கேட்போரின் கூட்டமென்றும் நீ நினைப்பாயென்றால் உன் வேலையை சிறப்பாக செய்வதற்கான நம்பமுடியாத ஆற்றலைப் பெற்றுக் கொள்ளுவாய் உன்னுடைய வேலையில் கடுமையாக உழைத்து, சிறப்பாக தேவனைக் கனப்படுத்தும்போது உன் வாழ்க்கையில் மேம்படுவதுடன் நீ ஆசிரிவாதத்தையும் பெற்றுக் கொள்ளுவாய் “உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும் நீதிமொழிகள் **16: 3**

# ஜெபம்

ஆராதனையைப் போல ஜெபம் என்பது நீ கோழைத்தனமாக அணுகக் கூடிய ஒன்றல்ல. சாதாரணமாக ஜெபம் என்பது தேவனுடன் பேசுவது மற்றும் நீ உன் நெருங்கிய நண்பனுடன் பேசுவது போல அவருடன் பேச முடியும்.

ஆண்டவரை ஆராதிக்க பலவழிகள் இருப்பதைப்போல ஜெபிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட வழி ஒன்று கிடையாது. உண்மையில் பலத்தரப்பட்ட நபர்கள் பலத்தரப்பட்ட காரணங்களுக்காக பலத்தரப்பட்ட வழிகளில் ஜெபித்த பல சம்பவங்கள் வேதத்தில் உள்ளது. அநேகமாக ஜனங்கள் இன்று ஜெபம் என்பது உன் முழங்காலில் நின்று கரங்களைக் கூப்பி தலையை சாய்த்து கண்களை மூடி செய்ய வேண்டுமென்ற பொதுவான கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். எப்படியிருந்தாலும் நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்பதற்கு வேதம் நமக்கு பல உதாரணங்களைத் தருகிறது.

# ஜெபிப்பதற்கான வேதத்தின் உதாரணங்கள்

தானியேல் வீட்டிலிருக்கும்போது மேல் வீட்டறையிலிருந்து மூன்று முறை முழங்காலில் நின்று ஜெபித்தான் என்று வேதம் சொல்லுகிறது தானியேல் ஜெபித்தது மட்டுமல்லாமல் அவன் தேவனுக்கு நன்றி செலுத்தி அவர் தனக்கு உதவி செய்யும்படி கேட்டான் என்றும் சொல்லுகிறது. (தானியேல் **6 :10, 11)** தன் வாழ்க்கையில் தனக்கிருந்த குறிப்பிட்ட கவலைகளுக்கு தானியேலுக்கு உதவி தேவைப்பாட்டாலும் அவன் முதலாவது நன்றியுள்ள இருதயத்துடன் தேவனை அணுகினான், அவன் நன்றி செலுத்துவதற்கு முன்பு தேவனிடத்திலிருந்து எதையும் கேட்கவில்லை.

ஆதியாகமம் 17: 3 சொல்லுகிறது தேவனுக்கு முன்பாக ஆபிரகாம் முகங்குப்புற விழுந்தான். ஆபிரகாம் முழு பயபக்தியுடனும், தாழ்மையுடனும் தேவனிடத்தில் வந்தான்.

மாற்கு 11 25,26ல் இயேசு தன் சீஷர்களை நோக்கி "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" என்று சொல்லுகிறேன். ஆதலால் நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். அவர் தம்மைப் பின்பற்றினவர்களிடம் தேவனை விசுவாசித்து விசுவாசத்தில் நிற்கச் சொன்னார்.

மற்றொரு நேரம் இயேசு தம் கண்களை பரலோகத்திற்கு நேராக ஏறெடுத்து தன் கண்களை விரிவாகத் திறந்து தம் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணினார். (யோவான் 11: 41).

ஆன்னாள் (பழைய ஏற்பாட்டில் உள்ள ஒரு தெய்வீக ஸ்திரி) தேவாலயத்திற்கு ஜெபிக்கச் சென்றபோது வேதவசனம் சொல்லுகிறது. அவள் தன் இருதயத்திலே பேசினாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது அவள் சத்தமோ கேட்கப்படவில்லை. (1 சாமுவேல் 1: 13) அவள் குழந்தைக் கேட்டதற்கான ஜெபத்திற்கு அவள் ஒரு சரீர நிலையைப் பார்த்து அல்ல ஆனால் அவள் இருதயத்தின் உண்மையைப் பார்த்துதான் பதில் கொடுத்தார்.

எப்படியிருந்தாலும் சங்கீதம் 142: 1ல் தாவீது கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிடுகிறேன் கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கெஞ்சுகிறேன் என்று எழுதுகிறான்.

ஜெபிப்பதற்கு சரியான அல்லது தவறான வழியோ இல்லையென்பதை நீ காண முடியும். நீ நின்றுக் கொண்டு அல்லது முழங்காலிட்டு உன் கண்களை திறந்தோ, அல்லது மூடியோ மற்றும் தேவனிடத்தில் பேசும்போது சத்தத்தை உயர்த்தியோ அல்லது உன் இருதயத்தில் அமைதியாகவோ அவரிடத்தில் பேசலாம். ஜெபம் என்பது ஒரே மாதிரி செய்கிற அல்லது பாரம்பரிய பழக்கம் அல்லது நிலைமை என்ற வரம்பக்குட்பட்டதல்ல. ஜெபம் உனக்கு சௌகரியமாக இருக்கவும் மற்றும் இருதயத்தின் கருப்பொருளாக இருக்கவும் இடம் கொடு.

# இப்பொழுது நீ தேவனுக்கு என்ன சொல்லுகிறாய்?

நீ ஜெபிக்கும்போது நீ அவரை எவ்வளவு நேசிக்கிறாயென்றும் மற்றும் அவர் உனக்குச் செய்த எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்லு அவரை ஆராதனை செய். சங்கீதம் 104: 4 சொல்லுகிறது. அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். நீ பெற்ற எல்லா நன்மைகளுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்து அவர் ஒருவரே துதிக்குப் பாத்திரர்.

ஒருவேளை உனக்கு எப்படி தேவனைத் துதிக்க வேண்டுமென்று தெரியாமல் இருந்தால் ஜெபத்தில் துதிகளுக்கான பெரிய உதாரணங்களாக இருக்கும். சங்கீதகளை நீ உபயோகித்து ஜெபிக்கலாம். உதாரணமாக சங்கீதம் 103ல் துதியைக் குறித்து விளக்கமாகச் சொல்லுகிற ஒன்றாக உள்ளது. இதில் சங்கீதக்காரன் தேவன் தன் பிள்ளைகளுக்கு செய்கிற அநேக காரியங்களை நினைவுக்குக் கொண்டு வருகிறான்.

நீ ஜெபிக்கும்போது உன் பாவ சிந்தனைகளை நோக்கங்களை வார்த்தைகளை மற்றும் செய்கைகளை மன்னிக்கும்படி கேள். நீ செய்த தவறை குறிப்பாக அவரிடம் அறிக்கை செய்து அவர் மகிழ்ச்சியோடு உன்னை மன்னிக்க ஆயத்தமாக இருக்கிறாரென்பதைநிச்சயப்படுத்திக் கொள். அப்போஸ்தலனாகிய யோவான் 1 யோவான் 1: 9ல் நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவாராயிருக்கிறார்.

மத்தேயு 6: 1 இயேசு ஜெபத்தைக் குறித்து போதித்ததின் ஒரு பகுதியாக உள்ளது. நமக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களை மன்னிக்கும்படி அவர் நமக்குக் கட்டளையிடுகிறார். நாம் கிறிஸ்துவை பிரதிபலிப்பதற்கு மிச்சிறந்த வழிகளில் ஒன்று நாம் மற்றவர்கள் மீது இரக்கமுடையவர்களாக மற்றும் மனதுருக்கமுள்ள இருதயமுள்ளவர்களாக இருப்பதை விருத்தி செய்து கொள்ளுவதின் மூலமாகும். நீ அறிக்கை செய்யாமலிருக்கிற வெட்கத்திற்குரியப் பாவங்களப் பயன்படுத்தி உன் சமாதானத்தை திருடுவதற்கு பிசாசானவனுக்கு உள்ள விருப்பங்களைக் குறித்து எச்சரிக்கையாயிரு. தேவன் உன்னை தண்டிப்பதற்காக இல்லை நீ அறிக்கை செய்கிற ஜெபங்கள் மூலம் உன் சொந்த பாவங்கள் மன்னிக்கப்படவும் மற்றும் மற்றவர்களுடைய பாவங்களை மன்னிக்கவும் நீ கேட்க வேண்டுமென்று அவர் உன்னை அழைக்கிறார். மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள உன் வக்கீலாகிய இயேசுவிடம் தைரியமாக சேரும்போது பிதாவிடம் சுத்தமான ஐக்கியத்தை புதுப்பித்துக் கொள்ளுகிற அனுபவத்தை பெற்றுக் கொள்ளுவதுடன் உன் இரட்சிப்பின் மகிழ்ச்சியையும் தூண்டிவிடுவாய் ஆமென்.

# விசுவாசத்துடன் ஜெபிப்பது முக்கியம்

*உன் வாழ்க்கையில் வழிகாட்டுதல் அல்லது போக வேண்டிய திசை தேவைப்பட்டால் தேவனிடத்தில் கேள் யாக்கோபு 1: 5ல் தேவனுடைய ஞானத்தை விசுவாச ஆவியுடன் நாடித் தேடுவதற்கு நாம் உற்சாகப் படுத்தப்படுகிறோம்.*

*உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருரையும் கடிந்துக்கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன் அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிப்பட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக (யாக்கோபு 1: 5, 8) நீ கேட்கும்போது தேவன் உனக்கு ஞானத்தைத் தருவார் நீ செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசிப்பது மாத்திரம்தான்.*

*ஏபிரெயர் 11: 6 சொல்லுகிறது தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். உன் வாழ்க்கையில் ஒரு தேவை இருக்குமென்றால் உன் குடும்பம் - உன் பணம் அல்லது உன் ஆரோக்கியம் தேவனுக்குத் தெரியப்படுத்து. நாம் எதைக்குறித்தும் கவலைப்படவேண்டிய அவசியமில்லையென்று வேதம் சொல்லுகிறது "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியபபடுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். (பிலிப்பியர் 4: 6, 7)*

*நீ தொடர்ந்து விடாமுயற்சியுடன் ஜெபங்களை ஏறெடுக்கும்போது தேவன் உன் விடாமுயற்சிக்கு வெகுமதி தருவார். சங்கீதம் 55: 17 சொல்லுகிறது அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன்.*

அவர் என் சத்தத்தைக் கேட்பார். விட்டு விடாதே நீ உறுதியாக ஜெபித்துக் கொண்டேயிரு. நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5: 16) உன் உறுதியான ஜெபத்திற்கு தேவன் பலன் தருவார். ஒரு கதவு தட்டப்படாமல் அது திறக்கப்பட வேண்டுமென்று நீ எதிர்பார்க்க முடியாது. ஆக இயேசு நம்மை உற்சாகப்படுத்துகிறார். “கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும், ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான் தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்தேயு 7: 7, 8) உறுதியான விடாமுயற்சியுடன் கூடிய ஜெபமானது தேவன் மீதுள்ள ஆழமான பற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் ஆண்டவர் உன் கதறல்களைக் கேட்கிறார் என்கிற தைரியத்தை அபிவிருத்தி செய்துக் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பமாக இருக்கும்.

உன் நாளைக் குறித்து உன் இரட்சகரிடத்தில் பகிர்ந்து கொள்வதுடன், நீ எப்படி உணருகிறாய் மற்றும் உனக்கு என்ன தேவையென்பதையும் அவரிடத்தில் சொல். அவருடைய உதவி தேவைப்படுகிறவர்களுக்காக அன்புக்குரியவர்கள், நண்பர்கள், உடன் வேலையாட்கள், உன் மீது அதிகாரத்திலிருப்பவர்கள், இந்த தேசத்தின் தலைவர்கள் இன்றும் உன் சத்துருக்களுக்காகவும் கூட நீ ஜெபிக்க வேண்டும். அவருடைய பிள்ளையாகிய நீ அவரிடம் பேசுவதை அவர் விரும்புவதுடன் உன் இருதயத்திலுள்ள எல்லாக் கவலைகளையும் குறித்து நீ அவரிடம் பேச வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

ஜெபத்தை இப்படியாக நான் அடிக்கடி சித்தரிப்பதுண்டு மடியில் தவழ்ந்து சென்று என் பரலோகப் பிதாவின் தோள்களில் ஏறி என் இருதயத்தில் உள்ளவைகளை உண்மையுடனும், நம்பிக்கையுடனும் அவரிடத்தில் சொல்லுவதாகும்.

தேவனுடன் நேரத்தை செலவழிப்பது அவரை ஆராதிப்பது மற்றும் அவருடன் பேசுவது புது விசுவாசியான நீ செய்யக் கூடிய முக்கியமான காரியங்கள் ஆகும். இப்பொழுதிலிருந்து பல ஆண்டுகள் கழித்து நீ அவருடன் வைக்கும் மிக நெருங்கிய உறவின் மூலம் நீ வளர்ந்து முதிர்ச்சியடைவாய். தேவனுடன் தியானம் செய்யும் நேரத்தை தடை செய்ய எந்தக் காரியத்தையும் இடையில் நீ அனுமதிக்கக் கூடாதென்று உன்னை உற்சாகப்படுத்துகிறேன் நீ அவருடைய சமூகத்தில் வந்து அவரை

ஆராதிக்கவும் ஜெபிக்கவும் முடிவு செய். அவருடைய குமாரனாகிய உன் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக நான் மறுரூபமாவேன் என்று தீர்மானம் பண்ணு. இந்த வண்ணமாக நீ அவருடைய வழிகளை உறுதியாக விடாமுயற்சியுடன் பின்பற்ற தெரிந்துக் கொள்ளும்போது உன் வாழ்க்கை ஆசிர்வதிக்கப்படும்.

அத்தியாயம் எட்டு

# ஈடுபாடு கொள்ளு

வேதத்தை வாசிப்பதும் ஆண்டவரை ஆராதிப்பதும் ஜெபிப்பதும் உன் ஆவியை போஷிப்பதற்கும் மற்றும் இயேசுகிறிஸ்துவுடன் உன் தனிப்பட்ட உறவை பெலப்படுத்த நடைமுறை வழிகள் ஆகும். இந்தக் காரியங்கள் எல்லாம் நீயாகவே செய்யக் கூடியவை. ஆனால் தனியாக நிற்பது என்பது சுலபமல்ல அல்லது ஆரோக்கியமல்ல என்று தேவனுக்குத் தெரியும் ஆகவே உனக்கு ஆதரவு இருக்க வேண்டுமென்று அவர் திட்டமிட்டிருக்கிறார்.

உண்மையில் மற்ற விசுவாசிகளுடன் நல்லுறவில் வாழ தேவன் நம்மை உண்டாக்கியிருக்கிறார். ஆகவே உன்னைப் போலவே விசுவாசிக்கிற மற்றக் கிறிஸ்தவர்களுடன் கற்றுக்கொள்ள வரை நீ ஒரு சபையைக் கண்டுபிடிக்க வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும். சரீரமாகிய விசுவாசிகளுடன் வைக்கம் ஐக்கியத்தில் சிஷத்துவம் பாதுகாப்பு, உற்சாகம் மற்றும் கவனிப்பு எல்லாம் கிடைக்கும்.

நீ இப்பொழுதுதான் கிறிஸ்துவைப் பின்பற்ற தீர்மானித்தப்படியால் ஒருவேளை உனக்கு அநேக கிறிஸ்தவ நண்பர்கள் இல்லாமலிருக்கலாம் நீ கிறிஸ்துவுக்கு சேவை செய்ய எடுத்த தீர்மானத்தினிமித்தம் உன் குடும்பத்தினர் தங்கள் உள்ளுணர்ச்சியை வெளிக்காட்டுவதின் மூலம் இந்த உலகத்தில் நீ ஒருவன் மாத்திரமே கிறிஸ்தவன் என்று நீ உணரக்கூடும். இதுதான் உன்னுடைய தற்போதைய நிலை என்றால் சோர்ந்து போக வேண்டாம். இந்த உலகம் பல மில்லியன் கிறிஸ்தவர்களால் நிறைந்துள்ளது. சபைக்கு செல்வது உன்னை உற்சாகப்படுத்தும் என்பது ஒரு காரணம் ஆகும். நீ தேவனை நேசிப்பதைப் போலவே மற்ற மக்களும் இருக்கிற ஒரு அறையில் நீ காலடி எடுத்து வைக்கும்போது சில சமயங்களில் நீ பரலோகத்தின் கணநேரத் தோற்றம் மற்றும் அங்கு உணருகிற மகிழ்ச்சியானது உன்னை திணறடித்து விடும்.

## ஏன் சபைக்கு செல்ல வேண்டும்?

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய ஜனங்கள் ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக (யாத்திராகமம் 20 :8) என்று கற்பிக்கப்பட்டார்கள் ஓய்வு நாள் என்பது ஆராதனையின் மற்றும் ஓய்ந்திருக்கிற ஒரு நாளாகும். நமக்கு சபை என்பது எவ்வளவு முக்கியமென்று தேவனுக்கு தெரியுமாதலால் அவர் நம்மிடம். அவருடைய வார்த்தையைக் கவனிக்கச் சொல்லுகிறார்.

ரூராமர் 10:17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்று சொல்லுகிறது நீ எங்கு தேவனுடைய வார்த்தையைக் கேட்க முடியும்? சபையில் தெளிவாகக் கேட்கக்கூடிய ஒரு இடம் உண்டென்றால் அது உன் போதகரின் வாய் மற்றும் உன் நண்பர்கள் மூலமே தேவன் சபைகளில் தலைமைத்துவத்தில் இருக்கும்படி பலரைத் தாலந்துகளால் நிரப்பி மற்றும் அழைத்து அபிஷேகத்திருக்கிறார். இவர்கள் நீ பெலனடைவதற்கு உதவி செய்ய உன்னை வழி நடத்த

உன்னை தேவனுடைய போதகத்தினாலும் அவருடைய வார்த்தையினாலும் நிரப்ப அங்கு இருக்கிறார்கள்.

தேவனுடைய வார்த்தையிலிருந்து பெலன், உற்சாகம் மற்றும் பயிற்சியைப் பெறுவதோடு கூட ஒரு ஸ்தல சபையில் ஈடுபாடு கொள்ளுவது ஆண்டவரை இசையுடனும், பாடல்களுடனும் ஆராதிப்பதற்கு உனக்கொரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும். வேதம் சொல்லுகிறது இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர் (சங்கிதம் 22: 3) மற்ற விசுவாசிகளுடன் சேர்ந்து ஆராதிக்கிற நேரம் உன்னைப் புதுப்பிக்கிற சமாதானம் மற்றும் மகிழ்ச்சியைத் தருகிற நேரமாக மற்றும் ஆலயத்தில் தேவனுடைய பிரசன்னம் நிரம்பியிருக்கிறதை நீ உணருகிற நேரமாக இருக்கும். இயேசு சொன்னார் “ஏனெனில் இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத்தேயு 18: 20) ஒவ்வொரு வாரமும் கிறிஸ்தவர்கள் சேர்ந்து அவருக்குத் துதியை செலுத்தும்போது தேவனுடைய இனிமையான பிரசன்னம் பல ஆலயங்களுக்குள் வரவழைக்கப்படுகிறது.

அநேக சபைகளில் ஞாயிறு பாடசாலை வகுப்புகள் உண்டு. நீ குழந்தையாக இருந்த சமயம் ஒருவேளை ஞாயிறு பள்ளியில் படித்திருக்கலாம் சிறு பிள்ளைகளுக்கு மாத்திரம் பள்ளிகள் கிடையாது. பெரியவர்களுக்கும் வேதபாட வகுப்புகள் பலத்தரப்பட்ட சிறிய ஐக்கிய குழுக்கள் உண்டு. இவைகள் உன் வேத அறிவை மற்றும் தேவனுடைய வார்த்தையை புரிந்துக் கொள்ளுதலை பெலப்படுத்தக் கூடிய மற்றும் முதிர்ந்தக் கிறிஸ்தவர்களிடம் கேள்விகளைக் கேட்கக் கூடிய, நீயாகவே தியானித்து கற்றுக் கொண்டவைகளிலிருந்து பதில்களை பெற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் மற்ற விசவாசிகளை அறிந்துக் கொள்ளகூடிய அனுபவிக்கக்கூடிய ஒரு சிறந்த நேரமாக இருக்கும்.

ஸ்தலசபையைக் கண்டுபிடிப்பது உன் நேரத்தைக் கொண்டும் உன் தாலந்துகள் மற்றும் செல்வத்தைக் கொண்டும் தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு ஒரு வழியைத் திறக்கும். தேவன் உனக்குத் தந்துள்ள திறமைகள் உன் சபைக்கு அதிக உதவியுள்ளதாக இருக்கும். உன்னுடைய தன்னார்வ சேவையை செய்ய நிச்சயமாக பல இடங்கள் உண்டு. உன் சபையானது உன் குடும்பத்தின் விரிவாக்கமாக இருக்க வேண்டும் ஏனென்றால் சபையினர் கிறிஸ்துவுக்குள் உன் சகோதர சகோதரிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படுகிற ஒரு பகுதியில் உனக்கு அதிக திறமையிருக்குமென்றால் அல்லது மகிழ்ச்சியாயிருத்தல் போன்றக் காரியத்தில் நீ எப்படி ஈடுபாடு கொள்ளமுடியுமென்று ஆண்டவரிடத்தில் ஜெபித்துக் கேட்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமரபுரியிலுள்ள சபைக்குச் சொல்லுகிறார். “ஏனெனில் நமக்கு ஒரே சரிரத்திலே அநேக அவயங்களிலிருந்தும் எல்லா அவயவங்களுக்கும் தொழில் இராதது போல அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரிரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறோம். நமக்காக அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். (ரோமர் 12 :4- 6) தேவன் உனக்கு அற்புதமான வரங்களைத் தந்திருக்கிறார் நீ அவைகளை அவருடைய மகிமைக்காக பயன்படுத்தும்போது அவர் பெருமகிழ்ச்சியடைகிறார். எளிமையாகச் சொன்னால் நாமெல்லோரும் நம்முடைய வரங்களை கிறிஸ்துவின் சரீரம் உயிர் ஆற்றல் திறம்பெற பங்களிக்கும்போது சபையானது ஆரோக்கியமாக இருக்கும்.

வாசிக்கப்படாத ஒரு பியானோ ஒரு மரச்சாமானைப் போலத்தான் இருக்கும் ஆனால் அது அழகாக மீட்டப்படும்போது அது மகிழ்ச்சியான பாடலைக் கொண்டு வருகிறது. தேவன் உன் வாழ்க்கையின் மூலம் தம்முடைய இன்னிசையை மீட்டட்டும் நீ ஊழியம் செய்வதற்கான வழிகளைக் காண்பிக்கும்படி ஜெபித்து ஆண்டவரிடத்தில் கேள்.

## நான் எப்படி ஒரு சபையைத் தெரிந்து கொள்ளுவது

ஏந்த சபைக்கு செல்லுவது ? என்று நீ உனக்குள்ளேயே கேட்டுக் கொண்டிருக்கக் கூடும் இன்று பலத்தரப்பட்ட சபைகள் பலத்தரப்பட்ட பெயர்களில் உள்ளன. எது சரியான ஒரு சபை ? சில சபைகள் ஒருவிதமாக விசுவாசிக்கிறது மற்றச் சபைகள் வித்தியாசமாக விசுவாசிக்கின்றன நீ எப்படி தெரிந்துக் கொள்ளுவாய் ?

ஜெபம்பண்ணு! நீ எந்த சபைக்குச் சென்று அவரை ஆராதித்து ஊழியம் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்பதில் உன்னை வழிநடத்த, சுட்டிக்காட்ட தேவனிடத்தில் கேள் பின்பு எங்கு ஆராதிக்க வேண்டுமென்கிற காரியத்தில் உனக்கு சமாதானத்தைத் தரும்படி தேவனை நம்பு.

இரண்டாவது முழு வேதாகமத்தையும் விசுவாசிக்கக்கூடிய ஒரு சபையை தேடு. இன்று இருக்கிற அநேக ஜனங்கள் மற்றும் சபைகள் தாங்கள் விசுவாசிப்பதை மாத்திரம் தெரிந்து கொண்டு தாங்கள் நிராகரிக்கிறக் காரியங்களை தூக்கியெறிய வேதவசனங்களை தங்களை வசதிக்கேற்றவாறு கூட்டிக் குறைத்துக் கொள்ளுகிறார்கள். 2 தீமோத்தேயு **3:16**ல் வேதம் சொல்லுகிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது.இங்கு சில வசனங்கள் என்று சொல்லப்படவில்லை. அது வேதவாக்கியங்களெல்லாம் என்று சொல்லுகிறது வேதத்திலுள்ள வசனங்களிலிருந்து எந்த வசனத்தையும் கூட்டவோ எடுத்துப் போடவோ கூடாது என்று வேதம் சொல்லுகிறது. (வெளி 22: 18, 19) நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் சுவிஷேத்தைப் பிரசங்கிக்கிற எல்லா ஊழியங்களும் வேதத்தை விளக்குகிறபோது எப்பொழுதும் சரியான பொருள் விளக்கமளிக்கிறார்களா ? என்பதுதான் அப்படி இல்லவே இல்லை. பிழை செய்யக் கூடிய மனிதர்கள், போதகர்கள் கூட சில சமயங்களில் தவறக் கூடும் ஒரு குறிப்பிட்டப் போதகர் பிரசங்கிக்கும்போது அவர் பிரசங்கிப்பது தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப்போகிறதா இல்லையா என்பதை அறிய நீ டெப்பொழுதும் பரிசுத்த ஆவியானவர் உன்னுடைய இருதயத்தில் பேச வேண்டுமென்று அவரைக் கேட்பது முக்கியமானதாகும்.

நீ தேவனுடைய வார்த்தையை வானொலி நிலையங்கள் மூலம் மற்றும் கிறிஸ்தவ தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் மற்றும் கணிப்பொறிகள் மூலம் கேட்க முடியும். பின்பு இங்கும் ஒரு நபர் வானொலி அல்லது தொலைக்காட்சியில் தோன்றுவதினால் அவர் எப்பொழுதும் சத்தியத்தைப் பேசுகிறார் என்று அர்த்தமல்ல. நான் ஏற்கனவே பகிர்ந்துக் கொண்ட வசனத்தை நினைவுகூறவும் பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் (1 யோவான் 4: 1)

# உன் விசுவாசத்தை பகிர்ந்து கொள்ளுதல்

*நீ புதிதாக இயேசுவில் கண்டுக் கொண்ட விசுவாசத்தை தேவன் உன் குடும்பத்தினருடன் மற்றும் உன் நண்பர்களுடன் அல்லது நீ கிறிஸ்தவனாக இருப்பதைக் குறித்து உன்னைக் கேட்கிற எந்த ஒரு நபரிடத்திலும் பகிர்ந்துக் கொள்ளுகிறபோது நீ ஆறுதலின் உணர்வடைய வேண்டும். வேதம் சொல்லுகிறது ''உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.* **(1 பேதுரு 3: 15)** *உன் மனோநிலையில் வாழ்க்கைமுறை மற்றும் உன் நடத்தையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உன்னைச் சுற்றியுள்ள ஜனங்கள் கூர்ந்து கவனிக்கிறபடியால் நீ ஏன் இவ்வளவு வித்தியாசமாக வாழுகிறாய் என்பதைக் குறித்து அவர்களிடம் சொல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும்.*

*தேவன் உன் வாழ்க்கையில் பரபரப்பான காரியத்தைச் செய்துள்ளார் நீ இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வரவழைக்கப்பட்டிருக்கிறதும் அல்லாமல் நீ பரலோகத்திற்கு சென்றுக் கொண்டிருக்கிறாய்.*

*ஊன் வாழ்க்கையில் தேவன் செய்துள்ளக் காரியத்தை யாராவது ஒருவருடன் பகிர்ந்து கொள்ளுவதுதான் உன்னுடைய சாட்சி என்று அழைக்கப்படுகிறது. நீ எந்த ஜனங்களிடத்தில் பேசுகிறாயோ அவர்கள் ஒருவேளை இயேசுவை அறியாமலிருந்தால் எப்படி தேவனுடைய கிருபை மற்றும் இரக்கம் உன்னை இரட்சித்தது என்பதை சாட்சி பகிர்வது மிக முக்கியமாகும். உன்னுடைய உதவியைக் கொண்டு அவர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பைக் குறித்த அறிவிற்குள் வரமுடியும். நீ தைரியமாக தேவக்கிருபையை பகிர்ந்துக் கொண்டதினிமித்தம் யாரோ ஒருவர் நித்தியக்-காலமாக பரலோகத்திலிருப்பதை நினைத்து பார்ப்பது எவ்வளவு அற்புதமான காரியம்.*

*உன்னுடைய சாட்சியை பகிர்ந்துக் கொள்ளுவது நீ செய்யக்கூடிய ஒரு நல்லக் காரியமல்ல. அது மகிழ்ச்சியுள்ள கடமையாகும். இயேசு தம்முடைய சிஷர்களிடம் தம்மைக் குறித்து உலகமெங்கும் அறிவிக்கச் சொன்னார். இப்பொழுது உன் பாவங்களை மன்னிக்கும்படி கிறிஸ்து மரித்தாரென்றும் பரலோகில் அவரோடு இல்லாத நரகத்திற்கு பதிலாக பரலோகில் அவருடன் கூட இருக்கும் நித்தியஜீவனைப் பரலோகில் தருகிறாரென்றும் இப்பொழுது நீ அறிந்திருப்பதினால் நீ இந்த நற்செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறாய். இந்த சத்தியத்தை உனக்குள்ளேயே வைத்துக் கொண்டிருப்பது ஒரு பெரிய சேதத்தை விளைவிக்கும்.*

புற்றுநோயை சுகப்படுத்துவதற்கான திருப்பு முனையைக் கண்டுப்பிடித்தப் பின்பும் டாக்டர்கள் அந்தத் தகவல்களை தங்களுக்குள்ளேயே வைத்துக் கொண்டால் என்ன சம்பவிக்குமென்பதை நீ சிந்தித்துப் பார்க்க முடிகிறதா ? டாக்டர்கள் மௌனம் சாதித்திருந்தால் அந்த மருத்துவக் கண்டுபிடிப்பினிமித்தம் கிடைத்த பயனை பெறவேண்டிய அநேக மக்கள் அழிந்து போயிருப்பார்கள். உண்மை என்னவென்றால் தேவனுடைய கிருபை என்பது நோயைத் தடுக்கும் ஊசிகளைக் காட்டிலும் அல்லது குணமடைவதைக் காட்டிலும் பெரிய செய்தியாகும். அவருடைய இரட்சிப்பின் செய்தியே இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு நபரையும் இருதியாக குணமாக்கக் கூடிய மருத்துவம் ஆகும்.

# சுவிஷேசமாகிய நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல்

ஏதாவது ஒரு காலக்கட்டத்தில் எல்லோருடைய வாழ்க்கையும் ஒரு முடிவுக்கு கடந்து வரும் எப்படியிருந்தாலும் ஒரு சிலரே தங்களுடைய ஆவி நித்திய நித்தியமாக வாழுமென்று சம்மதித்து ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

நித்தியம் என்பது தெரிந்துக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல இரண்டில் எதுவாக இருந்தாலும் யாரோ ஒருவர் அந்த நித்தியத்தை பரலோகத்தில் செலவிடுவதற்கு சாத்தியக் கூறான எல்லாவற்றையும் இயேசு செய்து முடித்து விட்டார். ஆனால் அவருடைய பிள்ளைகளான நம்மிடத்தில் இந்த நற்செய்தியை இந்த உலகத்திற்கு அறிவிப்பதற்கான பொறுப்பை விட்டிருக்கிறார்.

சுவிசேஷம் என்கிற வார்த்தைக்கு நற்செய்தி என்று அர்த்தம் மற்றும் சுவிசேஷம் என்பது தேவனுடைய வார்த்தையாகிய உற்சாகப்படுத்துதல் மற்றும் நம்பிக்கை என்பதாகும் வேதாகமம் சரித்திரத்தை அடக்கியுள்ள பதிவேடு மட்டுமல்லாமல் அத்துடன் ஜனங்களுடைய போராட்டங்களுக்குரிய பதில்களையும் அதைக் காட்டிலும் அதிகமானவைகளைக் கிடைக்கச் செய்கிறது.

# விசேஷித்த ஒப்படைத்தல்

நீ உன் நண்பனுக்கோ அல்லது ஒரு குடும்ப நபருக்கோ கடிதம் எழுதும் போது நீ தெளிவாக குறித்துள்ள விலாசத்தில் அதை அவர்கள் கொண்டுபோய் ஒப்படைப்பார்களென்று நம்பி அந்தக் கடிதத்தை தபால் அஞ்சல் நிலையத்தின் கையில் நீ ஒப்படைக்க வேண்டும் நீ எழுதியுள்ள வார்த்தைகள் அநேகமாக விசேஷித்த செய்தியாகவும் ஒரு நோக்கத்துடனும் எழுதப்பட்டதாக இருக்கும் ஒருவேளை அந்தக் கடிதம்போய் சேராமல் இருந்தால் ஒருவேளை அஞ்சல் நிலையம் அதைக் கொடுக்க மறந்து போயிருந்தால் அல்லது உன் கடிதத்தை ஒப்படைக்காமலிருக்க நினைத்திருந்தால் அது எவ்வளவு பெரிய ஏமாற்றமாக இருக்கும்.

அதே வண்ணமாக இந்த உலகத்திற்கு ஒப்படைக்க தேவனிடத்தில் ஒரு கடிதம் இருக்கிறது அவருடைய வார்த்தையை அதில் உள்ளடக்கி வைத்துள்ள சுவிசேஷச் செய்தியையும் அவர் நம்மிடம் நம்பிக்கையாக ஒப்படைத்துள்ளார் தபால் கடிதங்களை சுமந்து செல்லுகிற வாகனத்தைப் போல நாமும் இயேசுவைக் குறித்த நற்செய்தியை இந்த உலகத்திற்கு ஒப்படைக்க நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் இதை தேவன் நாம் விரும்பி தெரிந்துக் கொள்ள தரவில்லை இந்த சுவிசேஷத்தை பகிர்ந்துக் கொள்ள நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும் சமயம் வாய்த்தாலும் சமயம் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு (2 தீமோத்தேயு 4: 2)

ஒருவேளை உனக்கு ஞாபகம் வந்தால் உன் நண்பர்கள் நான் யார் என்பதை அறிந்துக் கொள்ளட்டும் என்று அவர் சொல்லவில்லை என் குமாரனாகிய இயேசுவைக் குறித்து மற்றும் அவர்களுக்காக அவர் செய்த எல்லாவற்றையும் குறித்து உன் குடும்பத்தாருக்கு நீ சொன்னால் நான் உன்னை மெச்சிக்கொள்ளுவேன் என்று அவர் சொல்லவில்லை. உனக்கு அதிக அசௌகரியம் ஏற்படாத பட்சத்தில் சுவிசேஷத்தை உன் உடன் வேலையாட்களோடு பகிர்ந்துக் கொள்வாயா ? என்று அவர் கேட்கவில்லை. உண்மையில் நாம் புறப்பட்டுச் சென்று சகல ஜாதிகளையும் சிஷராக்க வேண்டுமென்பதை தம்முடைய வார்த்தையில் மிகத் தெளிவு படுத்தியுள்ளார். அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாக இயேசுவும் சிஷர்களை நோக்கி நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் கிறிஸ்தவ சிஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்து அவர் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டுமென்றார் (மத்தேயு 28: 19, 20) இதுவே நம்

தேவன் ஒரு வெளிநாட்டிற்கு சென்று அங்குள்ள மக்களுக்கு சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ள உன் இருதயத்தில் ஒரு விருப்பத்தை தூண்டி விட்டாலும். இந்த வசனமானது உன்னை உலகத்தின் எல்லா தேசங்களுக்கும் செல்லுவதற்கு உனக்கு கட்டளை பிறப்பிக்கவில்லையென்பதை தயவுசெய்து புரிந்து கொள்ள வேண்டும். உனக்கு உன் சொந்த வட்டத்தில் நண்பர்கள் குடும்பத்தினர் இருந்தாலும் அவர்களில் ஒருவருக்கும் உன்னைப்போல தாக்கத்தை உண்டுபண்ணும் ஆற்றல் கிடையாது. இந்த ஜனங்களே உனக்கு முக்கியமானவர்கள். நீ மற்றவர்களுக்கு கிறிஸ்துவை அறிவித்த பின்பு அவர்கள் மற்றவர்களுக்கு அதை அறிவிப்பார்கள். அவர்களும் மற்றவர்களுக்கு அறிவிப்பார்கள். இப்படி முழு உலகமும் இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்து கொள்ளும்.

எனக்கு தேவனைக் குறித்தும் வேதத்தைக் குறித்தும் அதிகமாக தெரியாததினால் என் விசுவாசத்தை பகிர்ந்து கொள்ள முடியவில்லையென்று நீ உனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டிருக்கக் கூடும். ஒரு சமாரிய ஸ்தீரியினிடத்தில் அவள் எப்படி இரட்சிக்கப்படக்கூடும் என்று இயேசு சொன்னார். அவள் வாழ்க்கை உடைந்து போயிருந்தது. ஆனால் அவள் தன் இருதயத்தை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தவுடனே தனக்கு இயேசு சொன்னதை தன் பட்டணத்திற்குள் சென்று அறிவித்தாள். அவள் சொன்ன சாட்சியினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியர் அநேகர் அவர் மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள் (யோவான் 4:39) அது ஆச்சரியப்படத்தக்க காரியமல்லவா ? அவள் கிறிஸ்தவளாகி ஒரு சில மணி நேரங்களானாலும் தேவன் மற்றவர்களை விசுவாசத்திற்குள் கொண்டு வர அவளை பயன்படுத்தினார்.

உனக்கு எது தெரியவில்லை என்பதைக் குறித்து கவலைப்பட வேண்டாம். அந்த சமாரிய ஸ்தீரியைப் போல மற்றவர்களை அவரிடம் வழிநடத்த, உனக்கு தெரிந்திருப்பதை வைத்து தேவன் உன்னை பயன்படுத்த முடியும். அவருடைய விலையேறப்பெற்ற சுவிசேஷத்தை அவர் உன்னிடம் நம்பி ஒப்படைத்திருப்பதைக் குறித்து மகிழ்ச்சி கொள். இந்த அற்புதமான ஜீவனைத் தரும் செய்தியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதற்கு பயப்பட வேண்டாம்.

ஒரு நபர் இயேசுவை தன் இரட்சகராக ஏற்றுக் கொள்ளுவதற்கு நீ காரணமல்ல என்பதை நினைவில் கொள். அது பரிசுத்த ஆவியானவரின் செயலே. இயேசுவைக் குறித்த உன் சாட்சியை சத்தியத்துடனும், கிருபையுடனும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதே உன்னுடைய கடமையாகும்.

அத்தியாயம் ஒன்பது

# யுத்தத்தில் ஈடுபடு

இந்த உலகத்தில் இரண்டு ஆவிக்குரிய சக்திகள் உண்டு. நீங்கள் அவற்றை வெளிச்சம் மற்றும் இருள் என்று சிந்தித்துக் கொள்ளலாம். நீங்கள் அவைகளை எப்படி அழைப்பீர்கள்? எளிமையாகச் சொன்னால் அவைகள் தேவன் மற்றும் சாத்தான் என்பவைகளே.

# ஆதியில் தேவன்

எல்லா தேவத்தூதர்களையும் சிருஷ்டித்தபோது அவர்களை சுய விருப்பமுடையவர்களாயும், தம்மை சேவிக்க மற்றும் தொழுதுக்கொள்ள விரும்பி தெரிந்துக்கொள்ள உரிமையுள்ளவர்களாயும் படைத்தார். லூசிஃபர் பரலோகத்தில் ஆராதனையை நடத்துவதற்கு சிருஷ்டிக்கப்பட்ட மிகவும் அழகான தேவத்தூதனாக இருந்தான் (எசேக்கியேல் 28: 13)

ஒருநாள் இந்த லூசிஃபர் கர்வத்துடன் பெருமையுடையவனானான் பரலோகத்தின் முழு கவனமும் மற்றும் வழிபாடும் தனக்குக் கிடைக்க வேண்டுமென்று எண்ணியதுடன், அதைத் தான் பெற்றுவிடலாமென்றும் நம்பினான். தேவனைத் தூக்கியெறிந்து விட்டு அவருடைய சிங்காசனத்தை எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில் மூன்றிலொரு பங்கு தேவத்தூதர்கள் தங்களைச் சிருஷ்டித்த ஆண்டவராகிய தேவனுக்கு விரோதமாக எழும்பி லூசிஃபர் பட்சத்தில் சேர்ந்தார்கள். இந்த எதிர்ப்பினிமித்தம் தேவன் லூசிஃபர் (சாத்தான்) மற்றும் அவனைப் பின்பற்றின தேவத்தூதர்களையும் (பிசாசுகள்) முடிவில்லாத தண்டனைக்காகவும் மற்றும் அகாலமான பாதாளத்தின் அக்கினிக் குழிகளில் எதிர்காலஅழிவிற்காகவும் கீழே தள்ளிவிட்டார். இந்தக் கலகத்தின் விளைவாக சாத்தானுடன் உள்ள அவனுடைய தூதர்கள் மனிதர்களை இன்றுவரைக்கும் சுறுசுறுப்புடன் முரட்டுத்தனமாக தாக்கிக்கொண்டேயிருக்கின்றனர்.

சாத்தான் மீது தேவனுக்கு 100ரூ வெற்றி உண்டு என்பதே சத்தியமாகும். பிசாசு ஏற்கெனவே தோற்கடிக்கப்பட்டவன். அவன் ஏற்கனவே தோல்வியை தழுவிவிட்டான். அவன் நித்தியத்தை நரகத்தில் செலவழிக்கப் போகிறான் சாத்தான் ஒரு பொய்யன், ஏமாற்றுகிறவன், திருடுவதும், கொல்லுவதும், அழிப்பதுமே அவனுடைய நிகழ்ச்சிநிரல் ஆகும். மறுபுறத்தில் ‘‘தாமோ நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தேன் என்று இயேசு சொன்னார். (யோவான் 10: 10 ) வெற்றி ஏற்கனவே நமக்குச் சொந்தம் என்பதை நினைவில் கொள்ளவும்.

# ஒரு ஆவிக்குரிய யுத்தம்

ஏபேசி 6: 10, 12 நம்முடைய யுத்தம் மாம்சப்பிரகாரமான யுத்தம் அல்ல ஆனால் ஆவிக்குரிய ஒன்று என்று தெளிவாகச் சொல்லுகிறது. ஆவிக்குரிய மண்டலத்தில் தொடுக்கப்படவேண்டிய ஒரு யுத்தம்.

*கடைசியாக என் சகோதரரே கர்த்தரிலும், அவருடைய சத்துவத்திலும், வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6: 10- 12)*

*இது ஒருவேளை விஞ்ஞான கற்பனைக்கதைத் திரைப்படத்தைப்போல இருந்தாலும் இது ஒரு உண்மையான யுத்தம் என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்துகிறேன். ஒரு ஆவிக்குரிய உலகம் உள்ளது. நீங்களும் நானும் வாசிக்கிற இந்த இயற்கை உலகம் எவ்வளவு உண்மையோ அதைப்போலவே ஆவிக்குரிய உலகமும் உண்மையானது. ஆனால் இந்த ஆவிக்குரிய மண்டலம் உங்கள் கண்களுக்கு புலப்படாத ஒன்றாக உள்ளது இந்த மண்டலத்திலிருந்து உன் ஆத்துமாவில் ஒரு பெரிய யுத்தம் சீறி எழுகிறது. ஆனால் நீ இயேசுவின் நாமத்தினால் கூப்பிட்டப்போது தேவன் அந்த யுத்தத்தில் ஜெயம் கொண்டார். நீ உன்னுடைய பாவங்களை மன்னிக்கும்படி அவர் உன் இருதயத்தில் வரும்படி இயேசுவைக் கேட்டபோது அதை அவர் அப்படியே செய்தார் இப்பொழுது இயேசு உனக்குள் வாசம் செய்கிறார். தேவன் உன்னை இருளின் அந்தகாரத்தினின்று விடுதலையாக்கி தனது அன்பின் குமாரனுடைய இராஜ்ஜியத்திற்கு உட்படுத்தியிருக்கிறார். (கொலோசெயர் 1: 12 - 14)*

## உள்ளேயிருக்கும் வல்லமை

*பரிசுத்த ஆவியானவர் உனக்குள் வாசம்பண்ணுவதுடன் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தம் உன் பாவங்களை மூடிவிடுகிறது. இயேசு தம் இரத்தத்தைக் கொண்டு உன் ஜீவனை விலைக்கு வாங்கியிருப்பதுடன் அவருடைய ஆவியையும் உனக்குள்ளாக வைத்துள்ளார். நீ அதிக சாத்தியமான விலைக்கிரயத்தைக் கொண்டு விலைக்கு வாங்கப்பட்ட தேவனுடைய சொத்தாக இருக்கிறாய். தேவனுடைய பரிசுத்த ஆவியின் முத்திரை உன் மீது இருக்கிறபடியால் ஒருநாள் ஆண்டவர் திரும்பிவரும்போது அவர் உன்னை தன்னுடையவன் என்று உரிமை பாராட்டுவார்.*

*ஆப்போஸ்தலர் 20 : 28ல் தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே*

சம்பாதித்துக் கொண்ட தமது சபையென்று வேதம் சொல்லுகிறது இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்ததின் மூலம் கடைசி விலைக்கிரயத்தை செலுத்திக் தீர்த்தார் கட்டுப்பாட்டுகளோடு வரம்புக்குட்பட்ட சபைக்காக தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை பாடுபட, மரிக்க அனுமதித்திருக்க மாட்டார். எந்தவகையிலும் இல்லவே இல்லை.

ஹியேசுவின் வல்லமை உனக்குள் இருப்பதால் உனக்கு சத்துருவின் வல்லமை மீது 100ரூ வெற்றி உண்டு என்பதை நீ தெளிவாக அறிந்துக் கொள்ள வேண்டும். இயேசுவின் நாமத்தைச் சொல்லும்போது இப்பூமியிலுள்ள மற்றும் பூமியின் கீழுள்ள எல்லா பிசாசுகளும் நடுங்குகின்றன. எப்படியிருந்தாலும் தேவனுடைய பிள்ளையாக இருப்பதினால் சாத்தானுடைய சக்திகள் உன்னைத் தனியாக விட்டுவிடுமென்று அர்த்தம் கிடையாது. அதற்கு மாறாக நீ அவனுடைய இறுக்கமான பிடியிலிருந்து தப்பிவிட்டப்படியால் எப்பொழுதும் இருந்ததை விட அவன் இப்பொழுது மிகவும் ஆக்ரோஷத்துடன் இருக்கிறான். ஒருகாலத்தில் நீ அவனுடன் நரகத்தில் நித்தியத்தைக் கழிக்க அவனுடன் கட்டப்பட்டிருந்தாய். ஆனால்இப்பொழுதோ நீ பரிபூரண ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும் அன்பின் தேவனுடன் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும் உரிமைப் பெற்றுள்ளாய்.

உன்னை சோதிக்க, உனக்கு ஆசைக்காட்டி பாவம் செய்வதற்கு இணங்கவைக்க மற்றும் உன்னை ஏமாற்ற சாத்தான் உனக்கு விரோதமாக வருவதற்கு முயற்சி செய்வான். உன் வாழ்க்கையை, உன் குடும்பத்தை, உன் திருமணத்தை, உன்னுடைய வேலையை அல்லது உன்னுடைய பணத்தை திருட சாத்தான் முயற்சி செய்வதை நீ கண்டு கொள்ளும்போது விசுவாசிகள் என்ன செய்ய வேண்டுமென்பதை யாக்கோபு அறிவுறுத்தியுள்ளாரோ அதை நீ செய்ய வேண்டும். ‘‘ஆகையால் தேவனுக்குக் கீழ்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் (யாக்கோபு 4 :7) பிசாசை சத்தமாக அதட்டி இயேசுவின் நாமத்தில் ஓடிப்போகும்படி அவனுக்குக் கட்டளையிட வேண்டும். உன் மீதியுள்ள வாழ்க்கையில் ஆவிக்குரிய யுத்தங்கள் உண்டாகும் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் விலைக்கிரயம் செலுத்தினபோது தேவன் யுத்தத்தில் சாத்தான் மீது வெற்றி சிறந்தார். இந்த உலகத்திலிருப்பவனை விட உனக்குள் இருப்பவர் பெரியவராக இருப்பதினால் (1 யோவான் 4: 4) சத்துருவினுடைய வல்லமையின் மிரட்டுதலைக் கண்டு ஒருபோதும் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

சீலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்

(மத்தேயு 18: 18) என்று இயேசு வாக்குப் பண்ணுகிறார் இயேசுவின் நாமத்தில்உனக்கு விரோதமாக உன் குடும்பம் மற்றும் உன் வாழ்க்கையின் சூழ்நிலைகளுக்கு (அது எதுவாக இருந்தாலும்) விரோதமாக வருகிற ஆவிக்குரிய அந்தகார வல்லமைகளைக்கட்ட உனக்கு அதிகாரம் உண்டு.

இதுதான் ஆவிக்குரிய யுத்தம் என்பதாகும். அவர் நமக்குத் தந்துள்ள ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டும் மற்றும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் கொண்டும் அந்தகார வல்லமைகளைக் கட்டுவதாகும்.

ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் என்பது உள்ளூர் காவல் அதிகாரி வைத்திருப்பதைப் போன்றதாகும். அவருக்கு இருக்கிற அதிகாரம் போதவில்லையென்றால் அவருக்குப் பின்னால் முழு காவல்துறையும் துணையாக நிற்கும். அதுவும் போதாதென்றால் மாநில சட்ட கட்டாயத்துறை பின்னால் இருந்து ஆதரிக்கும் இன்னும் கூடுதல் சக்தி தேவையென்றால் முழு அமெரிக்க இராணுவப்படையும் உள்ளூர் அதிகாரிக்கு துணை நிற்கும். ஒருவேளை நீ ஒரு தனி விசுவாசியாக இருக்கலாம். ஆனால் நீ சந்திக்கிற ஒவ்வொரு சோதனையிலும் ஒவ்வொரு ஆவிக்குரிய யுத்தத்திலும் நித்திய தேவனுடைய வல்லமை உனக்கு பின்பாக இருந்து உதவி செய்யும்.

## வியாதியின் மேல் வெற்றி

நாம் ஆவிக்குரிய உலகத்தில் துரைத்தனங்களையும், ஆதிகாரங்களையும் கட்டிவிட்டப் பின்பு தேவனுடைய ஆவியை நாம் சந்திக்கிற அந்த சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகள் மீது அவிழ்த்து விட வேண்டும்.

நான் உங்களுங்கு ஒரு உதாரணத்தைக் கொடுக்கட்டும் ஒருவேளை நீ ஒரு வியாதியோடு கூட இருக்கலாம். எங்கிருந்து வியாதி வருகிறது? அது சாத்தானிடத்திலிருந்து வருகிறது ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு கீழ்படியாமல் பாவம் செய்தபோது சாபத்தின் விளைவாக இந்த உலகத்தில் வியாதி வந்தது. தேவன் நாம் ஒருபோதும் பாவம் வியாதி மரணத்தைஅனுபவிக்க வேண்டுமென்று திட்டமிடவில்லை.

ஆனால் ஆதாமும், ஏவாளும் தங்களுடைய சுயவிருப்பத்தை உபயோகப்படுத்தி விலக்கப்பட்ட நன்மை தீமை அறியத்தக்கக் கனியை புசித்து தேவனுக்குக் கீழ்படியாமல் போனபோது அவர்கள்

இந்த உலகத்தில் பிறக்கிற ஒவ்வொரு மனிதன் மற்றும் ஸ்தீரியின் மேலும் சாபத்தை வருவித்து விட்டார்கள். அதின் விளைவாக பாவம், வியாதி மற்றும் மரணம் உலகத்தில் பிரவேசித்தது, தேவன் நம்மை அந்த நிலைமையிலேயே விட்டு விடாமலிருந்ததற்காக தேவனுக்கு நன்றி! நாம் ஜீவனை மறு உலகத்தில் மாத்திரமல்ல இந்த உலகத்திலும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அவர் தம்முடைய குமாரனை பாடுபடவும், மரிக்கவும் அனுப்பினார். இயேசு சர்வலோகத்தின் பாவங்களையும் தம்மீது சுமந்து கொண்டு மனிதனுடைய பாவத்தின் தண்டனைக்குரிய விலைக்கிரயத்தை செலுத்தித் தீர்த்தார்.

ஆகையால் நீ என்ன செய்ய வேண்டும் ?

1, இயேசுவின் நாமத்தினால் வியாதி, நோயின் ஆவிக்கு எதிர்த்து நிற்க வேண்டும். பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொண்டு உன்னுடைய வாழ்க்கையில் உள்ள வியாதியின் ஆவியின் மீது அல்லது இவ்வுலகில் உள்ள மற்ற நபரின் மீதுள்ள ஆவியைக் கட்ட வேண்டும்.

2, வான மண்டலத்திலுள்ள வியாதி, நோயின் ஆவியை கட்டிப்போட தேவனிடத்தில் கேள்.

3, உன்மீது சுகத்தை அவிழ்த்து விடு உன் சரீரத்தில் ஜீவன் கிடைக்கும்படியாக உனக்குள் வாசம்பண்ணும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஆவியை அவிழ்த்து விடு ரோமர் 8 11 சொல்லுகிறது அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.

4, தேவனிடம் உன் சரீரத்தின் மீது சுகத்தை அவிழ்த்து விடும்படி கேள் ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி நாம் கட்ட அவிழ்க்க வேண்டியதைக் குறித்து இயேசு கற்பித்துள்ளார். நாம் பூமியில் எவைகளைக் கட்டுகிறோமோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் மற்றும் நாம் பூமியில் எவைகளைக் கட்டவிழ்க்கிறோமோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் இந்த வசனத்தை நினைவுகூர வேண்டியது அவசியம்.

தேவன் எப்பொழுதும் ஒரு அற்புத சுகத்தைக் கொண்டு வரமாட்டார் நாம் அவரை அதிகமாக சார்ந்துக் கொள்ளும்படி நம்முடையத் துன்பங்களை

அவர் பயன்படுத்திக் கொள்ளுகிறார் இயேசுவை தங்கள் இரட்சகராக அறிந்திருக்கிற ஒவ்வொருவரும் நிச்சயமாக சுகத்தை அனுபவிக்க முடியும் சில நேரங்களில் சுகம் உடனடியாக இருக்கும் சில சமயங்களில் நீண்ட காலம் இருந்து பின்பு பரலோகில் எல்லா வியாதிகளும் ஒழிக்கப்படும்.

நீ உடனடியாக சுகத்தை அனுபவிக்காமலிருந்தால் விசுவாசத்துடன் ஆண்டவரிடத்தில் கட்டாயப்படுத்து.

நீ வெற்றியின் குழுவில் இருக்கிறாய்

பயப்படாதே தேவன் உன் பட்சத்திலிருக்கிறார் அவர் உனக்குள்ளும் வசிக்கிறார். நீ அனுமதிக்காதப் பட்சத்தில் ஒன்றும் உன்னை சேதப்படுத்த முடியாது. தேவன் உன்னைக் கிறிஸ்துவைப் போல அதிகமாக மாற்றுவதற்காகவேயொழிய மற்றப்படி துன்பங்களை உன் வாழ்க்கையில் வர அனுமதிக்க மாட்டார் வேதம் நம்மை ஞாபகப்படுத்துகிறது

> சோதிக்கப்படுகிற எவறும் தான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல. ஒருவனையும் அவர் சோதிக்கிவருமல்ல அவனவன் தன் தன் சுய இச்சையினால் இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக்கோபு 1: 13-15)

நீ இடம் கொடுக்காதப் பட்சத்தில் ஒரு சோதனையும் உன்னை மேற் கொள்ள முடியாது.

மற்றும் நீ தனியாக யுத்தம் செய்ய வேண்டியதில்லை என்பதை நினைவில் கொள். அப்படி நீ முயற்சி செய்தால் நீ நிச்சயமாக தோற்றுப் போவாய். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு என்று பவுல் சொல்லுகிறார் (பிலிப்பியர் 4: 13)

நீ மயக்கத்தினால் இழுக்கப்படும்போது வெளியே வருவதற்கான ஒரு வழியை கண்டுக்கொள். அவர் நீ வெளியே வருவதற்கான ஒரு வழியை எப்பொழுதும் உண்டாக்குவார் என்று தேவன் வாக்குப் பண்ணுகிறார். மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். உங்கள்

திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடம் கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரிந்தியர் 1: 10-13)

நீ பிரகாசிக்கிற செவ்வொளி வெளிச்சத்தில் வெளியே வந்து விடலாமென்று எதிர்பார்க்க வேண்டாம் அல்லது தேவன் விசித்திரமான விதத்தில் உன்னை வேறொரு இடத்திற்குக் கொண்டு செல்லுவார் என்றும் எண்ண வேண்டாம். எப்பொழுதும் சோதனையை விட்டு வெளியே வர நீ தைரியமாக இல்லை என்று சொல்ல வேண்டும் சோதனையை எதிர்த்து நிற்பதற்கான தேவையான பெலத்தை தேவன் உனக்குத் தந்தருள்வார். அவருடைய பெலத்தை நீதான் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நீ ஒரு ஆவிக்குரிய யுத்தத்தில் இருக்கிறாய் ஆக நீ உன்னை எப்படி காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று கற்றுக் கொள்ள வேண்டும். மற்ற எல்லா யுத்தங்களைப் போலவே நீ உன்னை காப்பாற்றிக் கொள்ள ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தை மற்றும் உன்னுடைய ஆயுதங்களையும் அணிந்து கொள்ள வேண்டும். நாம் எப்படி நம்முடைய இருதயங்களையும், மனங்களையும் கிறிஸ்துவுக்காக காவல் காக்க வேண்டுமென்று பவுல் ‘‘சர்வாயுதவர்க்கம்’’ மற்றும் யுத்தம் என்கிற பதங்களை உருவகமாக பயன்படுத்துகிறார்/ எபேசியர் 6ம் அதிகாரம் அழுத்தமாக அறிவிக்கிறது.

> ‘‘ஏனெனில் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள, பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால் தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும், திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்றும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். ஹிரட்சண்ய மென்னும் தலைச்சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின்

பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள் (எபேசியர் 6: 12-18)

ஊன்னுடைய ஆத்துமாவிற்காக ஆவிக்குரிய மண்டலத்தில் ஒரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீ தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை மற்றும் ஆவியின் பட்டயத்தை (தேவனுடைய வசனம்) இயேசுவின் நாமத்தில் எடுக்கும்போது நீ எப்படிப்பட்ட விரோதியையும் எதிர்த்து நிற்க முடியும். சும்மா உட்கார்ந்துக் கொண்டு உன்னிடத்தில் சத்துரு வருவதற்கு காத்திருக்க வேண்டாம். ஆவிக்குரிய மண்டலத்தில் தற்பாதுகாப்பிற்கான யுத்தம் செய்ய வேண்டாம் சத்துரு உன் வாழ்க்கை என்கிற கட்டிடத்தை கிழித்து துண்டு துண்டாக்கும்போது நீ எதிர்க்காமல் செயலற்ற நிலைமையில் அதைப் பார்த்துக் கொண்டிருக்க கூடாது. அதற்கு மாறாக எதிர்த்துத் தாக்குதல் நடத்த வேண்டும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் முன்னேறி கடுமையாக தாக்க வேண்டும்.

# ஆவிக்குரிய யுத்தம்

அநேக சமயங்களில் சத்துரு உன்னையோ அல்லது உன் குடும்பத்தையோ தாக்க முயற்சி செய்யும்போது ஆவிக்குரிய யுத்தங்கள் இயற்கை உலகத்தில் தெளிவாக வெளிப்படுகிறது. அப்படி சம்பவிக்கும்போது இயேசுவின் நாமத்தில் உறுதியாக நில் சத்துருவினுடைய வல்லமையின் மேல் அதிகாரம் எடு.

நீ ஒரு யுத்தத்தில் இருக்கிறாய் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. கேள்வி என்னவென்றால் நீ யுத்தம் செய்ய விரும்புகிறாயா? இயேசு கூறுகிறார் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள் (மத்தேயு 11: 12) தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு ஆவிக்குரிய ஆக்ரோஷத்துடன் உன் வாழ்க்கையைத் தாக்குகிற சக்திகளை சந்திப்பதற்கு இதுவே சரியான நேரம். இயேசு நாம் இந்தப் பூமியிலும், ஆவிக்குரிய யுத்தங்கள் நடைபெறுகிற வானமண்டலங்களிலும் கட்டுவதற்கும், கட்டவிழ்ப்பதற்கும் இயேசு நமக்கு அதிகாரத்தைத் தந்திருக்கிறார்.

ஜெபத்தின் மூலம் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட இதுவே சரியான நேரம்.

உனக்கு விரோதமாகவோ அல்லது உன் குடும்பத்திற்கு விரோதமாகவோ வருகிற எந்த அந்தகார ஆவியானாலும் அதைக் கடிந்துக் கொண்டு உனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டும் இயேசுவின் நாமத்தினாலும் அதைக் கட்டிப்போடு நீ அதிகாரம் பெற்ற பிரதிநிதியாக இருக்கிறாய்.

யுத்தத்தின் குறிப்பிட்ட இடத்தைக் குறித்து தெளிவாக இரு. அந்தத் தாக்குதல் ஒருவேளை உனக்கு விரோதமாகவோ அல்லது உன் குடும்பத்திற்கு விரோதமாகவோ இருக்குமென்றால் இயேசுவின் நாமத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மற்றும் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தின்படி என்னுடைய வாழ்க்கையை மற்றும் எனக்கு அருமையானவர்களின் வாழ்க்கையை விட்டு வெளியே போ என்று பிசாசை அதட்ட வேண்டும். அதற்கு பின்பு தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். பிசாசு அவ்வளவு சுலபமாக விட்டுக்கொடுக்க மாட்டான். ஆனால் நமக்குப் பெரிய வல்லமை இருக்கிறது. தேவனிடத்திலிருந்து வெற்றியை பெற்றுக்கொள்ளும்வரை தொடர்ந்து ஜெபித்து கொண்டேயிரு.

லூக்கா 10: 19 இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தாது என்று இயேசு சொல்லுகிறார்.

இனிமேல் நீ உன் சொந்த பெலத்தில் வாழ்க்கையின் போராட்டங்களை கையாள வேண்டிய அவசியமில்லை. அதை ஒருபோதும் முயற்சி செய்ய வேண்டாம் பிசாசின் ஒவ்வொரு வல்லமையையும் முறியடிக்க தேவனுடைய பெலத்தை மற்றும் வல்லமையை மாத்திரம் சார்ந்திரு.

சில வேளைகளில் உன்னுடைய பிரச்சினைகள் புரிந்துக் கொள்ள முடியாத புதிராக இருக்கும். நீ மனச்சோர்வு அழுத்தத்தின் ஆவியை உணருவதோடு தனிமையுணர்வும் உன்னை அழுத்திக் கொண்டிருக்கலாம். இந்த ஆவிகளுடன் அதே வண்ணம் யுத்தம் செய். அவைகளின் பெயரைச் சொல்லி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவைகளைக் கட்டிப்போடு. நீ உனக்குள்ளாகவே வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களை சத்தத்தை உயர்த்தி பேசு உன் வாழ்க்கைக்காக யுத்தம் பண்ணு விட்டுவிடாதே நீ பெலவீனமாக இருக்கும்போது ஆண்டவர் உன் பெலனாக இருப்பார். பிசாசு உனக்கு விரோதமாக வந்தாலும் உனக்கு எந்தவித சேதமும் விளைவிக்க முடியாது நீ ஒரு தேவனுடைய பிள்ளை.

அத்தியாயம் பத்து

# கிறிஸ்துவின் வருகை

நம் இரட்சகரை மரணம் பிடித்து வைக்க முடியவில்லை. அவர் நரகத்தின் ஆழங்களுக்கு சென்று சாத்தானிடத்திலிருந்து மரணத்தின் திறவுகோல்களை மற்றும் சவக்குழிகளை உடைத்துப் போட்டார். மூன்றாவது நாள் மீண்டும் இயேசு உயிரோடு எழுந்தார்.

மரித்தோரிலிருந்து இயேசு உயிரோடு எழுந்தபின்பு அவர் தம் சீஷர்களுடன் இந்த பூமியில் 40 நாட்கள் பிரசங்கித்து போதித்துக் கொண்டிருந்ததுடன் அவர் தாம் யாரென்று சொன்னாரோ அதை நிரூபித்துக் காண்பித்தார்- இயேசுகிறிஸ்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்.

ஒரே ஒரு காரணம் மாத்திரமே கிறிஸ்தவத்தை மற்ற மதங்களிலிருந்து வேறு பிரிக்கிறது மற்ற தேவர்கள் எல்லாம் மரித்து இன்னும் மரித்த நிலையிலே இருக்கிறதை நீங்கள் காணமுடியும். கிறிஸ்து நமக்காக செய்த எதையும் அவைகளில் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவைகளில் ஒன்றும் மரணத்தையும் பாதாளத்தையும் வென்று உண்மையான வாழ்க்கைக்கு என்றும் பதையைக் காண்பிக்கிறது.

## இயேசு உனக்காக ஒரு நித்திய வீட்டை அயத்தம் செய்கிறார்

இயேசு பரலோகத்திற்கு திரும்பி செல்லுவதற்கான நேரம் வந்தபோது அவர் மரணத்தினூடாகச் சென்று இந்த உலகத்தைவிட்டு செல்லவில்லை. சீஷர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது (அப்போஸ்தலர் 1: 9).

அவர் மரிப்பதற்கு முன்பு இயேசு அவர்களுக்கு (யோவான் 14: 1- 4 ) ஒரு வாக்குத்தத்தம் செய்தார். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டு அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள் வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்.

அப்பொழுது இயேசுவின் சீஷர்களில் ஒருவனாகிய தோமா என்பவன் அவரை நோக்கி ஆண்டவரே நீர் போகிற இடத்திற்கு நாங்களும் நிச்சயமாக சென்றடையத் தக்கதாக நீர் போகிற இடத்தையும், வழியையும் அறியோமே என்றான். அதற்கு இயேசு நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14: 6 ) இயேசுவைப் பின்பற்றுகிற ஒரே வழியின் மூலம்தான் ஜீவனைப் பெறமுடியும்.

# ஒரே ஒரு வழி

இயேசு தம்முடைய சீஷர்களிடம் தான் அவர்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ண பரலோகத்திற்கு செல்லுவதாகவும், பின்பு மீண்டும் ஒருநாள் தாம் திரும்பி வந்து அவர்கள் தம்முடன் இருக்கும்படி அழைத்து செல்லப்பபோவதாகவும் சொல்லியிருக்கிறார். தம் மணவாட்டியாகிய திருச்சபைக்காகவும் நாம் நித்தியக்காலமாக பரலோகத்தில் வாழுவதற்கு நம்மை அழைத்து செல்லுவதற்காகவும் ஒருநாள் இயேசு இப்பூமிக்கு மீண்டும் வரப்போகிறார். அந்த நாள் வரைக்கும் நமக்கு தெளிவாக்கப்பட்டுள்ள பாதையைப் பின்பற்றுவோம் பரலோகத்திற்கு செல்ல ஒரே ஒரு வழிதான் அது இயேசுகிறிஸ்துவின் மூலம் மாத்திரமே இரட்சிப்படைய ஒரே வழியான இயேசுவின் மீது நம்பிக்கை வைத்துள்ள நமக்கு அவர் ஏற்படுத்தியுள்ள வியக்க வைக்கும் முன்னேற்பாட்டிற்காக தேவனைத் துதிக்க வேண்டும்.

# கடைசி நாட்கள்

கடைசி நாட்கள் மற்றும் "இரண்டாவது வருகை" மற்றும் சபை எடுத்துக்கொள்ளப்படுதல் போன்றக் காரியங்களைக் குறித்து ஜனங்கள் பேசுவதை நாம் கேட்கும்போது அவர்கள் இயேசு திரும்ப வருவதைக் குறித்தே குறிப்பிடுகிறார்கள். அவர் வருகிற அந்த சரியான நாளையும் நாழிகையையும் ஒருவரும் அறியார்கள். ஆனால் தேவன் தம்முடைய வார்த்தைக்கு உண்மையுள்ளவரென்பதை நாம் அறிந்திருப்பதினால் ஒரு நாள் நம் இரட்சகர் தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியே திரும்ப வருவார்.

கிறிஸ்துவின் இரண்டாவது வருகை அவர் முதல் முறை பிறந்து முன்னணையில் கிடத்தப்பட்டது போல இருக்கப் போவதில்லை. அவருடைய வருகை பரலோக மகிமையோடு கூட எக்காள தொனிகளுடன் தம் பிள்ளைகளுக்காக வெற்றியுடன் வருகிறதாக இருக்கும். இந்த நாளைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 4 : 17ல் ஏனெனில் கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதானதூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.

இந்த நற்செய்தியைக்கொண்டு நாம் ஒவ்வொருவரையும் தேற்ற வேண்டுமென்று பவுல் நம்மை உற்சாகப்படுத்துகிறார். சில நேரங்களில் வாழ்க்கையென்பது கடினமாக இருக்குமென்பதை நான் அறிவேன். நாம் எதிர்காலத்தில் நித்திய வீட்டிற்குள் பிரவேசிக்கப் போகிற உளக்காட்சியை விருத்தி செய்து கொள்ளுவது முக்கியமானதுமன்றி அதை ஆர்வத்தோடு எதிர்நோக்கும்போது நாம் இப்பொழுது இயேசுவுக்காக சரியாக வாழுவதற்கான ஆறுதலையும் பெலனையும் கண்டுக் கொள்ளுவோம்.

பவுல் தன் நிருபத்தை வாசிக்கிறவர்களுக்கு ஆண்டவர் வரப்போகிற நாளில் பயப்படவேண்டிய அவசியமில்லை என்று தெசலோனிக்கேயருக்கு எழுதின மீதியுள்ள நிருபத்தில் உறுதிப்படுத்துகிறார். 1 தெசலோனிக்கேயர் 5: 9, 10 வசனங்களில் அவர் “தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார். நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும் தம்முடனே கூட நாம் ஏகமாய் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தார் என்று தெளிவாகக் கூறுகிறார். பவுல் தன் நிருபங்களை வாசிக்கிறவர்களிடம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் ஒரே கருத்து அவர்கள் மனதை ஆட்டிப் படைப்பதினால் இன்றைக்காக வாழுவதை விட்டு விடக்கூடாது என்று வற்புறுத்துகிறார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஆண்டவர் திரும்பி வரப்போகிற நாளைக் குறித்து நிச்சயமாக பரவசமடைகிறோம். அது வரைக்கும் பவுல் இவ்வுலகத்தில் பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக் கடவோம் என்று விளக்குகிறார். ஒவ்வொரு நாளும் நாம் முழுமையாக வாழ வேண்டும் நாளையத் தினம் நமக்கு வாக்குப்பண்ணப்படவில்லை. ஆகையால் வெளிச்சத்தையும், கிறிஸ்துவின் அன்பையும் நாம் எக்காள சத்தத்தைக் கேட்குமளவும் எப்பொழுதும் பகிர்ந்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

## ஆசீர்வதிக்கப்படு, ஆசீர்வாதமாயிரு

பரலோகத்திலுள்ளத் தேவத்தூதர்கள் உன் இரட்சிப்பினிமித்தம் களிகூருகிறார்கள். அவர்களுடன் சேர்ந்து நானும் உனக்காக நன்றி செலுத்துகிறேன். எப்படிப்பட்ட பரவசமூட்டும் ஒரு வாழ்க்கையில் நீ காலடி எடுத்து வைத்துள்ளாய் உனக்காக அற்புதமான அநேக

ஆசீர்வாதங்கள் இந்த வாழ்க்கையில் மாத்திரமல்ல, மறுமையின் வாழ்க்கையிலும் காத்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவுடன் தனிப்பட்ட நெருங்கிய உறவு வைப்பதின் அர்த்தம் என்னவென்றும் ‘‘மறுபடியும் பிறத்தல்’’ என்பதின் அர்த்தம் என்னவென்றும், மற்றும் ‘‘கிறிஸ்தவம்’’ என்றால் என்னவென்பதை உனக்கு வழிகாட்டுவதற்கு கதவு திறக்கப்பட இந்தப் புஸ்தகமானது உனக்கு உதவியாக இருக்குமென நான் நம்புகிறேன்.

சூவதப் புஸ்தகம் கொண்டிருக்கிற சில அடிப்படை ஆவிக்குரியச் சத்தியங்களை விளக்கிக் காண்பிக்க நான் முயற்சி செய்துள்ளேன். இந்தப் புஸ்தகத்திலுள்ள ஒவ்வொரு ‘‘தலைப்பு’’ அல்லது ‘‘அத்தியாயமும்’’ ஒரு தனிப் புஸ்தகமாக இருந்தால் நீங்கள் பாராட்டுவீர்களென்பது எனக்குத் தெரியும். ஆனால் இது என் நோக்கமல்ல நான் இந்த புஸ்தகமானது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுடன் உன் தனிப்பட்ட உறவை ஏற்படுத்தவும் நீ சரியான திசையில் செல்ல ஆரம்பிக்கவும் உனக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.

உன் வாழ்க்கையில் என்ன சம்பவித்தாலும் எப்பொழுதும் ஆண்டவர் மீது நம்பிக்கையை வைத்துக்கொள். அவர் உன்னை விட்டு ஒருபோதும் விலகமாட்டார். கைவிடமாட்டார் தேவன் உண்மையுள்ள தேவன் இவ்வளவு தூரம் உன்னை அழைத்து வந்த தேவன் இனிமேலும் உன்னை நடத்தி செல்லுவார்.

என் நண்பனே நி கிறிஸ்துவுடன் புதிய நடைபோட ஆரம்பிக்கும்போது நான் உனக்காக ஏறெடுக்கும் ஜெபம் என்னவென்றால்

- கிறிஸ்துவின் அன்பின் வெளிச்சம் உன் மூலம் அதிகமாக பிரகாசிப்பதினால் உன் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை ஒருவரும் மறுக்க முடியாது.

- நீ ஆண்டவருடைய மகிழ்ச்சியினால் நிறைந்து வழியவும் மற்றும் அவரிடத்திலிருந்து பெலத்தை பெற்றுக்கொள்ளவும் கற்றுக்கொள்.

- உன் இருதயம், சிந்தையை எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் நிறைக்க வேண்டும்.

- அவருடைய வியப்பூட்டும் கிருபையில் இளைப்பாற ஒவ்வொரு நாள் காலையிலும் அவருடைய இரத்தத்தினால் புத்துணர்ச்சியைப் பெற்றுக் கொள்ளவும் கற்றுக்கொள்.

- உன் வழிநடத்துதலுக்காக தேவனுடைய கரத்தை நம்ப கற்றுக் கொள்வதுடன் உன் வாழ்க்கையில் செல்லுவதற்கான திசையை அறிந்து கொள்ள அவரை நோக்கிப்பார்.

- நீ பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிரு.
- நீ நீதியின் மேல் பசி தாகத்துடன் இரு
- நீ தினமும் கிறிஸ்துவுடன் நடந்து மற்றவர்களை அவரிடத்தில் ஈர்க்கிற ஒரு வாழ்க்கை வாழ வேண்டும்.

ஏனக்கன்பான நண்பனே தேவன் அழைத்த பந்தயப் பரிசை ஜெயிக்க பலவந்தத்துடன் தொடர்ந்து செல். எல்லோரும் கிறிஸ்துவை உன்னில் பார்க்கும்படியாக நீ எரிந்து பிரகாசிக்க வேண்டும். ஒருநாள் பரலோகத்தில் உன் ஆண்டவராகிய இயேசுவின் முன் நிற்கும்போது “நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி (மத்தேயு 25 21) என்கிற உன் இரட்சகர் மற்றும் நண்பனுடைய வியப்பூட்டும் வார்த்தைகளைக் கேட்பாய் ஆமென்.

பூரார்பராவும் ( என் மனைவியும் ) நானும் என் ஊழியத்தில் உள்ள மற்ற அலுவலர்களும் கிறிஸ்துவுக்குள் நீ பெற்றிருக்கிற உன் புதுவாழ்வில் உனக்கு ஏதாவது தேவைகள் உண்டானால், உன்னுடன் ஜெபத்தில் ஒருமித்து ஜெபிப்பதற்கான சந்தர்ப்பத்திற்கு உன்னை வரவேற்கிறோம்.

நீ தொடர்ந்து கிறிஸ்துவில் வளரும்போது நாங்கள் உனக்கு எப்படி ஜெபிக்க முடியும் அல்லது எப்படி உனக்கு சேவை செய்ய முடியுமென்பதை நாங்கள் அறிந்துக் கொள்ளுவதற்கு தயவுசெய்து எங்களை தொலைபேசி மூலம் அல்லது கடிதத்தின் மூலம் அல்லது மின்னணுவியல் அஞ்சல் (ஈ மெயில்) மூலம் தயவுசெய்து எங்களைத் தொடர்புக் கொள்ளவும்.

எப்பொழுதும் நினைவில் கொள்
உனக்காக நாங்கள் இங்கு இருக்கிறோம்.

Inspiration Ministries

P.O. Box 7750

Charlotte. NC28241

1-704-525-9800

www.inspiration.org

# உன்னை உற்சாகப்படுத்த வேத வசனங்கள்

*கடந்த பல ஆண்டுகளாக தினமும் கிறிஸ்துவுக்காக வெற்றியுடன் வாழ ஆவிக்குரிய யுத்தத்தில் துணிச்சலுடன் இருக்க ஆண்டவருக்குள் உள்ள என் தைரியத்தை பெலப்படுத்துவதற்கு வேதவசனங்களை மனப்பாடம் செய்வது உதவியாக இருப்பதைக் கண்டுக் கொண்டேன். வருகிற பல மாதங்களில் கிழே தரப்பட்டுள்ள வசனங்களை நீங்கள் மனப்பாடம் செய்ய உங்களை உற்சாகப்படுத்துகிறேன். ஒரு வாரத்தில் ஒரு வசனத்தை மனப்பாடம் செய்வது பெரிய இலக்காக இருக்கும். உன் இருதயத்திலும், மனதிலும் அவருடைய வார்த்தை உட்பிரவேசிக்கும்போது தேவன் உன்னை எவ்வாறு பெலப்படுத்துகிறாரென்பதை அறிந்து நீ வியப்படைவாய்.*

## இரட்சிப்பின் நிச்சயம்

*ரோமர் **10: 9**- ‘‘என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.*

***1** யோவான் **5 :12**- குமாரனை உடையவன் ஜீவனை உடையவன் தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.*

*ரோமர் **6 :23**- பாவத்தின் சம்பளம் மரணம் தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்.*

## வார்த்தையின் வல்லமை

***2** திமோத்தேயு **3: 16, 17**- வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியைச் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துக் கொள்ளுதலுக்கும் நீதியைப் படிப்பிதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

*சங்கீதம் **119: 11**- நான் உமக்கு விரோதமாய் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.*

## மன்னிப்பு

***1** யோவான் **1: 9**- நம்முடைய பாங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

*சங்கீதம் **103: 12**- மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.*

## ஆறுதல் மற்றும் சமாதானம்

*பிலிப்பியர் **4: 6,7**- நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.*

யோவான் 14: 27- சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

## ஜெபம்

எபிரேயர் 11: 6- அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.

லூக்கா 18 :1- சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்.

பிலிப்பியர் 4: 6, 7- நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்

## நம்பிக்கை

நீதிமொழிகள் 3: 5, 6- உன் சுயபுத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

ரோமர் 8: 29- அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

## வெற்றி

ரோமர் 8: 37- இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் ன்பு கூருகிறவராலே முற்றும் செயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.

1 யோவான் 5 :4, 5 தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார் ?

## ஆராதனை

சங்கீதம் 34 :1, 3 கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும் சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள் நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.

சங்கீதம் 95: 6, 7- நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள். அவர் நம்முடைய தேவன் நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.
சங்கீதம் 16 11 உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

# அகராதி

அப்பா- தேவனை பாசத்துடன் அழைக்கும் ஒரு சொல் ஆகும் எழுத்தின்படி இதில் அர்த்தம் தகப்பனே என்பதாகும்.

வக்கீல்- மற்றோரு மீதுள்ள குற்றச்சாட்டிற்கு விளக்கமளிக்கும் ஒருவரை குறிப்பிடும் சட்டப்பூர்வமான சொல் ஆகும். இயேசு நாம் இரட்சிப்பிற்காக அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையினிமித்தம் நமது சார்பில் நாம் குற்றம்ற்றவர்கள் என்பதை பிதாவினிடத்தில் சாட்சி கூறுகின்ற வக்கீலாக இருக்கிறார்.

தேவத்தூதர்கள்- ஆவிக்குரிய ஜந்துக்கள், தேவனை அராதிப்பதில் தொண்டு செய்கிறவர்கள், முக்கியமான செய்திகளை சுமந்து செல்லுபவர்கள், மற்றும் தேவனுடைய ஜனங்களுக்கு பாதுகாப்பையும், உதவியையும் செய்கிறவர்கள்.அபிஷேகம்பண்ணப்பட்ட- பிரித்தெடுக்கப்பட்ட அல்லது பரிசுத்த அல்லது தெய்வீகப்பணியில் பயன்பட அர்ப்பணிக்கப்படுதல் இயேசுவே கிறிஸ்து ஆவார் கிறிஸ்து என்றால் ‘‘அபிஷேகம் பண்ணப்பட்டவர்’’ என்று அர்த்தம்.

பரிகாரம் செய்தல்-மூடிப்போடுதல் அல்லது கழுவித் தூய்மையாக்குதல் நம்முடைய பாவங்களை மூடக்கூடிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் மனிதனை தேவனுடன் ஒப்புரவாக்குதல்.

ஞானஸ்நானம்- பழைய வாழ்க்கைக்கு மரித்த புதிய கிறிஸ்தவனின் மரணம் மற்றும் கிறிஸ்துவுக்குள் புதிதாக பிறப்பதற்கு அடையாளமான ஒரு பரிசுத்த செயல். இயேசுவே ஆண்டவர் என்பதை அறிக்கை செய்து அல்லது கிறிஸ்துவுடன் ஐக்கியமாக இருப்பதை தெரிவிப்பதாகும்.

விசுவாசி- ஒரு நபர் ‘‘இரட்சிப்பை’’ விசுவாசத்தின் மூலம் மாத்திரம் கிருபையயின் மூலம் மாத்திரம் கிறிஸ்துவின் மூலம் மாத்திரம் கண்டுக் கொள்ளுவதாகும்.

கிறிஸ்துவின் சரீரம்- பெரிய கிறிஸ்துவ சமுதாயம் மற்றும் இதில் பங்கு வகிக்கிற சர்வ உலகத்திலும் இருப்பவர்கள்.

மறுபடியும் பிறத்தல்- இயேசுவே ஆண்டவரென்று இருதயத்தில் விசுவாசித்து வாயினால் அறிக்கை செய்வதினிமித்தம் நாம் எழுத்தின்படி ஆவிக்குரிய தண்டனையிலிருந்து (நம் பாவத்தினிமித்தம்) காப்பாற்றப்பட்டு நித்திய ஜீவனுக்குள் கடந்து வருவதற்கு அனுபவிக்கிற ஒரு ஆவிக்குரிய மறுபிறப்பாகும். நாம் மறுபடியும் பிறக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஆவியில் ஒரு புதிய ஜீவனை ஊதுகிறார். ஆவிக்குரிய பிரகாரம் கிறிஸ்து நமக்குள் பிறக்கிறார்.

கிறிஸ்தவம்- எழுத்தாளர்கள் எழுதி பதிவு செய்த வேதவசனங்கள் மற்றும் கிறிஸ்துவின் உபதேசத்தினால் உருவாக்கப்பட்ட கிறிஸ்துவுக்குள் உறவு கொண்டுள்ள ஜனம்.

கிறிஸ்தவ ஆலயம்- உலகெங்கும் கிறிஸ்துவை பின்பற்றுகிற சமுதாயம்.

ஊடன்படிக்கை- தேவனுக்கும், மனிதனுக்கும் இடையில் செய்யப்பட்டுள்ள ஒரு பரிசுத்தமான நித்திய வாக்குத்தத்தம் அல்லது ஒப்பந்தம் அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளவர்களுடன் நித்திய இரட்சிப்பை உறுதிப்படுத்தும் உடன்படிக்கையை இயேசு பாதுகாக்கிறார்.

கிறிஸ்து இயேசுவின் நாள்- இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்களை தன்னுடன் பரலோகத்திற்கு அழைத்து செல்ல திரும்பி வரப்போகும் நாள்.

பிசாசுகள்- அசுத்த ஆவிகள், லூசிஃபர் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்தபோது அவன் பட்சத்தில் சேர்ந்ததினிமித்தம் தள்ளப்பட்ட தேவத்தூதர்கள்.

சீஷன்- ஒரு போதகருடைய போதனைகளை ஏற்றுக்கொண்டு அந்தக் கருத்துக்களை பின்பற்றுகிற ஒரு நபர். நாம் இயேசுகிறிஸ்துவின் மற்றும் வேதத்தின் முழு போதனைகளையும் பின்பற்றுகிற சீஷர்கள்.

விசுவாசம்- ஆதாரம் இல்லாத உண்மையாயிருக்கிற ஒன்றை விசுவாசிப்பது, ஆவிக்குரிய மண்டலத்தில் நாம் பார்க்க முடியாத தேவன் மீது விசுவாசம் வைத்து உண்மையென ஒப்புக் கொள்ளுதல். நடைமுறையில் உன் வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் என்னவென்பதை அறிந்து அதற்குக் கீழ்படிந்து செயல்படுவதே விசுவாசம் ஆகும்.

ஐக்கியம்- மற்ற விசுவாசிகளுடன் ஒன்று சேர்ந்து ஐக்கியம் கொள்ளுதல் பொதுவாக தொழுது கொள்ளுகிற மற்றும் கொண்டாடுகிற பரஸ்பர நேரங்கள்.

மகிமை- தேவனுடைய சுடரொளி,கனம், கீர்த்தி, பிரகாசம், துதி, தனிச்சிறப்பு மற்றும் கம்பீரம் ஆகும். அவருடைய முடிவில்லாத முழு நிறைவாகும்.

சுவிசேஷம்- இயேசுவே இரட்சிப்பின் வழி என்று விசுவாசிக்கிற எல்லோருக்கும் உள்ள “நற்செய்தி”.

கிருபை- இயேசுவை இரட்சகரென்று விசுவாசிக்கிற எல்லோருக்கும் பாராட்டப்படுகிற தேவனுடைய தகுதியற்ற இரக்கம், கருணை மற்றும் ஆசிர்வாதம்.

பெரிய ஆணை -இயேசுவில் கிடைக்கும் இரட்சிப்பை மற்றவர்களுக்கு அறிவிக்க எல்லா விசுவாசிகளின் வாழ்க்கையின் மீதும் உள்ள தேவனுடைய அழைப்பு.

சுதந்திரவாளி- ஒருவர் மற்றொருவனுக்கு விசேஷமாக விரும்பித் தருகிற சொத்து,உடைமைகள் அல்லது சலுகைகளை சுதந்தரித்துக் கொள்ள உரிமை பெறுகிற அந்த நபர்.

மகா பரிசுத்த ஸ்தலம் -இந்தப் பூமியில் தேவனுடைய உடன்படிக்கை பெட்டியும் அவருடைய பிரசன்னமும் இருந்த தேவாலயத்தின் உட்பகுதியாகும். இந்த இடத்தில்தான் பிரதான ஆசாரியன் தேவனுடைய பிரசன்னத்தை உணர்ந்ததோடு ஜனங்களுடைய பாவங்கள் நிவிர்த்தி செய்யப்பட பலியை செலுத்துகிற இடம்.

பரிசுத்த ஆவியானவர்- திரித்துவத்தின் மூன்றாவது நபர் அவர் பெலப்படுத்துகிறார் போதிக்கிறார். ஆறுதல்படுத்துகிறார் மற்றும் பாவங்களை கண்டித்து உணர்த்துகிறார்.

யெகோவாயீரே -ஆண்டவராகிய தேவன் நம்மை பராமரிக்கிறவர்.

யெகோவாரஃபா- ஆண்வராகிய தேவன் நம்மை சுகப்படுத்துகிறவர்.

யெகோவாஷாலோம்- ஆண்டவராகிய தேவன் நம்முடைய சமாதானம்.

ஆட்டுக்குட்டியானவரின் ஜீவப்புஸ்தகம்- தேவனுடைய பிள்ளைகள் எல்லோருடைய பெயரும் எழுதப்பட்டுள்ள ஒரு புஸ்தகம் நியாயத்தீர்ப்பின் நாளில் இந்தப் புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்ட எல்லோரும் பரலோகத்தில் நித்தியத்திற்காக உட்பிரவேசிப்பார்கள்.

**லூசிஃபர்-** அவன் கலகம் செய்தபடியினால் தேவன் அவனை பரலோகத்திலிருந்து வெளியே தள்ளுவதற்கு முன்பு சாத்தானுடைய பெயர் எழுத்தின்படி ''விடிவெள்ளி நட்சத்திரம்''

**காணிக்கைகள்-** நம்முடைய தசமபாகத்திற்கு மேலாக நாம் தேவனுக்குத் தருகின்ற விசேஷித்த பரிசு பணம்.

**உவமை-** ஒரு ஆவிக்குரிய சத்தியத்தை போதிக்க இயேசு பயன்படுத்திய தினசரி வாழ்க்கையில் சம்பவித்த கதைகள் உதாரணங்கள்.

**ஜெபம்-** ஆராதனை, சொந்த பாவமன்னிப்பிற்காக செய்யும் வேண்டுதல் மற்றும் சொந்தத் தேவைகளுக்காக மற்றும் மற்றவர்களுடைய தேவைகளுக்காக வேண்டுதல் செய்தல் போன்றவைகளை உள்ளடக்கிய தேவனுடன் செய்யும் உரையாடல்.

**மனந்திரும்புதல்-** நம்முடைய பாவங்களிலிருந்து முழுமையாக திரும்புதல் எழுத்தின்படி ஒதுக்கித் தள்ளுதல் பாவத்தை விட்டு முகத்தைத் திருப்பி தேவனுடைய வழிகளை அணைத்துக் கொள்ளுதல் மனதில் ஏற்படும் மாற்றம்.

**உயிர்த்தெழுதல்-** மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்புவது மிக முக்கியமாக இயேசு சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் பண்ணப்பட்ட பின்பு இயேசு உயிரோடு எழுப்பபட்டார்.

**நீதியுள்ள-** நாம் இயேசுவை இரட்சகராக ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்போது நாம் நம் பாவங்களுக்கு பதிலாக இயேசுவின் நீதியை பரிமாற்றம் செய்துக் கொள்ளுகிறோம். இதின் சாரமாக நாம் இரட்சிக்கப்படும்போது தேவனுடன் சரியான உறவுடையவர்களாக மாறுகிறோம்.

**ஓய்வுநாள்-** தேவன் மனிதனுக்கு தந்த ஓய்ந்திருக்கும் ஒரு விசேஷமான நாள் இது ''கர்த்தருடைய நாள்'' என்றும் அழைக்கப்படுகிறது. ஆராதனை செய்ய மற்றும் ஓய்ந்திருக்க ஒதுக்கப்பட்ட ஒரு நேரம்.

**இரட்சிப்பு-** இயேசுவின் மரணம் மற்றும் அவருடைய பலியின் மீது நாம் வைக்கும் நம்பிக்கையின் வழிமுறையில் இரட்சிக்கப்படுவதே நாம் தேவனால் அங்கிகரிக்கப்பட மற்றும் நம்முடைய பாவங்களிலிருந்து விடுதலையாக்கப்பட ஒரே வழியாகும்.

**சாத்தான்-** தேவனுக்கு தீங்கு செய்கிற எதிரி மற்றும் ஒவ்வொரு விசுவாசியின் எதிரி.

**இரட்சகர்-** நாம் பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலையாக்கப்பட ஒரே வழி இயேசுவே.

**வேதவசனம்-** வேதாகமத்திற்குத் தரப்பட்டுள்ள மற்றொரு பெயர் அவருடைய பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்தம் மற்றும் இவைகளை தேவஆவியினால் நிரப்பப்பட்ட மனிதர்கள் எழுதினார்கள்.

**இரண்டாம் வருகை-** இயேசு மனிதர்கள் நியாயம் தீர்க்க இரண்டாம் விசை பூமிக்கு திரும்ப வரும்போது அவரைப் பின்பற்றினவர்களை பரலோகத்திற்கு நித்தியத்திற்கு அழைத்துச் செல்லுவதாகும்.

**பாவங்கள்-** தேவனுக்கு கீழ்படியாதிருப்பது.

**ஆவிக்குரிய யுத்தம்-** பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொண்டும் மற்றும் தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்தைக் கொண்டும் அந்தகார ஆவிக்குரிய சக்திகளுக்கு எதிராக யுத்தம் செய்தல்.

**சோதனை-** தவறான காரியத்தை செய்வதற்கு ஆசை காட்டி மயக்கி இழுப்பது.

**சாட்சி-** தேவன் நம்மை எவ்வளவாக நேசிக்கிறாரென்றும் அவர் நமக்காக என்ன செய்திருக்கிறாரென்பதையும் மற்றவர்களுக்கு சொல்லுவது.

**தசமபாகம்-** உன்னுடைய வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை தேவனுடைய ஊழியத்திற்காகக் கொடுப்பது.

**திரித்துவம்-** தேவத்துவத்தின் மூன்று முற்றிலும் வேறுபட்ட நபர்கள் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன் விசுவாசத்தின் பெரிய இரகசியங்களில் ஒன்று என்னவென்றால் இவர்கள் மூவரும் சமமானவர்கள்.

**தேவனுடைய வார்த்தை-** வேதாகமத்திற்குத் தரப்பட்ட மற்றொரு பெயர் பரிசுத்த ஆவியானவரின் தலைமையின் கீழ் தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டு திரட்டப்பட்ட 66 புஸ்தகங்கள் இதில் உள்ளன.

**ஆராதனை-** தேவனுக்கு வழிபாடு மற்றும் வணக்கத்தை வெளிப்படுத்துதல்.

# நூலாசிரியரைக் குறித்து



டேவிட் செருல்லோ உலகமெங்கிலுமுள்ள ஜனங்கள் தொலைக்காட்சியின் மூலம் பயன்பெறத்தக்கதாக தன்னுடைய சக்தி வாய்ந்த வியாபார திறமைகளை தனக்கு ஊழியத்தில் உள்ள பேரார்வத்துடன் ஒருங்கினைத்து தனக்கு தேவன் தந்துள்ள தரிசனத்தை நிறைவேற்ற விரும்புகிறார்.

அவர் "இன்ஸ்பிரேஷன்" ஊழியங்களை நிறுவியுள்ளார்இந்த சர்வதேச தொலைக்காட்சி ஊழியம் "சிட்டி ஆப் லைட்"தெற்கு கரோலினாவில் ஸ்தாபிக்கப்பட்டு மூன்று வித்தியாசமான தொலைக்காட்சி வலைத்தளங்கள் மூலமாக 120 தேசங்களிலுள்ள 1.2 பில்லியன் ஆத்துமாக்களை சென்றடைகிறது

தேசிய மற்றும் சர்வதேசரீதியில் தொலைக்காட்சி ஒளிபரப்பாளராக மற்றும் ஆவிக்குரிய தலைவர் என்று அங்கீகாரம் பெற்றுள்ள "டேவிட்" "நேஷனல் கேபிள் டெலிவிஷன் அஸோஸியேஷன்" மற்றும் "கேபிள் அண்ட் டெலிகம்யூனிக்கேஷன்ஸ் அஸோஸியேஷன் ஃபார் மார்க்கெட்டிங், நேஷனல் அஸோஸியேஷன் ஆஃப் டெலிவிஷன் ப்ரோகிராம் எக்ஸிகியூட்டிவ்ஸ், போன்றவற்றில் அங்கத்தினராக இருக்கிறார். மேலும் இவர் "நேஷனல் ரிலிஜியஸ் ப்ராட்காஸ்டர்ஸ் அஸோஸியேஷன்" ஸ்தாபனத்தில் நிர்வாக குழுவின் மேலாளர்களில் ஒருவராக இருந்திருக்கிறார்.

"டேவிட்" அவர் மனைவி "பார்பரா" "இன்ஸ்பிரேஷன் டுடே" என்கிற புகழ்பெற்ற தினசரி தொலைக்காட்சி நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு திருமணமாகி 36 ஆண்டுகள் ஆகிறது இரண்டு வயது வந்த பிள்ளைகள் மற்றும் ஐந்து பேரப்பிள்ளைகள் இவருக்கு இருக்கிறார்கள்.

தேவனுடைய வார்த்தையிலிருந்து போதனைகளைப் பெற தினசரி ஊழிய சம்பவங்கள் மற்றும் ஜெபவிண்ணப்பங்களைக் கொடுக்க அவர்களுடைய இணையத்தளத்திற்குச் சென்று பார்க்கவும். www.inspiration.org இணையத்தளத்திற்குச் சென்று பார்க்கவும்.